# இந்து ஒளி

தீபம் 22 சுடர் 5

HINDU OLI



"நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க"

திருவாதிரைச் சிறப்பிதழ்

விளம்பி வருடம் புரட்டாதி - மார்கழி

October - December 2018

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்

Religious Journal of All Ceylon Hindu Congress

## 16-10-2018 அன்று, பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில், அகில இலங்கை இந்து மாமன்ற அனுசரணையுடன் இந்து வித்தியாவிருத்திச்சங்கம் நடத்திய சரஸ்வதி பூசை நிகழ்வு





நிகழ்வின் பிரதம அருளாளராகிய, வண. அக்ஷராத்மானந்த சுவாமிகள் (கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர்), திரு.மா.தவயோகராஜா மற்றும் திருமதி அ.கயிலாசபிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றுகின்றனர்.




முப்பெருந்தேவியர் வழிபாடு.



சக்தி இல்ல மாணவியர் வழங்கும் இறைவணக்கம்.



மாமன்ற பொதுச்செயலாளர் திரு.வே.கந்தசாமி அவர்களின் ஆரம்ப உரை.

திரு.மா.தவயோகராஜா அவர்கள், வண. அக்ஷராத்மானந்த சுவாமிகளைக் கௌரவித்ததைத் தொடர்ந்து, சுவாமிகள் அருளுரை ஆற்றுகின்றார்.



மாமன்ற வெளியீட்டுத் தொகுதியை சுவாமிகளுக்கு திரு.வே.கந்தசாமி அவர்கள் அன்பளிப்பாக வழங்குகின்றார்.

## நுண்கலைக்கோயில் மாணவர்கள் மற்றும் சக்தி இல்ல மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்வுகள்











உ
சிவமயம்
# இந்து ஒளி
தீபம் - 22 சுடர் - 05
விளம்பி வருடம் மார்கழித் திங்கள் 08ஆம் நாள் (23.12.2018)

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே.

### திருவாசகம்

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
கண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

### திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலந்தன்னுட்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.

### திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கிரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானை தன் செய்ய பொற்பாதமே

திருச்சிற்றம்பலம்

## சைவசமயத்தை சைவமக்களே காப்பாற்ற வேண்டும்.

சைவசமயத்தவர்கள் தங்கள் சமயம்பற்றி அக்கறையும் அதிக கரிசனையும் செலுத்தவேண்டிய தேவை இப்போது அதிகரித்துள்ளது. "பலர் சமயம் மாறுகிறார்கள்; சைவக்கோயில் இருந்த இடத்தில் புத்தர் பெருமானை வைக்கிறார்கள்; சைவசமயத்தவர்களின் நிலங்கள் பறிபோகின்றன" என்று எல்லோரும் பேசிக்கொள்கின்றோம். ஆனால், நாம் என்ன நடவடிக்கைகளை எடுத்தோம்?

சிலர் மேடைகளில் உணர்ச்சிவசமாகப் பேசுகிறார்கள். ஆனால்செயலில்எதுவும்இல்லை. சைவசமயஒழுங்குகளை சைவசமயத்தவர்கள் சரியாகக் கடைப்பிடிப்பார்களானால், பிறர் எம்மை ஆக்கிரமிப்பது என்பது முடியாத விடயம். போர்ச்சூழலை பயன்படுத்தி மதம் மாற்றும் அமைப்புக்கள் வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் லட்சக்கணக்கானவர்களை தம் வலைக்குள் வீழ்த்தினர். மதம் மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டவர்களுக்கு போர்ச்சூழல் சாதகமாக அமைந்தது.

அந்நியப் படையெடுப்புக்களின்போது மதம் மாறிய பலர்,பின்பு தங்கள் தாய் மதத்துக்கு வந்து சேர்ந்தனர். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. மதம் மாற்றுபவர்கள் மேற்கொள்ளும் முதற் கருமமாக சட்டரீதியாக பெயர்மாற்றத்தை செய்கிறார்கள். வாரந்தோறும் பத்திரிகைகளில் பெயர்மாற்றம் தொடர்பான விளம்பரம் வெளியாகிறது. கடந்த சில வருடங்களாக சைவசமயத்தை சார்ந்தவர்கள் கிழக்கிலங்கை பகுதியில் இஸ்லாம் மதத்தை தழுவி, தங்கள் பெயரை சட்டரீதியாக மாற்றி விளம்பரப்படுத்தும் நிலைமை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இதனை தட்டிக் கேட்பார் இன்று எவருமே இல்லை. இது விடயத்தில் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதற்கு எவரும் இல்லாததும் சைவசமயத்தவர்கள்

மறுபக்கம் பார்க்க...

**வாழ்த்து**

தூய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க! சேவலுமயிலும் வாழ்க!
வெய்யசூர் மார்பு கீண்ட வேல்படை வாழ்க!
பொய்யில் சீரடியர் வாழ்க! வாழ்கவிப் புவனமெல்லாம்!

நலிவுற்றுப் போவதற்கு ஏதுவாக உள்ளது. இந்நிலை தொடரக்கூடாது. இதனை மாற்றியமைப்பதற்கு சைவசமயத்தவர்கள் சமய உணர்வோடு செயற்பட வேண்டும்.

இன்று சைவக்கோயில்களுக்கு நாளாந்தம் வழிபாடு செய்ய வருபவர்களின் தொகையும் பெரிதும் குறைந்து கொண்டு போகிறது. இவ்விடயத்தில் இலங்கையிலுள்ள ஏனைய மதத்தவர்கள் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். எங்கள் சமூகத்தில் பெற்றோர்கள் மதநம்பிக்கையை ஊட்டத் தவறிவிட்டார்கள். கல்வி பற்றிய அக்கறை மட்டும் இருந்தால் போதும் என்று கருதுகிறார்கள். பிள்ளைகளை கட்டாயமாக ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று, ஆன்மீக ஈாப்புக்கான வாய்ப்பை எம்மவர்கள் போதியளவு ஏற்படுத்துவதில்லை. இந்நிலையே இன்று பல கோயில்கள் வெறிச்சோடிப்போய் இருப்பதற்கு காரணமாகும். பெற்றோர் இதுவிடயத்தில் அக்கறை கொள்ளாதுவிட்டால் சமயத்தைக் காப்பாற்ற முடியாது.

இலங்கையில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட சைவப்பாடசாலைகள் உள்ள போதிலும், அங்கு சமயநெறியை வெறும்பாடப்புத்தகமாகவே போதிக்கிறார்கள். சமய வாழ்வியலை கற்றுக்கொடுக்கின்ற பண்பாடு குறைந்துவிட்டது. பாடசாலைகளில் சமய விழாக்கள், குருபூசை போன்ற நிகழ்வுகள் மிகவும் குறைந்துவிட்டன. அதற்காக ஒதுக்கப்படும் நேரமும் அருமருந்தாகி வருகிறது. எந்த நோக்கத்திற்காக சைவப்பெரியார்கள் ஊர்தோறும் பாடசாலைகளை தோற்றுவித்தார்களோ, அந்த நோக்கம் இன்று பூரண நிலை பெறவில்லை. இந்த நிலையை மாற்றுவதற்கு அனைவரும்,சமய உணர்வோடு தம் கடமையை ஆற்ற முன்வரவேண்டும்


**இந்து ஒளி** | அகில இலங்கை இந்து மாமன்ற இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு

திருவாதிரைச் சிறப்பிதழ்

**புரட்டாசி – மார்கழி 2018**

**ஆசிரியர் குழு :** சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
திரு.வே. கந்தசாமி
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள்
திரு. த. மனோகரன்

*ஒரு பிரதியின் விலை* ரூபா 50.00
*வருடாந்தச் சந்தா (உள்நாடு)* ரூபா 300.00 (தபாற் செலவு தனி)
*வருடாந்தச் சந்தா (வெளிநாடு)* US டொலர் 15

**அகில இலங்கை இந்து மாமன்றம்**

**தலைமையகம்:** 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை.
தொலைபேசி (கொழும்பு) : 0112434990, தொலைநகல் : 0112344720
மின்னஞ்சல் : hinducongress@gmail.com

**யாழ் பணிமனை :** 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி (யாழ்ப்பாணம்) : 0212221075, தொலைநகல் : 0212217280
மின்னஞ்சல் : hinducongressjaffna@gmail.com
இணையத்தளம் : http://www.hinducongress.lk

*இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.*

**HINDU OLI** | *Publication of* HINDU RESEARCH CENTRE OF ALL CEYLON HINDU CONGRESS

THIRUVATHIRAI SPECIAL ISSUE

September - December 2018

**Editorial Board :** Dr. Aru. Thirumurugan
Mr. V. Kandasamy
Dr. M. Balakailasanatha Sarma
Sivasri K. Vaitheeswara Kurukkal
Mr. D. Manoharan

Price Rs. 50.00
Annual Subscription (Inland) Rs. 300.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign) US $ 15 (Including Postage)

**ALL CEYLON HINDU CONGRESS**

Head Office: 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo - 2, Sri Lanka.
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720
E-Mail : hinducongress@gmail.com

Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Telephone No.: 0212221075, Fax No.: 0212217280
E-Mail : hinducongressjaffna@gmail.com
Website : http://www.hinducongress.lk

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**

**ISSN : 2012 - 9645**



# ஆன்மீகச் சுடரின் அருள்மடல்



## மார்கழி மாத வழிபாட்டுப் பாரம்பரியம் மீளவும் தொடர வேண்டும்.



மார்கழி மகிமைமிக்க மாதமாகும். மழை பொழிந்து, மண்குளிர்ந்து, மலர்கள் பூத்துக் குலுங்கும் குளிர் நிறைந்த காலம். இக்காலப் பகுதியில் எங்கள் கிராமங்களில் தெய்வீக மணம் கமழும். சைவமக்கள் தங்கள் வீட்டு வாசலில் சாணத்தால் மெழுகி, மாக்கோலம் போட்டு மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைப்பார்கள். திருவெம்பாவையின் பத்து நாட்களும் அதிகாலையில் மணியோசையும் சங்கொலியும் கேட்கும். சிறுவர் முதல் முதியோர் வரை வீதிகள் தோறும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப்பாடித் திருவெம்பாவைக் காலத்தை மகிழ்விப்பார்கள். கோபதாபங்கள் யாவும் மறந்து எல்லோர் வீட்டுவாசல்களிலும் ஏல் ஓர் எம்பாவாய் ஓங்கி ஒலிக்கும். பத்து நாட்களும் பரவசமாய் எம்மை மறக்கச்செய்துவிடும். இந்தப் பாரம்பரியப் பண்பாடு இப்போது இல்லை.

அடியேன், விபரம் அறிந்த காலத்திலிருந்து அயலிலுள்ள சிறுவர்கள் மட்டுமல்ல பெரியோர்களுடனும் இணைந்து அதிகாலை நான்கு மணிமுதலாக கோப்பாய் கிராமத்து வீதிகளில் திருவெம்பாவை பாடல்களை பாடி வந்தோம். இளைஞனாகிய பின்னரும், அமெரிக்கா வரும்வரை வருடந்தோறும் இந்த வழக்கம் தொடர்ந்தது. ஆலயங்களில் திருவெம்பாவை காலத்தில் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடுவது, வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப் பிரார்த்தனையில் கலந்து கொள்வது, நல்லூர் கந்தன் தேர்த்திருவிழாவுக்கு எங்கள் ஊரிலிருந்து பஜனைப் பாடல்கள் பாடிக்கொண்டு ஆலயம் செல்வது என்பன சிறுவனாக இருந்த போது, எமது சமய வாழ்வின் மிக முக்கிய அம்சங்களாக இருந்தன. இளம் வயதில் எம் மனங்களில் விதைக்கப்பட்ட இத்தகைய விதையானது, பிற்காலத்தில் சமய வாழ்வுக்கு ஓர் அத்திவாரமாக அமைந்தது என்று சொல்லலாம்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் பாரம்பரியமான எமது சமய விழுமியங்களைப் பறித்துவிட்டது. அன்றைய காலப்பகுதியில் சிறியது முதலாக பெரும் கோயில்கள் வரை மார்கழித் திருவெம்பாவை காலத்தில் ஒரு ஆத்மீக உத்வேகத்தை ஏற்படுத்தின. ஆண்கள், பெண்கள் அனைவரும் அதிகாலையில் கோயில்களில் கூடிவிடுவர். இந்தச் சூழல் கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக மழுங்கடிக்கப்பட்டுவிட்டது. ஆத்மீகத்தின் பெயரால் நடத்தப்பட்டு வந்த இத்தகைய ஆன்மீக நிகழ்வுகள் இப்போது இல்லாமற் போய்விட்டன.

இன்றைய பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு சமய விழுமியங்களை அறியச் செய்வதில் தவறிவிடுகிறார்கள். மனிதனை மனிதனாக வாழ வைப்பதற்கு புத்தகக் கல்வி மட்டுமல்ல, சமய அறிவு, சேவை மனப்பான்மை என்பனவும் தேவை.

சமயநெறிமுறைகளை மீண்டும் கட்டிவளர்க்க வேண்டுமானால் இளைய சமுதாயத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகும். இளம் தலைமுறையினர் நல்ல பாதையில் பயணம் செய்வதற்கு இத்தகைய சமயப் பாரப்பரியங்களை நாம் மீண்டும் தோற்றுவிக்க வேண்டும். இதற்குச் சிறந்த வாய்ப்பாக நாவற்குழியில் திருவாசக அரண்மனை எழுந்துள்ளது. இதனைப் பழைய பாரம்பரியத்திற்குரிய தூண்டுதலை ஏற்படுத்தக்கூடிய தெய்வீக நிலையமாகக் கருதலாம். திருவாசக அரண்மனையைப் பயன்படுத்தி ஒவ்வொரு கிராமங்களிலும் இளைஞர்கள் குழுக்களாக முன்வந்து திருவெம்பாவை காலத்து கூட்டுப்பிரார்த்தனைகளை நன்முறையில் நடத்தவேண்டியது அவசியமாகும். திருவாசகத்தை உயிராக நேசித்தவர்கள் யாழ்ப்பாணத்து மக்கள். அந்தவகையில் அனைவரதும் கூட்டுமுயற்சியாக இத்தகைய ஆன்மீகப் பாரம்பரிய செயற்பாடுகள் எதிர்காலத்தில் மீளவும் தொடரவேண்டும். இதற்காக இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**ரிஷி தொண்டுநாதன்**



# திருவெம்பாவையும் திருப்பாவையும்


**திருமதி கனகா கணேசமூர்த்தி**

(கன்ரபரி தமிழ்ச்சங்கம் - நியூசிலாந்து)


**மா**ர்கழி மாதத்தில் விடியற்காலையில் இளம் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி, கூட்டமாய் கூடிக் குளத்தில் நீராடி, பாவை வைத்து வழிபாடு நடத்துதல் பாவை விரதம் ஏனப்படுகிறது. இப்பாவை விரதமானது மழை பெய்து நாடு நலம் பெறவும், தமக்கு நல்லபடி திருமணம் நடைபெறவும் பெண்களால் அனுஷ்டிக்கப்படுவது பழங்கால வழக்கம். இந்த விரதம் பற்றி இந்துக்களின் வழிபாட்டில் சிவனைத் தலைவனாக வைத்து மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடியுள்ளார். ஆண்டாள் திருப்பாவை பாடியுள்ளார்.

திருவெம்பாவையில் 20 பாட்டுக்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் எம்பாவாய் என்று முடியும். பெண்கள் ஒருவரையொருவர் எழுப்புவதும் எல்லாரும் சேர்ந்து குளத்தில் நீராடுவதும் அழகாகக் காட்சியாக்கப்பட்டிருக்கிறது. ஆன்மா தன்னைப் பீடித்துள்ள மாயையிலிருந்து விடுபட்டு இறைவனையடைய முயற்சிப்பதை விளக்குவதாகவும் திருவெம்பாவை பற்றி ஒரு கருத்து வழங்குகிறது. பக்தியைப் பெண்களிடையே பலவிதங்களில் மிக இயல்பாகப் புகுத்தியிருக்கிறார் மாணிக்கவாசகர். இவற்றுள் விடியற்காலையில் நீராடும்போது பாடுவதாக அமைந்துள்ளது திருவெம்பாவை.

“மலவிருளுற்றுறங்காமல் மன்னு பரிபாகரருள் செலமுழுக வருகவெனச்செப்பல் திருவெம்பாவை” என்று திருப்பெருந்துறைப் புராணத்தில் திருவெம்பாவை பற்றிக் கூறப்படுகிறது. மும்மலங்களாற் பீடிக்கப்பட்டுச் சுயநினைவிழந்து உறக்க நிலையில் இருக்கும் ஆன்மாவைத் தட்டி எழுப்பி இறையருளைப்பெற வருக என அழைப்பதாக அமைகிறது திருவெம்பாவை. இறைவன் அருளை நான் பாடக் கேட்டும் கேளாதது போல் உறங்குகிறாயா? என்று பெண்ணொருத்தி தன் சிநேகிதியைக் கேட்கிறாள். “ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள்தடங்கண் மாதே வளருதியோ வன் செவியோ நின் செவிதான்”.. என்று கேட்பது போலப் பாடல் தொடங்குகிறது. மாணிக்கவாசகர் பெண்களின் மன நிலையை மிக நுட்பமாக அவதானித்துப் பக்தியையும் சேர்த்துப் பாடலாக்கியுள்ளார்.

“பாசம் பரஞ்சோதிக்கென்பாய் இராப்பகல் நாம் பேசும் போது. இப்போது ஆர்அமளிக்கே நேசமும் **வைத்தனையோ** நேரிழையாய்”?... என்று ஒருத்தி இன்னொருத்தியின் வீட்டு வாசலில் நின்று கேட்கிறாள். இரவும்பகலும் பரஞ்சோதி (சிவன்) மீது அளவில்லா அன்பு வைத்துள்ளதாகக் கூறுவாய். இப்போது நித்திரையின்மீது நேசம் வைத்தாயோ? என்று கேலி செய்கிறாள்.. முதல் எட்டுப் பாடல்களிலும் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி ஒன்றாகச் சேர்ந்து குளிக்கச் செல்லும் காட்சி வர்ணிக்கப்படுகிறது. அடுத்து எல்லோரும் கூடி இறையருளைப் பாடுகிறார்கள்.

**முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே**

**பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே**

**உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**

**உன்னடியார் தாழ் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**

**அன்னவரே எங்கணவராவார் அவருகந்து**

**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்**

**இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்**

**என்ன குறையும் இலோம் ஏலோரெம்பாவாய்**

எனக்கூறித் தமக்கு வேண்டியவற்றைக் கேட்கின்றார்கள். பக்தி என்னும் தண்ணீரில் பாவங்கள் கழுவப்படுகிறது. இதை இலக்கிய நயத்தோடு “ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்” என்று வர்ணிக்கிறார். கடவுள் நம்பிக்கை, பக்தி, விரதங்கள் போன்ற மிகப்பெரிய விஷயங்களை மிக இலகுவாக மக்களிடையே புகுத்தி இருக்கிறார். முக்கியமாக இளம் வயதினரிடம் பக்தியைக் காண்பது கடினம். அவர்களுடைய பல சந்தேகங்களுக்குப் பதில்சொல்ல முடியாது. ஆனால் மணிவாசகரோ இளநெஞ்சங்களின் போக்கிலே சென்று மணிமணியான வாசகங்களின் மூலம் தன்கருத்தைச் சொல்லுகிறார்.

மழை பொழிய வேண்டுமென்று பெண்கள் பாடும்போது” அவர்களின் உவமை கடவுளின் அருளுடன் ஒப்பிடப்படுகிறது. “நந்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பற்கு முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப்பொழியாய் மழை ஏலோரெம்பாவாய்.” சிவனின் அன்பர்களுக்கு அன்னை சிவசக்தி தன்னருளை மழைபோலப் பொழிகிறாள். இதை அடியார் மாற்றிப்பாடுகிறார். அன்னை பொழியும் அருளைப் போலத் தடையின்றி பொழிவாய் மழையே என்கிறார். இவரது பாடல்களில் புராணக்கதைகள், பழமொழிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. உன்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்பது பழமொழி.

"உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று அங்கு அப்பழஞ்சொற் புதுக்கும் எம் அச்சத்தால் எங்கள் பெருமான் உனக்கொன்றுரைப்போம் கேள்"...என்று தொடங்கி "இங்கிப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல் எங்கெழிலென் ஞாயிறு எமக்கு ஏலோரெம்பாவாய்" என்று முடிக்கிறார். மணிவாசகப்பெருமான் சிறந்த சிவபக்தர். இவரது திருவெம்பாவை சிறந்த பக்தி இலக்கியமாக மக்களிடையே பரவியுள்ளது. இப்பாடல்கள் அனைத்தும் மார்கழி மாதத்தில் கோயில்களில் பத்து நாட்கள் படிக்கப்படுகின்றன. பத்தாம் நாள் திருவாதிரை நட்சத்திரத்தில் விசேட பூசையுடன் திருவெம்பாவை நிறைவு பெறுகிறது.

திருப்பாவை நாயகன் திருமால். கிருஷ்ணனைப் பாடி விரதம் இருந்தாற் பெறக்கூடிய நன்மைகள், திருமாலின் பெருமை, மழைபொழியும் அழகு போன்றவற்றை ஆண்டாள் 30 பாடல்களிற் தருகிறார். ஆண்பிள்ளையாகிய மாணிக்கவாசகர் பெண்களைப்போல கற்பனை செய்து பாடிய திருவெம்பாவை, பெண்ணாகிய ஆண்டாள் தானே பிறரை எழுப்புவது போலப் பாடிய திருப்பாவையில் இருந்து சிறிது வேறுபடுகிறது. திருப்பாவையில் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் தெளிவாக எடுத்துக்கூறப்படுகிறது. இருவரது நோக்கங்களும் ஒன்றாக இருந்தாலும் திருவெம்பாவையில் பக்தி அதிகமாகவும் திருப்பாவையில் இலக்கிய நயம் அதிகமாகவும் இருப்பதைக் காணுகிறோம்.

"மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்"... என்று தோழியரைக் குளிக்க அழைப்பது போன்று தொடங்கி அன்றாடம் சிநேகிதிகளுடன் பேசுவது போலவே நடத்திச் செல்கிறார் ஆண்டாள். இரண்டாவது பாட்டில் விரதமிருக்கும் வழிமுறைகள் எடுத்துக்கூறப்படுகிறது.

**வையத்து வாழ்வீர்காள், நாமும் நம் பாவைக்குச்**
**செய்யும் கிரிகைகள் கேட்டீரோ? பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரமன் அடி பாடி**
**நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலை நீராடி**
**மையிட்டு எழுதோம், மலரிட்டு நாம் முடியோம்,**
**செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி**
**உய்யுமாறு எண்ணி உகந்தேலோரெம்பாவாய்**

விரதம் என்றால் ஒருவருடைய அகமும் புறமும் சுத்தமாக்கல். அதாவது உடலின் உள்ளேயும் வெளியேயும் சுத்தப்படுத்தல். உடலின் உள்ளே என்பது ஆத்மசுத்தி. காலையில் நீராடல், எளிய உணவு, எளிய உடையலங்காரம் என்பன புறச்சுத்தமாகவும், பரமனடி பாடல், செய்யக்கூடாதவற்றைச் செய்யாதிருத்தல், பிறர் மனம் வருந்தும்படி பேசாதிருத்தல் என்பன அகச்சுத்தமாகவும் கொள்ளப்படுகிறது. இதை ஆண்டாள் எளிய தமிழில் எடுத்துக்கூறியிருக்கிறார். அடுத்ததாக இந்த நோன்பின் பயன் கூறப்படுகிறது. "ஓங்கி உலகளந்த உத்தமன் பெயர் பாடி நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து, நீங்காத செல்வம் நிறைந்து ஏலோரெம்பாவாய்" என்கிறார். அடுத்து மழை எப்படிப் பொழியும் என்ற கற்பனை. காணுமிடமெல்லாம் திருமாலின் திருவுருவத்தையே கண்ட கோதை நாச்சியார் மழை பொழியும் அழகைப் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

**ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்**
**ஆழியுள்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி**
**ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து**
**பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்**
**ஆழி போல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து**
**தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல்**
**வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.**

மழை முகிலே நீ கடலிலே புகுந்து நீரை முகந்து எடுத்துக்கொண்டு ஆரவாரத்தோடு வானத்திலேறி, ஊழிமுதல்வனாகிய திருமாலின் நிறம்போலக் கறுத்து, அவனுடைய கையிலுள்ள சக்கரம்போல் மின்னி, சங்குபோல் அதிர்ந்து இடியிடித்து அவனுடைய வில்லிலிருந்து புறப்படும் அம்புகள் போலத்தடையின்றி சந்தோஷமாகப் பொழிவாயாக. நாங்களும் நீராடி மகிழவேண்டும் என்கிறார். போரிலே தொடர்ந்து அம்புகள் எய்யப்படுவதைச் "சரமாரி" என்று வர்ணிப்பது தமிழ்மரபு. மேற்கூறிய பாடலில் மட்டுமல்லாது பல இடங்களில் பாரதப் போரின் காட்சிகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சில இடங்களில் இராவண வதமும் பெருமையாகக் கூறப்படுகிறது. பகைவரை அழிக்கும் திருமாலின் பண்பைப் பல இடங்களில் வியந்து பாராட்டுகிறார், கோதை நாச்சியார்.

"சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானைப் பாடவும் நீ கேட்டிலையோ?"....என்றும் .... "பொல்லா அரக்கனைக் கிள்ளிக்களைந்தானை".. என்றும் "அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி" என்றும் பல இடங்களில் குறிப்பிடுகிறார். இராவணின் ஆட்சி தென்னிலங்கையிலே தான் இருந்ததென்பதை இலங்கை என்று பொதுவாகச் சொல்லாமல் தென்னிலங்கை என்று விசேஷமாகக் கூறுவதன்மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

பெண்களை எழுப்பும் பாடல்கள் இயல்பாக ஒருத்தி மற்றொருத்தியுடன் பேசுவது போல அமைந்துள்ளது. இளம் பெண்களின் ஆசாபாசங்கள் அவர்கள் காலத்து நாகரீகமெல்லாம் பாடல்களிலே காணப்படுகிறது. "தூமணிமாடத்துச் சுற்றும் விளக்கெரியத் தூபம் கமழத் துயிலணை மேல் கண்வளரும் மாமன் மகளே மணிக்கதவம் தாள் திறவாய் மாமீர் அவளை எழுப்பீரோ? உன்மகள்தான் ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?.... என்கிறார். அந்தக் காலத்தில் சுற்றும் விளக்கு இருந்திருக்கிறது. சாம்பிராணிப்புகை மெல்லிய நறுமணத்துடன் காற்றைச் சுத்திகரிக்கப் பஞ்சுமெத்தையிலே மக்கள் நித்திரை செய்திருக்கிறார்கள். ஏறத்தாள ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்த நாகரீகம் இது.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் திருப்பாவையில் உள்ள அத்தனை பாடல்களையும் வரிவரியாகப் படித்துச் சுவைக்கவேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நமது அன்றாட வாழ்க்கையின் இறுக்கத்தில் இருந்து மீளும் சுலபமான வழி இதுவாகும். இந்த மார்கழி மாதத்தில் அனைவரும் திருப்பாவையையும், திருவெம்பாவையையும் படித்து இன்புறுவோமாக.



# திரு ஆதிரை நாயகன்


பேராசிரியர் திருமதி. மேகலா ராமமூர்த்தி
திருவிடைமருதூர்


சிவனுக்குரிய விசேட நாட்களில் குறிப்பிடத்தகுந்த ஒன்று மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரைத் திருநாளாகும். 'ஆருத்ரா' என்று வடமொழியில் அழைக்கப்படும் இத் திருவாதிரை நட்சத்திர நன்னாளில் அதிகாலையில் சிவனைத் தரிசிப்பதே 'ஆருத்ரா தரிசனம்' எனப்படும். சோதிடத்தில் நாள்மீன்கள் என்று அழைக்கப்படுகின்ற நட்சத்திரங்கள் மொத்தம் இருபத்தேழாகும். இவற்றில் 'திரு' என்ற அடைமொழியோடு அழைக்கப்படுபவை திருவாதிரை, திருவோணம் எனும் இரு நட்சத்திரங்களே. இவ்விரண்டில் ஆடல்வல்லானான சிவபெருமானுக்குகந்த நட்சத்திரம் திருவாதிரை எனவும் அமரரேறான திருமாலுக்குகந்த நட்சத்திரம் திருவோணம் என்பதும் அருளாளர்கள் கருத்து.

ஆதியும் அந்தமுமிலா அரும்பெரும்சோதியாயும், பிறவாயாக்கைப் பெரியோனாயும் திகழ்கின்றவன் சிவபெருமான். எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் (omnipresent) அவன். அப்படியிருக்க் இருபத்தேழு நட்சத்திரங்களும் அவனுக்கு உரியவைதானே?, 'திருவாதிரை' எனும் ஒரேயொரு நட்சத்திரத்துக்கு மட்டும் அவனை உரியவனாக்குவானேன்?' எனும் ஐயம் நமக்கு எழுவது இயல்பே. நமக்கு ஏற்பட்ட இதே ஐயம் முத்தொள்ளாயிரம் எனும் நூலின் ஆசிரியருக்கும் முன்பே எழுந்திருக்கின்றது. அதனை அவர் அந்நூலின் கடவுள்வாழ்த்துப் பாடலில் நயமுடன் பதிவுசெய்திருப்பதைப் பாருங்கள்!

**மன்னிய நாள்மீன் மதிகனலி என்றிவற்றை**
**முன்னம் படைத்த முதல்வனைப் பின்னரும்**
**ஆதிரையான் ஆதிரையான் என்றென்று அயருமால்**
**ஊர்திரை நீர்வேலி உலகு**

(முத்தொள்ளாயிரம் , கடவுள் வாழ்த்து)

"எல்லா நாள்மீன்களையும், மதி, கனலுமிழும் ஞாயிறு ஆகிய அனைத்தையும் ஆதியிலேயே படைத்த முதல்வன் நம் சிவபெருமான். ஆனால் கடலால் சூழப்பட்ட இவ்வுலகோ "ஆதிரையான்! ஆதிரையான்!" என்றே அவனை அழைத்து மயங்குகின்றதே, இஃதென்ன விந்தை!" என்கிறார் அவர்.

உண்மைதான்! எல்லாவற்றையும் படைத்தவனை ஒன்றுக்கு மட்டும் உரிமையாக்குவது பொருந்துமா? என்றால் "ஆம்! அஃது பொருத்தப்பாடுடைத்தே!" என்கின்றனர் சான்றோர்பெருமக்கள். அது எவ்வாறெனின், ஆதிரைமீனுக்கும் சிவனுக்கும் குணங்களின் அடிப்படையில் சில ஒற்றுமைகள் இருக்கின்றனவாம். ஆதிரைமீனும் ஆடல்வல்லானைப்போல எப்போதும் ஆடிக்கொண்டே இருக்கின்றதாம் வான்வெளியில் அத்தோடு அம்மீனும் நம் பெம்மானைப் போலவே சிவந்த நிறம் கொண்டதாய்ச் செந்நிறவொளி தருகின்றதாம்' அனைத்திற்கும் மேலாகப் பிறைநிலாவின் இடையே தோன்றும்போது ஆதிரைமீனும் அரனைப்போலவே தோற்றம் காட்டுகின்றதாம். இத்தகைய இயல்புகளாலேயே ஆதிரைமீனும் இறைத்தன்மையுடையதாய்க் கருதப்பட்டு அரனுக்குரியதாய் ஆராதிக்கப்படுகின்றது என்பதை அறியும்போது நாம் அடையும் வியப்புக்கு அளவேது! நம் முன்னோர்களின் வானியலறிவு பிரமிக்கத்தக்கதே அல்லவா?

ஆதிரை ஒளியில் அரனை வழிபடும் வழக்கம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல. பல நூற்றாண்டுகளாய்த் தொடர்ந்துவரும் வழக்கமே அது!. ஆம் நம் பண்டைத் தமிழரும் ஆதிரைநாளைக் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றனர். அதற்கான சான்று எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலில் கிடைக்கப்பெறுகின்றது.

"பனி மிகுதலானே குளிரால் நடுங்குதலையுடைய முன்பனிப் பருவத்தின்கண், சூரியனின் சுடுதலில்லாத குளிர்ந்தகடைமாரியையுடைய மார்கழித் திங்களில், மிகப் பெரிய சந்திரன் தன்னகத்துள்ள களங்கத்தோடே வளர்ந்துபௌர்ணமியாக நிறைந்த திருவாதிரை நாளின்கண், விரிந்த மெய்ந்நூல்களையுணர்ந்த அறவோர், அத்திருவாதிரைக்குத் தெய்வமாகிய சிவபெருமானுக்குத் திருவிழாவைத் தொடங்க, முப்புரியாகிய பூணூலையுடைய பார்ப்பனர் அவ்விழவின்கண் இறைவனுக்குப் பலிப்பொருள் நிரம்பிய பொற்கலங்களையும்பிறவற்றையும் ஏந்தி நின்றனர்" என்று ஆதிரை நாளை அற்புதமாய் விவரிக்கின்றது பரிபாடல்.

**"கனைக்கு மதிர்குரல் கார்வானம் நீங்கப்**
**பனிப்படு பைதல் விதலைப் பருவத்து**
**ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து**
**மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்**
**புரிநூல் அந்தணர் பொலங்கல மேற்ப"**

(பரிபாடல்:11:74-79)

'ஆதிரை முதல்வன்' என்ற பெயராலும் சிவபெருமான் இதே பரிபாடலின் 8-ஆம் பாடலில் விளிக்கப்படுதல் காண்க.

மற்றொரு சங்க இலக்கியமான கலித்தொகையில் இடம்பெற்றுள்ள,

**"அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த**
**பெருந்தண் சண்பகம் போல"**

(நெய்தற்கலி: 150: 20-21)

எனும் இவ்வரிகள், ("பெறுதற்கரிய ஆதிரை நாளையுடைய இறைவனின் திருமேனி அழகைப்பெறும்படி மலர்ந்த பெரிய குளிர்ந்த இச் சண்பகம் போல" என்பது இதன் பொருள்) சிவபெருமான் 'ஆதிரையான்' என்றே தொன்றுதொட்டு அழைக்கப்பட்டு வந்துள்ளமையை ஐயத்திற்கிடமின்றி நமக்கு அறியத்தருகின்றன.

சங்க இலக்கியங்களேயன்றித் திருமுறைப் பாடல்களிலும் ஆதிரைநாளின் சிறப்பு விதந்தோதப்பட்டுள்ளது.

மயிலாப்பூரில், குடத்தில் எலும்பாய்க் கிடந்த பூம்பாவையினைக் கண்ட ஞானசம்பந்தப் பெருமான் அவளை எழுப்புதற்காக, "பெண்ணே! நீ கபாலீச்சரம் அமர்ந்தானின் ஆதிரை நாளைக் காணாமல் போகலாமா?" எனவினவுவதன் வாயிலாய் ஆதிரைத் திருநாளின் சிறப்பினை நமக்கு அருமையாய் உணர்த்துகின்றார்.

**"கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்"**

(தேவாரம்)

அப்பர் தேவாரத்தில் 'திருவாதிரைத் திருப்பதிகம்' என்று ஒரு பதிகமே இடம்பெற்றிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. திருவாதிரையின் சிறப்பினைக் கூறும் இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதி வரியும்'ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்'என முடிகின்றது.

அமுதச்சுவைதரு அப்பதிகத்திலிருந்து ஓர் அழகிய பாடல்,

**"துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்**
**இன்பம் நும்மை ஏத்தும் நாள்கள் என்பாரும்**
**நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்**
**அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்"**

(தேவாரம்)

தியாகேசன் உறையும் ஆரூரிலே ஆதிரை நாள்விழா விமரிசையாய்க் கொண்டாடப் பெறுகின்றது. முத்துவிதானத்தோடும், பொற்காம்புடைய கவரி வீசப்பெற்றும் மிகச்சிறப்பாக அந்நன்னாளில் திருவீதியில்திருக்காட்சி நல்குகின்றான் தியாகேசப்பெருமான். இத்திருக்காட்சியைக் காணவந்த ஆடவரும், பெண்டிரும்,பிறரும், "ஈசனே! உம்மை நாங்கள் தொழாத நாட்களெல்லாம் துன்பம் தரும் நாட்களே் உம்மை நாங்கள் ஏத்தும் நாட்களே இன்பமானவை் எனவே உம்முடைய திருத்தொண்டில் எப்போதும் எம்மை ஈடுபடுத்தவேண்டும்!" என்று உளம்நெகிழ விண்ணப்பிக்கின்றனர் என்கிறார் அப்பர்பெருமான். அடடா! 'வேண்டுதல் வேண்டாமை' இலாத சிவபெருமானிடம் வைப்பதற்கு இதனினும் சிறந்த கோரிக்கை வேறென்ன இருக்கவியலும் மன்னுயிர்கட்கு?

**"பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்**
**பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"**

எனும் அப்பரின் மற்றொரு தேவாரப் பாடல் இங்கு ஒப்புநோக்கி இன்புறத்தக்கது.

பிறவியைப் பிணியென்றும், மண்ணுலகில் மீண்டும் மீண்டும் பிறந்துழல்வதையே பாவமென்றும் எண்ணும் அரனடியார்கள்கூட "ஆடல்வல்லானின் குனித்த புருவத்தையும், சொவ்வைக்கனிபோல் சிவந்த வாயினையும், அதில் தவழும் குமிண் நகையையும்(புன்முறுவல்), குளிர்ந்த அவன் சடையழகையும், பவளம்போல் ஒளிர்(ர்)விடும் சிவந்தமேனியில் துலங்கும் பால்வெண்ணீற்றையும், தூக்கிய திருவடியுடன் அவன் ஆடுகின்ற அற்புதக்காட்சியையும் காணும்பேறு கிட்டுமானால் இம்மனிதப் பிறவியும் விரும்பத்தக்கதே" என்கின்றனர்.


**குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில் குமிண்சிரிப்பும்**
**பனித்தசடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்**
**இனித்தம்உடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மா நிலத்தே!**

(அப்பர் தேவாரம்)

"ஆலவாயுடையார் புகழ் பாடப்பெறுவேமேல் வேண்டுவதிம் மனித யாக்கை" என்கிறார் திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவரும்!

எனவே, பழமையும் சிறப்பும் மிகுந்த இத்திருவாதிரைத் திருநாளில், கண்ணுக்கினியானாய்க் காட்சி நல்கும் கண்ணுதற்கடவுளின் கழலிணைகளைப் பற்றுவோம்! அவன் திருவைந்தெழுத்தைப் போற்றுவோம்! நாமெடுத்த இம்மனிதப் பிறவியைப் புனிதப் பிறவியாய் மாற்றுவோம்!

திருச்சிற்றம்பலம்



## மாமன்றத்தின் அஞ்சலி

## பேரூர் ஆதீன குருமுதல்வர் சாந்தலிங்கராமசாமி அடிகள்

தமிழ் நாடு - பேரூர் ஆதீன குருமகா சந்நிதானம் கயிலைக்குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் கடந்த 31.08.2018 அன்று சமாதியடைந்ததை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டது.

அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நெருங்கிய உறவினைப் பேணிவந்த பேரூர் ஆதீனம் எம்முடன் இணைந்து சர்வதேச ரீதியாகப் பல நாடுகளிலும் ஆன்மீகச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு வந்தது.

அவ்வாறான ஆன்மீகச் சுற்றுப்பயணங்களில் இவ் ஆதீனக்குரு முதல்வர் சீர்வளர்சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் எம்முடன் இணைந்து செயலாற்றியமையை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். பின்னாளில் தமது முதுமை காரணமாகச் சுற்றுப் பயணங்களைத் தவிர்த்து வந்த இவர் தனது பிரதிநிதியாக இரண்டாவது குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் சாந்தலிங்க மருதாசல அடிகளாரை எமது ஆன்மீக நிகழ்வுகளில் பங்களிக்கச் செய்தார்.



# திருவாசகம் கூறும் செய்தி

(புலவர் கீரன் அவர்களின் சொற்பொழிவுகளின் உள்ளடக்கம்)

டாக்டர். ராஜாராம்

ஈசனின் திருவிளையாடலான பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்ச்சிக்கு மூல காரணமானவர் மாணிக்கவாசகர். எல்லோருக்கும், அடித்த அரசன் உட்பட, முதுகில் அந்த அடி விழுந்தாலும் ஈசனின் காட்சி என்ற மிக அரிதான பயன் கிடைக்க வழி வகுத்தவர் மாணிக்கவாசகர். திருப்பெருந்துறைக் கோயில் தோன்றிச் சிறப்பு பெறுவதற்குக் காரணமானவர் மாணிக்கவாசகர். எல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றுக்கும் உருகாத மனம் கொண்டவரையும் உருக்கி, அழவைத்து அவனைப் பெறும் எளிய வழியைக் காட்டியவர் மாணிக்கவாசகப் பெருந்தகை. பழுது இல்லா மணிக் கோர்வை வாசகத்தால் அமுது பாமாலை சூட்டிய பெருமான் அவர். சிவப்பிரகாச சுவாமிகள் இவர் பெருமையைப் பாடுவது..

"வளமமு உயரிய நலமலி கங்கை நதித்தலை சேர்ந்தனர் கருணைக் கடல் முகந்து உலகு உவப்ப உகந்த மணிவாசகர் எனும் ஒரு மாமழை பொழிந்த திருவாசகம் எனும் பெரு நீர் ஒழுகி, ஓதுவார் மனம் எனும் ஒண்குளம் புகுந்து, நா எனும் மடகில் நடந்து, கேட்பார் செவியெனும் மடையில் செவ்வியில் செல்லா உளவெனும் நிலம்புக ஊன்றிய அன்பாம் வித்தில் சிவம் எனும் மென் முளை தோன்றி வளர்ந்து, கருணை மலர்ந்து, விளங்கு முத்திக்கனி மெய்ப்பொருள் தருமே!" இதன் பொருளாவது - சிவனாரெனும் கடல் நீர் ஆவியாகி, மாணிக்கவாசகர் எனும் மேகமாகித் திரண்டு, அது திருவாசகமெனும் அருள் மழை பொழிந்து, அது அதை ஓதும் அடியார் நாவின் ஊடே பாய்ந்து, அது கேட்பவர் செவி எனும் குளத்துள் நிரம்பி அவர் உளம் எனும் நிலத்தில் பக்தி விதையை முளைக்கச் செய்து, சிவம் எனும் கருணையை மலரச் செய்து அந்தப் பூ காய், பழம் என்ற அடுத்தடுத்த நிலைகளின் முடிவில் மீளா முத்தியைத் தருமே!

தேவப்பிறவியை விட மானிடப்பிறவியே மேல் என்பது திருவெம்பாவை தரும் அழுத்தமான செய்தி. "விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர்ப் பாதம் தந்து அருள வந்து அருளும் நேசன்," என்கிறது திருவெம்பாவை இரண்டாவது பாடல். அதாவது தேவர்கள் தன் பாதங்களில் விழுகையில் கூசிப் பின்னுக்கு இழுத்துக்கொள்ளும் ஈசன், தானே தேடி வந்து புவியில் அடியார்க்குத் தன் பதம் காட்டி ஆட்கொள்ளுவான்! அப்படிப்பட்ட பூமியில் போய்ப் பிறக்காமல் அவமே நாள் போக்குகின்றோம் என்கிறார் அவர்.

"இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்ற ஆழ்வாரின் கூற்றை ஒத்திருக்கிறது இது. அதற்குச் சான்று என்ன? தண்ணீரின் பண்பே ஈசனின் பண்பு. தண்ணீர் மேட்டிலிருந்து கீழே பாயும். இறைவனும் அப்படித்தானே இரங்கி (இறங்கி) ஓடி வருகிறான்? "ஸ்ரீவைகுண்ட விரக்தாய ஸ்வாமி புஷ்கரிணிதடே ரமயா ரமமாணாய " என்ற மங்களாசாசனம் தரும் செய்தியும் அதுவே. வைகுண்டம் அவனுக்குப் பிடிக்கவில்லை போலும்! அங்கே சும்மா படுத்துக்கொண்டு இருக்கப் பிடிக்காமல் அதை விட்டு விட்டு புவியில் வந்து விட்டான்! ஸ்வாமி புஷ்கரிணி நீர் ஆகட்டும், திருவெம்பாவையில் நாம் அனுபவிக்கும், பாய்ந்தாடும் சுனை நீராகட்டும் தண்ணீர் அனைத்தும் ஒன்றே! அரனும் அரியும் ஒன்றே! அந்தப் பரம்பொருளே தண்ணீர்! அவனுள்ளே புகுந்து கலந்து லயிக்கும் பேற்றைத் தரும் மாதம் மார்கழி. இறைவனின் கருணைக்கு ஒரு உருவமான தண்ணீர், ஆற்று நீர், ஊற்று நீர் (பொங்குமடு), மழை நீர் என்ற மூன்று நிலைகளில் வந்து உதவுகிறது. கடலில் தோன்றிக் கடலில் ஒடுங்குகிறது. "ஆற்று இன்ப வெள்ளமாம் அத்தா மிக்கா என்ற ஒளியே " என்பது முதல் நிலை.

சீதப் புனல் பாய்ந்து ஆடுவது அடுத்த நிலை (பொங்கு மடுவினுள் பாயும் நிலை). நீலக்குவளைச் சிவனாரையும் செந்தாமரை அன்னையையும் குறிப்பன. மூன்றாவது கருணை மழை நீர். எங்காவது கார் மேகம் திரளுமுன் மழை பொழியுமா? ஆனால் இயற்கைக்கு மாறாக இங்கு நடக்கும்! "ஈசனே கார்மேகம். அவன் வரும் முன்பே அன்னை விரைந்து வந்து கருணை மழை பொழிவாள்!. திருவெம்பாவை 16 வது பாடலில், "முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பாவாய். " நமது உள்ளத்தின் அளவுக்கேற்ப பொழியும் கருணை மழை நீரை நிரப்பிக் கொள்ளலாம். தண்ணீருக்கு நிறம் கிடையாது. நம் மனம் கலங்கலாக இருந்தால் அதுவும் சேற்று நிறத்தில் தான் இருக்கும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். என்னதான் ஒரு கல் நெஞ்சுக்காரனாகட்டும், ஒரு சிறு கீறல் போதும் தண்ணீர் உள்ளே புகுந்து விடும்! இறைவனும் கவலையுடன் அதற்குத்தான் காத்திருக்கிறான். தேவர்களுக்கும் கிட்டாத இந்த மானிடப் பிறவியின் பெரும் பயனை உணர்த்துவது திருவெம்பாவை. இந்த அனுபவம் சொர்க்கத்திலும் கிடைக்காது என்ற செய்தியை மாணிக்கவாசகர் அறிவிக்கிறார்.

கிடைத்த மானிடப் பிறவியை வீணாக்குகிறேனோ என்ற பெரும் அச்சம் அவருக்கு! திருவாசகத்தில் பல இடங்களில் அவர் தன் வாழ் நாட்களை வீணாக்கிவிட்டேனே என்று புலம்புகிறார். அடியாராக இருக்கின்றேனே. உண்மையிலேயே தனது பக்தி கனிந்து வளர்கிறதா அல்லது அடியாரைப் போல் நடிக்கிறேனா என்ற ஐயப்பாடு அவருக்கு! ஆகவே இறைவா! எனக்கு ஒரு நாடகத்தில் உன் அடியாராக நடிக்க வாய்ப்புக் கொடு! அப்படியே நடித்தாவது நாளடைவில் ஒரு உண்மைத்தொண்டனாக மாறுவேனா பார்க்கலாம்!

"முந்தை வினை முழுதும் ஓய உரைப்பான் காண்" என்ற கூற்றின் பொருள் என்ன? நல் வினை தீ வினை என்ற இரண்டுமே தவிர்க்க முடியாதது என்றாலும் அவன் அருள் இருக்கையில் வினையின் வலிமை நலிவடைந்து நசிக்கும். இம்மை, மறுமை என்ற இரு இரும்பு உருளைகளில் நசுங்கும் கரும்பு முதலில் சிறிது இரும்புச் சுவையைச் சாற்றில் தந்தாலும் போகப்போக இரும்பு உருளையின் சுவை மறைந்து போகும். இதுவும் திருவாசகம் தரும் செய்தி . "கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை " எனும் மணிவாசகச் சொல் தரும் செய்தி என்ன? சோதி என்ற பண்பின் பயனே கருணை. உருவமில்லாத சோதி எல்லா மதத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதே. அதை வழிபடுவதால் வரும் பயன் கருணை. வள்ளலார் இதன்பால் ஈர்க்கப்பட்டு, அருட்பெரும் சோதி தனிப் பெருங்கருணை என்ற மூல மந்திரத்தைக் கொண்டார். "நின் வாசகம் நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றிலே தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று மாணிக்கவாசகருக்கு நன்றி தெரிவிக்கிறார்.

**'ஈசனே உன்னை சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே,'** என்று அவன் பாதங்களைப் பற்றி நிற்பதே திருவாசகம் உணர்த்தும் முக்கிய செய்தி.



# ஆண்–பெண் சமத்துவம் உணர்த்தும் கேதாரகௌரி விரதம்

சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைந்து விரதமிருந்து, வழிபட்டு அதன் பலனாக சிவபெருமானின் (இடது பக்க) பாதியுடம்பைப் பெற்று, அர்த்நாரிஸ்வரியாகவும், அர்த்த நாரீஸ்வரராகவும் ஒன்றாகிய விரதமே கேதார கௌரி விரதமாகும்.

கயிலாயத்தில் சிவபெருமானும் பார்வதி தேவியும் வீற்றிருக்கும் வேளையில், சூரியன், சந்திரன், பிரம்மா, விஷ்ணு முதலான முப்பத்து முக்கோடி தேவர்கள் தும்புரு, நாரதர், சனகாதி முதலான முனிவர்கள், அட்டவசுக்கள் முதலான யாவரும் தினமும் கூடி, பார்வதி - பரமேஸ்வரனை வணங்கிச் சென்றனர். ஆனால் பிருங்கி முனிவர் மட்டும், பார்வதியைத் தவிர்த்து, சிவபெருமானை மட்டுமே தரிசித்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இது பலமுறை நிகழ்ந்தது. ஒரு நாள் அம்பிகை, சிவபெருமானை நெருங்கி அமர்ந்து கொண்டார். இந்த முறை பிருங்கி முனிவர், வண்டு உருவம் எடுத்து சிவனுக்கும், பார்வதிக்கும் இடையில் துளைத்து ஈசனை மட்டுமே வழிபாடு செய்து சென்று விட்டார். கோபம் கொண்ட பார்வதி தேவி, இதற்கான காரணத்தைச் சிவபெருமானிடம் கேட்டார்.

சிவபெருமான் விளக்கம் அளிக்கத் தொடங்கினார். 'தேவி! பிருங்கி முனிவர் பாக்கியத்தை விரும்புகிறவன் அல்ல. அவன் மோட்சத்தை அடைய நினைப்பவன். மௌனநிலை வகித்த பெரும் தவமுடையவன். காரணப் பொருள் ஒன்றே, மற்றொன்று இல்லை எனக் கருதுபவன். ஆகையால் தான் என்னை மட்டும் வழிபட்டுச் சென்றான்' என்று கூறினார்.

இதைக் கேட்ட பார்வதி தேவி, பிருங்கி முனிவரிடம், 'பிருங்கியே! நான் தான் ஈசனும் சக்தியுமாக இருப்பவள். உலகில் சக்தியும் சிவமும் இணைந்து இருப்பதுதான் நியதி. சக்தி இல்லையேல் சிவம் இல்லை. உம் உடம்பில் ஓடும் ரத்தமும், ஒட்டியிருக்கும் சதையும் கூட சக்தியான எனது அம்சங்களே! தெரியுமா உமக்கு?' எனக் கோபமாகச் சொன்னார்.

ஆணுக்குப் பெண் சரிநிகர் என்ற சமத்துவத்தை, முதன் முதலில் நமக்கு எடுத்துக்காட்டியவர் சிவபெருமான். அவர் தனது உடலில் சரிபாதியைப் பார்வதிதேவிக்குத் தந்து, 'அர்த்தநாரீஸ்வரர்' என்ற வடிவம் கொண்டார் என்கிறது புராணங்கள். சிவபெருமானிடம் இடப் பாகம் வேண்டி, பார்வதி தேவி இருந்த விரதமே 'கேதாரீஸ்வரர் விரதம்' என்றும், பார்வதிக்குக் கௌரி என்ற இன்னொரு பெயர் இருப்பதால் 'கேதார கௌரி விரதம்' என்றும் அழைக்கப்படுகிறது.

இவ் விரதத்தை அனுஷ்டிப்போர் சிவ-சக்தி அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்றுத் தீர்க்க சுமங்கலியாக வாழ்ந்து வீடுபேறடைவர் என்பது ஐதீகம்.

கணவனும் மனைவியும் ஒருயிர், ஈருடலுமாக வாழும் வரம் பெறவே இவ்விரத்தினை விரும்பி அனுஷ்டிக்கின்றனர். ஆயுள் முழுவதும் ஆதர்ச தம்பதிகளாக வாழ்வதுதான் கணவன், மனைவியின் லட்சியமாக இருக்கும். அதை நிறைவேற்றித் தரும் வல்லமை இந்த விரதத்துக்கு உண்டு. குடும்பத்தில் பிரச்சனையுள்ளவர்கள் இவ்விரதத்தினை அனுஷ்டிப்பதன் மூலம் குடும்ப ஒற்றுமையையும் சுபீட்சமான வாழ்கையையும் பெறுவார்கள் என்பது ஐதீகம்.

இவ் விரதத்தை ஆண், பெண் இருபாலாரும் அனுஷ்டிக்கின்றனர். மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்க வேண்டியும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை (கணவனை) வேண்டியும் இந்த விரதத்தினை அனுஷ்டிக்கின்றனர். மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுட்டிக்கின்றனர். விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்நூலைக் கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

**...தம்பதிகள் சேமமாக இருத்தலும், பிணிநீங்கலும், வறுமை நீங்கி செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுவதற்கும் சிவனருளைப் பரிபூரணாகப் பெறுவதற்கும், கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒற்றுமையாக வாழவேண்டும் ....**





அதற்கு முனிவரோ, 'தாயே! நீங்கள் கூறும் சக்தி ஏதும் எனக்கு வேண்டாம்" என்று கூறிவிட்டுத் தன் உடம்பில் இருந்த ரத்தத்தையும் சதையையும் உதறி எறிந்தார். சக்தியை இழந்த அவரால் நிற்கக்கூட முடியவில்லை. தடுமாறிய அவருக்குச் சிவபெருமான் ஓர் ஊன்றுகோலைக் கொடுத்தார். அதன் உதவியோடு தனது இருப்பிடம் சென்றடைந்தார் முனிவர். இந்தச் சம்பவம் பார்வதியின் மனதை வெகுவாகப் பாதித்தது.

பார்வதிதேவி கயிலாயத்தை விட்டுப் பூலோகத்தை அடைந்து கவுதம முனிவரின் ஆசிரமத்தில் தங்கினாள். அன்னையின் வருகையால், பன்னிரண்டு வருடம் மழையின்றி வாடிப்போய் இருந்த, அந்த ஆசிரமம் இருந்த இடம் பார்வதி தேவியின் வருகையால் நந்தவனமானது. எங்கும் பூக்களின் நறுமணம் வீசியது.

அப்போது தர்ப்பை முதலியவற்றிற்காக வெளியே சென்றிருந்த கவுதம முனிவர், உமாதேவியார் எழுந்தருளியிருப்பதைத் தெரிந்துகொள்ளாதவராய்ப் பூங்காவைக் கண்டு அதிசயித்து, அதனைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார். வரும்போது ஒரு வில்வ மரத்தடியிலே எழுந்தருளியிருக்கும் உமா தேவியாரைக் கண்டார்.

'தாயே! கயிலாசத்தை நீங்கிப் பூலோகத்திலே அடியேனுக்குக் காட்சியளித்தருளிய தன்மைக்கு, யான் என்ன தவம் செய்தேனோ? என் முன்னோர் புரிந்த பெருந்தவமோ? அல்லது இந்த ஆசிரமந்தான் செய்த புண்ணியமோ?' என்று கூறி வணங்கியவர், அன்னை பார்வதி தேவி வந்ததன் நோக்கத்தைக் கேட்டு அறிந்து கொண்டார்.

பார்வதி தேவி கவுதமரை நோக்கி, 'தபோதனரே! சிவபெருமானுக்கு இடது பாகத்தில் இணையும் பொருட்டு, நான் ஒரு விரதம் அனுட்டிக்க வேண்டும். மிகவும் மகத்துவம் நிறைந்த விரதம் ஒன்றையும், அதனை அனுட்டிக்கும் முறையையும் உரைத்தல் வேண்டும்' எனக் கேட்டாள்.

முனிவர், 'தாயே! பூவுலகில் அனுஷ்டிக்கப்படும் சிறந்த விரதம் ஒன்றுண்டு. கேதாரீஸ்வரர் விரதம் என்றும், கேதார கௌரி விரதம் என்றும் அதற்குப்பெயர்' எனக் கூறி, அதனை அனுஷ்டிக்கும் முறையையும் கூறினார்.

'இந்த கேதாரீஸ்வரர் விரதம் புரட்டாசி மாத வளர்பிறை அஷ்டமி திதியில் இருந்து ஐப்பசி மாதம் தேய்பிறை சதுர்த்தசித் திதி வரையில் அனுஷ்டிக்கப்படுவது. அல்லது புரட்டாசி தேய்பிறை பிரதமை முதல் ஐப்பசி தேய்பிறை சதுர்த்தசி வரை உள்ள நாட்களில் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும். அதுவும் இல்லாமல் ஐப்பசித் தேய்பிறை சதுர்த்தசியாகிய ஒரு நாளாயினும் கேதாரநாதரைக் குறித்து அனுஷ்டிக்கப் படுவதாகும்.

விரதம் ஆரம்பித்த நாட்கள் முதல், ஒவ்வொரு பொழுதும் சூரிய அஸ்த மனத்தின் பின் உணவருந்தி இரவில் தர்ப்பையில் உறங்க வேண்டும். இறுதி நாளாகிய சதுர்த்தசி அன்று கும்பம் வைத்து, அர்ச்சனை செய்து, முறுக்கு, அதிரசம், வெண்தாமரை, வெற்றிலை, பாக்கு, சந்தனம் உருண்டை, மாஇலை, அரளி மொட்டு, வாழைப்பழம் போன்றவற்றை 21 என்ற எண்ணிக்கையில் படைத்து பூஜித்து கேதாரநாதரை வணங்கி உபவாசமிருத்தல் வேண்டும். மறுநாள் உதயத்தில் உபவாசம் முடிக்க வேண்டும்' என்று விரத முறையை கவுதமர் கூறினார்.

அதன்படியே பார்வதி தேவி விரதம் இருந்து வந்தாள். முடிவில் சிவபெருமான் தோன்றி, அன்னைக்குத் தன்னுடைய உடலில் சரிபாதியைத் தந்து அர்த்தநாரீஸ்வரராகக் கயிலாயம் எழுந்தருளினார்.

கேதாரீஸ்வரரைக் குறித்து உமாதேவியாராகிய கௌரி அனுஷ்டித்த விரதமே 'கேதார கௌரி விரதம்' என்று அழைக்கப்படுகிறது.

கேதார கௌரி விரதமிருக்கும் பெண்களும் மேற்கூறிய முறையில் விரதம் இருக்க வேண்டும். இதில் சதுர்த்தசி நாளில் கும்பம் வைத்து அதை அம்மனாக நினைத்து வழிபட வேண்டும். ஆதியில் பரசிவத்திலிருந்து மெல்லிய மின்னல் ஒளி போல் வெண்மையாகத் தோன்றி, அண்ட சராசரங்களையும் உயிர்களையும் படைத்து, அவற்றுக்கெல்லாம் அருள, மலைகளின் மேல் வந்து தங்கினாள் தேவி. வெண்மையான நிறத்துடன் இருந்தாலும் மலைகளில் தங்கியதாலும் 'கவுரி' என அழைக்கப்பட்டாள். அருணகிரிநாதர் கௌரிதேவியை, 'உலகு தரு கவுரி' எனப் போற்றுகிறார். கவுரிதேவியை வழிபடுவது, அனைத்து தேவ-தேவியரையும் வழிபடுவதற்குச் சமம். கௌரி வழிபாடு இல்லறத்தைச் செழிக்கச் செய்யும் சிறந்த வழிபாடு என்கின்றன ஞானநூல்கள். ஞானிகள் 108 வகை கௌரி தேவி வடிவங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட வகை செய்துள்ளனர். அதிலும் மிக முக்கியமானது 16 வகையான கௌரி வழிபாடு. இந்த வழிபாட்டால் சகல ஐஸ்வரியங்களும் பெருகும்

தேவியின் வேண்டுதலினால் இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் அனைவருக்கும் தம்பதிகள் சேமமாக இருத்தலும், பிணிநீங்கலும், வறுமை நீங்கிச் செல்வம் பெறுவதற்கும் கன்னியர்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறுவதற்கும் சிவனருளைப் பரிபூரணமாகப் பெறுவதற்கும், கணவனும் மனைவியும் கருத்தொருமித்து ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதே இவ்விரதத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.

**பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி**
**கொண்டான் கோலக் காவு கோயிலாக்**
**கண்டான் பாதங் கையாற் கூப்பவே**
**உண்டான் நஞ்சை உலக முய்யவே**

-திருஞானசம்பந்தர் -



# விநாயகர் சஷ்டி விரதம்

திரு.கணபதி செல்வேந்திரநாதன்
ஓய்வுநிலை ஆசிரியர் - சாவகச்சேரி



மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்.

இந்துக்கள் ஆன்ம ஈடேற்றங் கருதி செய்யுஞ் சமய அனுட்டானங்களில் விரதமும் ஒன்று. விரதம் என்பது ஒரு வகை விஷேட வழிபாடு ஆகும். விரதம் என்னும் சொல் உண்ணும் உணவை சுருக்குதல் அல்லது விடுத்தல் என பொருள்படும். விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி, திரிகரண சுத்தியுடன் இருத்தல் வேண்டும். அப்போதுதான் மன அடக்கத்தை மேம்படுத்த முடியும். பெரியோர் கூறும் புண்ணியம் ஏழினுள் இதுவும் ஒன்று. விரதம் அனுஷ்டிப்பதனால் மனம் புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடையும். இதனால் ஞானம், நல்லறிவு கைகூடும்.

உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்புடைய சொற்களாகும். உபவாசம் என்னும் சொல் இறைவனின் அருகே வசித்தல் என்ற பொருளைத் தரும். ஒரு தினம் அல்லது பல தினங்கள் உணவு வகை எதனையும் விடுத்து இறை தியானத்தில் இருக்கும் நிலையே உபவாசமாகும்.

### பிள்ளையார் பெருங்கதை - விநாயகர் விரதம்

விநாயகர் விரதங்கள் பல. அவற்றுள் கார்த்திகை மாசம் அபரபக்கப் பிரதமை முதல் மார்கழி மாசத்துப் பூர்வ பக்கச் சஷ்டி வரையும் உள்ள இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கும் விரதமும் ஒன்றாகும். இது விநாயக சஷ்டி என்றும் மார்கழி சஷ்டி, குமார சஷ்டி, பெருங்கதை விரதம் என்றும் கூறப்பெறுகிறது. கார்த்திகைத் திங்கள் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக மார்கழித் திங்கள் (வளர்பிறை) சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொரு நாளும் இந்த விரதம் கடைப் பிடிக்கப்பெறுகிறது. சைவர்களுக்கு இக்காலம் மிகவும் புனிதமான காலமாகும்.

### விநாயகசஷ்டி விரதத்தின் தோற்றம்

மாகத முனிவருக்கும் வீபூதி என்ற அசுரப்பெண்ணிற்கும் பிறந்த அசுரன் கஜமுகன். இவன் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து எந்த ஆயுதங்களாலும் அழியாத வரம் பெற்றான். வரம் பெற்ற மமதையில் இந்திரன் முதலான தேவர்களுக்கு இடர் விளைவிக்க, அவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர்.

சிவ-சக்தியின் வேண்டுதலினால் விநாயகர் தன் பூதப்படைகள் சூழ கஜமுகனின் மதங்கபுரத்தை முற்றுகையிட்டார். போர் மூண்டது. அவன் விட்ட பாணங்களை எல்லாம் விநாயகர் தன் கையில் உள்ள உலக்கையினால் தடுத்து, அதனைக்கொண்டே அவனை அடித்தார். கஜமுகன் மயங்கி விழுந்தான். ஆனால் இறக்கவில்லை. அவன் பெற்றவரம் நினைவுக்கு வரவே, விநாயகர் தன் கொம்புகளில் ஒன்றை ஒடித்து அவன் மீது ஏவினார். அவன் பெருச்சாளியாக (மூஷிஹம்) உருமாறி விநாயகரைத் தாக்க வந்தான். விநாயகர் அதனை அடக்கி தன் வாகனமாக்கிக் கொண்டார்.

ஒரு முறை சிவபெருமானும் உமாதேவியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்த போது மகாவிஷ்ணு பொய்ச்சாட்சி சொல்லும்படி ஆகிவிட்டது (அவ்விளையாட்டில் சிவபெருமான் தோற்றுப் போகவே சாட்சியாக நின்ற மகாவிஷ்ணுவை பார்த்துக் கண்ணால் ஜாடை காட்டி யார் வென்றது எனச் சிவபெருமான் கேட்க விஷ்ணுவும் செய்வதறியாது தோற்றவராகிய சிவபெருமானே வென்றதாகவும், வென்ற உமாதேவியார் தோற்று விட்டதாகவும் பொய்ச்சாட்சி கூறிவிட்டார். அதனால் கோபமுற்ற உமாதேவி மகாவிஷ்ணுவைக் பார்வையற்ற மலைப் பாம்பாகப் போகுமாறு சபித்துவிட்டார். மகாவிஷ்ணுவுக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான் கயமுகாசுரவதம் நடைபெறும் வரைகாத்திருக்குமாறு சென்னார்.

விநாயகர் கயமுகாசுரனுக்கு முத்தி கொடுத்த பின்னர் கணபதீச்சரத்தில் இருந்து மூஷிக வாகனத்தில் திரும்பும் வழியில் ஆலங்காட்டில் மலைப் பாம்பாக மாறி இருந்த மகாவிஷ்ணுவைக் கண்ணுற்றார். அவர் பார்வை பட்ட மாத்திரத்தில் மகாவிஷ்ணு தம் சாபம்நீங்கி சுய உருவைப் பெற்றார். மகிழ்ச்சி அடைந்தார்

விநாயகரே! எனக்குக் காட்சியளித்து நன்மை புரிந்த இந்த மார்கழித் திங்கள் சஷ்டி நாளில் உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் சகல துயரங்களில் இருந்தும் விடுபட்டுச் சகல விருப்பங்களையும் அடையும்படி அருள்புரியவேண்டும் என்று கோரினார். அதற்கு விநாயகரும் மகிழ்ச்சியோடு இசைந்தார்.

இருபத்தோரிழையோடு கூடிய காப்பை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டி விரதத்தை ஆரம்பிப்பர். முதல் இருபது நாட்களும் ஒவ்வொரு பொழுது உணவு உண்டு இறுதி நாள் உபவாசம் இருந்து சுவாமி தரிசனம் செய்து உணவுண்டு இவ்விரதம் நிறைவு செய்யப்படும். இருபத்தொரு நாட்களும் விநாயகரது கதை கேட்பதும், விநாயகர் திருவிளையாடல்களைப் பேசக் கேட்பதும் புண்ணியமாகும். விநாயகர் ஆலயங்களில் விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற்றபின் அகத்திய முனிவரால் எழுதப்பட்ட பிள்ளையார் கதையைக் கற்றுத் தேர்ந்தோர் பாடிப் பயன் சொல்ல விரதமிருப்போர் இருந்து கேட்டுப் பயன்பெறுவர்.

இப்படிச் செய்ய இயலாதோர் மார்கழி மாத விநாயகர் சஷ்டியினன்று விரத சீலராக இருப்பது இன்பமூலமாகும். தன வைசியர்கள், மரகத விநாயகரைச் சஷ்டியினன்று வழிபாடு செய்து வருகின்றனர். "சாந்த" வழிபாடுகள் செய்யும் மக்கள்

விரதங்களை அனுஷ்டிக்கின்றனர். விநாயகர், சுப்பிரமணியர், சிவன், சத்தியை வணக்க உடைமையால் ஆன்ம உய்தி பெறலாம்.

யாழ்ப்பாணத்தில் இருபத்தொரு நாளும் நியமமாக விநாயக வழிபாடு நடைபெறும் ஆலயங்கள் பல இன்றும் உள. இருபத்தொரு விரத நாட்களும் விநாயகபுராணப்படிப்பும் விசேட உற்சவங்களும் வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்பெறுகின்றது.

21 நாட்களும் ஒரு பொழுது உண்டு இறுதி நாளில் உபவாசம் இருந்து இளநீர் கரும்பு மோதகம் அவல் எள்ளுண்டை முதலானவற்றை நிவேதித்துச் சிறப்பு வழிபாடு செய்ய வேண்டும் 21 நாட்களும் பெருங்கதை எனப்பெறும் விநாயக புராணம் (பார்கவ புராணம் ) படிக்க வேண்டும் கேட்க வேண்டும் ( இந்த 21 நாட்களிலும் விநாயக கவசத்தை நாள் ஒன்றுக்கு 21முறை பாராயணம் செய்தால் நினைத்த காரியம் கைகூடும்). அடுத்த சஷ்டி நாள் ஏழை எளியவரோடு இருந்து உணவு உண்டு விதரத்தை நிறைவேற்ற வேண்டும்.



**விநாயகரும் தத்துவங்களும்:**

*சீதக் களபச் செந்தா மரைப்பூம்*
*பாதச் சிலம்பு பலவிசை பாடப்*
*பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்*
*வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்*
*பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்*
*வேழ முகமும் விளங்குசிந் தூரமும்*
*அஞ்சு கரமும் அங்குச பாசமும்*
*நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்*
*நான்ற வாயும் நாலிரு புயமும்*
*மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்*
*இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்*
*திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்*
*சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான*
*அற்புதம் நின்ற கற்பகக் களிறே!*
*முப்பழ நுகரும் மூஷிக வாகனா!*

தத்துவங்கள் தோன்றும் முறையில் முதற்கண் சுத்தமாயையில்இருந்து"ஓம்"என்றபிரணவநாதமேதோன்றியது. பிள்ளையார் பிரணவ வடிவினர் ஆதலால் 'பிரணவன்' என்றும் 'மூத்த பிள்ளையார்' என்றும் அறியப்படுகின்றது. 'ஓங்கார நாத தத்துவம்' சிவனையும் சுட்டிநிற்பதால் சிவனும், பிள்ளையாரும் ஒன்றேயென்றும் கொள்ளமுடிகின்றது. பிரணவத்தை முற்றறிந்தவர் என்பதால் பிரணவன், பிரணவநாதன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். "ஓம்" என்ற பிரணவ மந்திர ரூபியான அவர் ஞானமே வடிவானவர்.

அவரது திருமேனியை ஒரு தத்துவ வித்தென ஆன்றோர் விபரித்துள்ளனர். அவருடைய இரு திருவடிகளிலே வலது திருவடியை "முற்றறிவு" அதாவது "ஞானசக்தி" என்றும் "இடது திருவடியை"முற்றுத்தொழில் அதாவது "கிரியாசக்தி" என்றும் உணர்த்தப்படுகின்றது. அவ்விரு திருவடிகளின் துணையின்றி உயிர்கள் ஒன்றினை அறிந்து கொள்ளவோ, செயலாற்றவோ முடியாது.

எல்லாப் பொருட்களையும் ஆகாயம் தன்னுள் அடக்கவும், உண்டாக்கவும், விரிக்கவும், ஒடுக்கவும் கூடிய தன்மையைக்கொண்ட பரந்து விரிந்த ஒருரு பூதம். ஆகாயம் போலவே சகலவற்றையும் உள்ளடக்கியதாகவே அவரது பேருந்தி காட்சி கொடுக்கின்றது. சுருக்கமாகச் சொல்வதானால், ஆனைமுகனின் பானை வயிற்றில்தான் (புவியும்) பிரபஞ்சமே அடக்கம் என்பர். அவன் செயல் புவி ஈர்ப்பு விசையிலும் மேலானது அத்தனை அண்டங்களையும் கட்டி இழுத்திடும் விசை என்றும், வழிமாறிப்போனவற்றைச் சமன் செய்யும் விசை என்றும் போற்றுகின்றனர்

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களையும் அவர் தனது ஐந்து கரங்களால் இயற்றுகின்றார் எனப்படுகின்றது. ஐந்து கருமங்கட்கும் அவரே அதிபதி என்பதனால் அவருக்கு "ஐங்கரன்" என்ற நாமம் விளங்குகின்றது. அவரை "பஞ்சகிருத்திகள்" என்றும் கூறுவர். அவரது முற்றறிந்த ஞானத்தை முறம் (சுளகு) போன்று பரந்து விரிந்த இருசெவிகளும் விளக்குகின்றன.

வலது பக்கமுள்ள ஒடிந்த கொம்பு "பாசஞானத்தையும்" இடது பக்கமுள்ள கொம்பு "பதிஞானத்தையும்" உணர்த்துவதாக உள்ளன. விநாயகரின் அடிக்கீழ் மூஷிகம் அமுந்தி அமைதியாகக் காணப்படுவதை, பிரணவ மூர்த்தியின் அடிக்கீழ் ஆணவ மலம் வலிகெட்டு அமைதி காக்கும் என்பதை விளக்குகின்றது.

அவரது உந்தியைச் சுற்றியுள்ள சர்ப்பம் "குண்டலினி சக்தியின்" வடிவம் என்பர். அதன் விரிவுகளும், சுருக்கங்களுமே பிரபஞ்சத்தின் தோற்றம், சுருக்கம் எனப்படுகின்றது. அதை அவர் உந்தியில் அணிந்திருப்பதானது, உலகிற்கு நிமித்த காரணர் அவர்தாம் என்பதையும் உணர்த்துகின்றது.

மேலும் விநாயகர் முக்கண் உடையவரெனவும் விளக்கப்பட்டுள்ளது. முக்கண்ணுடைய பெருமை சிவனுக்கே உரியது. ஆயினும் கிரியா வழி, ரூப வழி நோக்குமிடத்து சிவனும் பிள்ளையாரும் ஒன்றே எனும் தத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். மேலும், விநாயகருக்கு "சித்தி", "புத்தி" என இரு சக்திகள் உள்ளதாகவும் புராணங்களில் பேசப்படுகின்றது.

விநாயகரின் வலது முன்கை அபய முத்திரையக் காட்டும், வலது பின்கையில் மழுவாயுதமும், இடது முன்கையில் மோதகம் அல்லது மாதுளம்பழம் வைத்திருப்பது போலவும், இடது பின்கையில் பாசக் கயிறோ அல்லது செந்தாமரை மலரோ கொண்டிருப்பது போலவும் சித்தரிக்கப்படுகின்றது.

துதிக்கையில் நீர்க் கலசம் ஜகமண்டலம் ஒன்றை ஏந்தியிருப்பார். செம்பட்டு வஸ்திரத்தையே அணிந்திருப்பார். விநாயகருக்கு உகந்த முக்கிய நிவேதனப் பொருட்கள் மோதகம், கொழுக்கட்டை பஞ்சாமிர்தம், தேங்காய், அப்பம், அவல், பொரி, கரும்பு, சர்க்கரை முதலியனவாகும். செம்மலர்கள், அறுகம் புல் ஆகியவற்றைக் கொண்டு விநாயகரை அர்ச்சிப்பது மிகச் சிறந்தது.

உலகிலுள்ள சைவ மக்கள் எதையாவது எழுதத் தொடங்கும் பொழுதும், எழுதும் தாளின் தலைப்பில் முதலாவதாக "பிள்ளையார் சுழி" எழுதிய பின்னரே விடயத்தை எழுதத் தொடங்குவர். பிள்ளையார் சுழி 'ௐ' என்ற ஒரு வட்டமும் ஒரு கோடும் இணைந்து இருக்கும்.

இதற்கு ஒரு தத்துவம் உண்டு. பூஜ்ஜியமன வட்டத்தை "0" பிந்து என்றும், தொடர்ந்துவரும் கோட்டை " நாதம்" என்றும் கொள்கின்றனர். எனவே பிள்ளையார் சுழியை "நாதபிந்து" என்பவர். பிள்ளையாருடன் சிவசக்தியின் இணைப்பை இது உணர்த்துவதாக உள்ளதெனக் கூறப்படுகின்றது.

எக்கருமத்தையும் ஆரம்பிப்பதற்கு முன்னர் பிள்ளையாரை வழிபட்ட பின்னரே ஆரம்பிக்கும் வழக்கம் சைவ மக்களிடையை காலாதிகாலமாக நிலவிவருகின்றது. அவரை வழிபட்டுத் தொடங்கினால் செய்கருமம் இடையே எதுவித விக்கினங்களும் இன்றி நிறைவுபெறும் என்பது இந்துக்களின் நம்பிக்கை.



# தமிழ் இலக்கியத்தில் கார்த்திகை தீபம்!

- எஸ். பவானி

நாள்தோறும் உழைத்துக் களைத்த மக்கள் தங்கள் உடலுக்கு ஓய்வு கொடுத்து இன்புற்று மகிழ்ந்திருக்க, ஒன்று கூடி விழாக்களை நடத்துவர். அவற்றில் சமயச் சார்பற்ற, சமயச் சார்புள்ள என இருவகை விழாக்கள் உண்டு. சமய விழாக்களில் கார்த்திகை தீபமும் ஒன்று.

கார்த்திகை தீப விழாவை பழந்தமிழர் சங்க காலம் தொட்டே வழிபட்டு வந்தனர். இவ்வுண்மையினை... "தொல் கார்த்திகை நாள்" என்னும் திருஞானசம்பந்தரது கூற்று மெய்ப்பிக்கின்றது. தமிழ் இலக்கியங்களில் கார்த்திகைத் தீப விழாவினைப் பற்றிய செய்திகள் சில இடங்களில் காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் "அழல்", "எரி" என்னும் சொற்கள் கார்த்திகையைக் குறிப்பதாக உள்ளது. சிலப்பதிகாரம் கார்த்திகையை "அழல்" என்று கூறுகின்றது. பௌர்ணமி நாளில் கார்த்திகை நட்சத்திரம் கூடும் நாளில் தெருக்களில் விளக்குகளை ஏற்றி வைத்து, வீட்டின் வாசற்படிகளில் மாலைகளைத் தொங்கவிட்டு கார்த்திகை விழாவை கொண்டாடியதை அகநானூறு செய்யுளில் காணலாம்.

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கின் தகையுடையவாகிப்
புலமெல்லாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை"

என்னும் செய்யுள் அடிகள் பலவற்றில் கார்த்திகை தீபவிழாவைப் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது. இச்செய்யுளில் "தலை நாள் விளக்கின்" என்பதிலிருந்து இவ்விழா பலநாள் கொண்டாடப்படும் விழா எனத் தெளியலாம். இறுதிநாளில் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாவே கார்த்திகைத் தீபவிழா எனக்கொள்ளலாம். அதுவே மகா கார்த்திகை எனவும் வழங்கப்படும். இதனையே சீவக சிந்தாமணியும்,

"குன்றிற் கார்த்திகை விளக்கிட்டன்ன
கடிகமழ் குவளை பைந்தார்"

எனக் கூறுகிறது. நீதி இலக்கியங்களில் ஒன்றான பழமொழி, குன்றின்மேலிட்ட விளக்கு" என்று கூறுவதும் இக்கார்த்திகை தீப விழாவையே.

திருமால் கார்த்திகை மாதத்தில் கண் விழித்து எழுவதாக வைணவர்கள் குறிப்பர். இக்கார்த்திகைத் தீபவிழா கார்த்திகை மாதம் ஐந்து நாள்கள் நடக்கும் என்பர். இறுதிநாள் மகா கார்த்திகை அன்று வைணவர்கள் தானம் வழங்கியும் புனித பணி செய்தும் இறைவனை வழிபடுவர். இதனை நற்றிணை போன்ற சங்க இலக்கியங்களில் காணலாம். திருமால் பிரம்மயாகத்தை அறிந்து தானே தீப்பிழம்பான விழாவே கார்த்திகைத் தீபவிழா என்பர். வைணவர்கள் காஞ்சியில் திருமாலை "விளக்கொளிப் பெருமாள்" என்றே போற்றுவர்.

நினைத்தாலே முக்தி தரும் புராணச் சிறப்புடன் கூடிய திருவண்ணாமலையில் தீபம் ஏற்றுவதன் சிறப்பைக் கற்பனைக் களஞ்சியம் நல்லாற்றூர் சிவப்பிரகாசர் பலவாறு பாடியுள்ளார்.

அன்றே, அதை ஓர் ஆன்மிகச் சுற்றுலாத் தலமாக அறிமுகப்படுத்திய பெருமை, சிவப்பிரகாசர் அத்தலத்தைப் பற்றி எழுதிய "சோனாசைலமாலை" என்னும் நூலுக்கே உண்டு.

இன்று, பௌர்ணமி தோறும் மலைவலம் சிறப்புள்ளது போல கி.பி. 17 ஆம் நூற்றாண்டிலும் உள்ளதை அந்நூல் கூறுகிறது. நிலவானது முழு நிலவாய் மலையின் உச்சியில் தோன்றும்போது ஏற்றப்படும் தீபத்தைக் கற்பனை செய்யும் சிவப்பிரகாசர், தாமரை மலரை நெருங்கும் அன்னம்போல் உள்ளதாகக் கற்பனை செய்யும்போது செந்நிறமான தீப விளக்கு தாமரை போலவும் வெண்ணிற முழுநிலவு வெண்ணிற அன்னம் போலவும் உள்ளதாம். மேலும்,

கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அகத்து இருள் அனைத்தும்
சாய்த்துநின்று எழுந்து விளங்குறும் சோண
சைலனே கயிலை நாயகனே..

என்ற பாடலில் உலக விளக்குகள் எல்லாம் புற இருளை மட்டுமே நீக்க, இக்கார்த்திகை விளக்கோ புறத்திருளோடு அகத்திருளையும் அதாவது அஞ்ஞான இருளையும் நீக்க வல்லதாய் இருக்கும் அற்புதத்தைச் சிவப்பிரகாசர் கூறுகிறார்.

> உலக விளக்குகள் எல்லாம் புற இருளை மட்டுமே நீக்க, இக்கார்த்திகை விளக்கோ புறத்திருளோடு அகத்திருளையும் .....

இந்தக் கார்த்திகை விளக்கு ஏற்றப்பெறும் திருவண்ணாமலையை மனிதர்கள் சுற்றி வரக் கால்களை அவர்கள் பெற்றுள்ளதுபோல் நமக்குக் கால்கள் இல்லையே என்று மேலுலகத்துத் தேவர்கள் வருத்தமும் பொறாமையும் அடைவதாகச் சிவப்பிரகாசர் திருவண்ணாமலையின் மலை வழிபாட்டைச் சிறப்பிக்கிறார்.

வில்லிபுத்தூரார் பாடிய பாரதத்தில் அர்ச்சுனன் தலயாத்திரை வந்தபோது,

**கற்றார் தொழும் அருணாசலம்**
**அன்போடு கைதொழுதான்**

எனப் பாடப்பட்டுள்ளது. குக நமச்சிவாயரும் குருநமச்சிவாயரும் வாழ்ந்த மலை அண்ணாமலை, குருநமச்சிவாயர் பாடிய அண்ணாமலை வெண்பாவில், ""ஞானத் தபோதனரை வா என்று அழைக்குமலை அண்ணாமலை"" என்றார்.

ஆன்மிக உலகில் கலங்கரை விளக்குப்போல் உள்ள கார்த்திகை விளக்குக் காட்டும் ஒளி நோக்கிச் சென்று வாழ்க்கை என்னும் கப்பலைத் திசைப்பு நீங்க தவஒழுக்கக் கரையில் அணைத்து வாழ்வோமாக!

தெரிந்த புராணம்.... தெரியாத கதை....!

# சூரபத்மன் வதம்செய்யப்பட்டானா? ஆட்கொள்ளப்பட்டானா?



டாக்டர் டி.எஸ்.நாராயணஸ்வாமி (தமிழ்நாடு)

புராண- இதிகாசங்களில், அநேகமாகப் பொதுவான சம்பவம் ஒன்று இருக்கும். அசுரன் ஒருவன் பூவுலகில் பிறப்பான் அவன் மும்மூர்த்திகளில் ஒருவரை நினைத்துக் கடுந்தவம் புரிந்து, வரங்கள் பெறுவான். அந்த வரத்தின் வலிமையால் மூவுலகையும் ஆட்கொண்டு, ஆணவத்துடன் அட்டூழியம் செய்வான்.

அவனது கொடுமையால் தவிப்பவர்கள், இறைவனை வேண்டுவார்கள். அதையடுத்து, ஏதோவொரு வடிவில் வந்து, அந்த அசுரனை அழித்து, தர்மத்தை நிலைநாட்டுவார், இறைவன். இப்படியாகத்தான், தர்மம் நிலைநாட்டப்படுவதை வலியுறுத்துகின்றன புராண- இதிகாசங்கள்.

இதுபோன்று கொடியவர்களை அழித்த புராணச் சம்பவங்களில் குறிப்பாக இரண்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று, மகாபலியை அழிக்க, ஸ்ரீமந் நாராயணன் எடுத்த வாமன அவதாரம். இன்னொன்று, சூரபத்மனை அழிக்க, சிவ-சக்தியின் அம்சமாகத் தோன்றிய சுப்ரமணிய அவதாரம். இந்த இரண்டிலுமே, ஆணவத்தால் அட்டூழியம் செய்த அசுரனை அழிக்காமல், அவனது அசுரத்தனத்தை மட்டும் அழித்துவிட்டு, அந்த அசுரனை தமது அடியவனாக இறைவன் ஆட்கொண்டுவிடுவதைக் காணலாம்.

இறைச் செயல்கள் காரண- காரியங்கள் இன்றி நிகழ்வதில்லை. ஆக்குவதிலும் சரி, அழிப்பதிலும் சரி... அர்த்தங்களும் தர்மங்களும் நிறைந்திருக்கும்!

பிரம்மனின் மானச புத்திரர்களில் ஒருவர், கசியப முனிவர். அவருடைய இரண்டு மனைவிகளில் ஒருத்தி, மாயை. அவர்களுக்குக் கடுந்தவத்தின் பயனால் தோன்றிய சூரன், பதுமன் ஆகிய இரண்டு குழந்தைகள், பிறந்ததுமே உடல் பலமும் மனோபலமும் மிக்க ஒரே குழந்தையாக மாறிற்று. அந்தக் குழந்தைக்குச் சூரபத்மன் எனப் பெயரிட்டனர். சூரபத்மனுக்குச் சிங்கமுகன், தாரகன் என இரண்டு தம்பிகளும், அஜமுகி எனும் சகோதரியும் உள்ளனர்.

அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெறவேண்டும் என்றும், உலகில் எவருமே அடையாத நிலையைப் பெறவேண்டும் என்றும் பேராசை கொண்ட சூரபத்மன், அசுரகுரு சுக்கிராச்சாரியரை தன் குருவாக ஏற்றான். உச்சபட்சமாக, மூவுலகையும் வென்று சிவனாருக்குச் சமமான பதவியைப் பெறவேண்டும் எந்தச் சக்தியாலும் அழிவு வராமல், மரணமில்லாப் பெருவாழ்வை அடையவேண்டும் என வெறிகொண்டு செயல்பட்டான். எனவே, மகேஸ்வரன் குறித்துக் கடும் தவம் இருந்தான்.

பல காலம் தவம் புரிந்தும், சிவபெருமான் தோன்றாமல் போகவே, தன் அங்கங்களைத் துண்டு துண்டாக அறுத்து, வேள்வியில் சமர்ப்பித்தான். இறுதியில் தன் சிரத்தையே அறுத்துச் சிவார்ப்பணம் செய்ய முயன்றபோது, சிவபெருமான் தோன்றி, சூரபத்மன் வேண்டிய வரங்களை அருளினார். இந்திராதி தேவர்களையும், அகில உலகங்களையும் ஆளுகின்ற வல்லமை வேண்டும் என்று வரம் கேட்டான் சூரபத்மன். இரணியன் வரம் கேட்டதுபோல், "படைக்கப்பட்ட உயிர்கள், அல்லது விலங்கினங்கள், தோற்றுவிக்கப்பட்ட ஆயுதங்கள் ஆகிய எவற்றாலும், தனக்கு மரணம் நிகழக்கூடாது' என்றும் வரம் கேட்டான். "தன் உடலிலிருந்து சிந்துகின்ற உதிரத் துளிகளெல்லாம் அரக்க சக்தியாக உருவாகித் தன்னைக் காக்க வேண்டும்' என்றும் வரம் கேட்டான். "சிவனும் உமையும் இணைந்து தோற்றுவிக்கும் சக்தி அல்லாது, வேறு எந்தச் சக்தியாலும் தனக்கு அழிவு ஏற்படக்கூடாது' என்றும் வரம் பெற்றான்!

தவம் செய்து சாகா வரங்களைக் கேட்டு, அழியாமல் வாழ்ந்த அரக்கர்கள் வரலாறே இல்லை எனலாம். வாங்கிய வரங்களில், கேட்க மறந்திருந்த ஏதோ ஒரு காரண காரியத்தைப் பயன்படுத்தி, இறைவன் அவர் களை சம்ஹாரம் செய்த சம்பவங்களைப் பல புராணங்களில் பார்க்கின்றோம். ஆனால், சூரபத்மன் இதற்கும் விதிவிலக்காகி விடுகிறான்.

அழியாத வரம் பெற்றவர்கள் தங்கள் அழிவுக்கு தாங்களே வழி தேடிக்கொள்வர் என்பது தர்ம நியதி. அந்த வரிசையில் சூரபத்மன் தன் பங்கைச் செய்ய ஆரம்பித் தான். கொடுமையும், தீமையும் அவன் நாட்டில் சட்டங்கள் ஆயின. தர்மம் சிதைக்கப்பட்டது. தேவர்களும், தேவ மாதர்களும் சூரபத்மனின் அடிமைகளாயினர்.

சூரபத்மனின் நல்ல நேரமோ, அல்லது தேவர்களின் கெட்ட நேரமோ... சிவபெருமானின் அனுமதியின்றித் தன் தந்தை தட்சன் நடத்திய யாகத்துக்குச் சென்ற தாட்சாயினி, அங்கே



அவமானப்படுத்தப்பட்டு, பிராணத்தியாகம் செய்தாள். உமையைப் பிரிந்த ஈஸ்வரன் ருத்ரனாகி, கடுந்தவத்தில் ஈடுபட்டார். சக்தி ஒருபுறம், சிவன் ஒருபுறம் என்று பிரிந்திருக்கின்ற நிலையில், சூரபத்மன் பயம் ஏதுமின்றி அதர்மங்கள் புரிந்து வந்தான்.

காலம் எப்போதும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகச் செல்வது இல்லை. தேவர் களின் பிரார்த்தனை நிறைவேறும் சூழல் உருவானது. அன்னை உமை, பர்வத ராஜனின் புதல்வி பார்வதியாக அவதரித்து, சிவனாரைக் குறித்துக் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்தாள். இந்த வேளையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தேவர்கள் விரும்பினர். சிவனும், சக்தியும் இணைந்து ஒரு தேவ புருஷ னை உருவாக்கினால்தான், சூரனை அழிக்க முடியும் என்று அவர்கள் கருதினர். ஈசனின் உக்ர சக்தியையும், பார்வதியின் பக்தி பாவத்தையும் ஒருமுகப்படுத்த, காமதேவனை கருவியாகப் பயன்படுத்த விரும்பினார்கள் தேவர்கள்.

படைக்கப்பட்ட ஜீவன்களில் ஆண்- பெண் பாகுபாடு உண்டு. அவர்களிடையே காமன் எய்யும் மலர்க்கணை, பிரேமையை உருவாக்க முடியும். ஆனால், காமனையே உருவாக்கிய கடவுளுக்கு இந்த விதிகள் கட்டுப்படுமா? பரமேஸ்வரனைப் பார்வதியிடம் ஈடுபடச் செய்யும் நோக்கத்துடன் காமன் எய்த கணை, பரமேஸ்வரனின் கோபாக்னியைக் கிளப்பிக் காமனைச் சுட்டெரித்தது.

சர்வேஸ்வரன் சங்கல்பம் இல்லாமல் எதுவும் நிகழாது என்பதைத் தேவர்கள் அறிந்து கொண்டனர். குறைகளைக் கூறி முறையிடத்தான் அவர்களுக்கு அதிகாரம் இருந்ததே தவிர, குறைகளைத் தீர்க்கும் வழிமுறைகளை, அவர்களாகவே தீர்மானித்துக்கொள்ள அதிகாரம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினார் மஹாதேவன். தேவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்தபின், அவர்களுக்காக மனமிரங்கி, ஒரு மார்க்கத்தையும் வகுத்துத் தந்தார், மஹேஸ்வரன். பார்வதிக்கு அருள்பாலித்து, அவளை ஏற்றுக் கொண்டார்.

நெற்றிக்கண்ணில் தோன்றிய ஒளி மிக்க நெருப்புப் பொறிகளில், சுப்ரமணியனை உருவாக்கினார். அவனைத் தன் சக்தியை மட்டுமே கொண்டு, அக்னி ஸ்வரூபனாக உருவாக்கினாரே தவிர, உமையோடு இணைந்து உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிவனும் பார்வதியும் இணைந்து தோன்றும் சக்தி ஒன்றினால்தான் சூரபத்மன் அழிவுக்கு வழி உண்டு. அது அவன் பெற்ற வரத்தின் மகிமை. எனவே, முருகனின் தோற்றமும் சூரபத்மனுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.



அழகுக்கும் அறிவுக்கும் சிறந்த ஞானத்துக்கும் எடுத்துக்காட்டின, அற்புதமான தெய்வ வடிவம் முருகன். அவன் அதர்மத்தைக் கண்டிப்பவன் தண்டிப்பவன் அல்ல! அவனது அவதார நோக்கமே சூரனை ஆட்கொண்டு, தேவர்கள் வாழ்வை வளம் பெறச் செய்வதுதான். தேவசேனாதிபதியாக போர் முரசம் கொட்டிப் புறப்படும் முன், அன்னை பார்வதிதேவி, "அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட', தன் சக்தியை எல்லாம் ஒன்றாக்கி, வேல் ஒன்றை முருகனுக்கு வழங்கினாள்.

வேல் அறிவின் சின்னம். அறிவு அகலமானது ஆழமானது கூர்மையானது. இந்த மூன்று தன்மையையும் நாம் வேலிலும் காண்கிறோம். வேல் என்பது அழிக்கும் சக்தியல்ல ஆக்கும் சக்தி ஆபத்துகளிலிருந்து காக்கும் சக்தி. சிவனும் சக்தியும் இணைந்தால்தான் சூரன் அழிவான். இங்கே சிவகுமாரன் சுப்ரமணியன், சக்தி தந்த வேலைப் பெற்றுக்கொண்டதால், சிவசக்தி ஸ்வரூபனாக ஆகிவிடுகின்றான். அன்னை கொடுத்த அந்த வேல், சக்திவேல்! அது ஞானவேல், வீரவேல், வெற்றிவேல்!

வேலைத் தாங்கிய வேலவன் சூரபத்மனை அழிக்கப் புறப்பட்டு, தன்னை எதிர்த்த தாரகன் மற்றும் சிங்கமுகன் ஆகியோரை அழித்து, இறுதியில் சூரபத்மனை எதிர்த்து நின்றான்.

தான் பெற்ற வரங்கள், செல்வங்கள், தன்னைச் சுற்றியுள்ள அரக்கர்கள் பலம் ஆகியவற்றை நம்பி, அதுவரை இறுமாந் திருந்தான் சூரபத்மன். ஆனால், போரில் தன் தம்பியரையும், தன் கூட்டத்தினரையும், நாடு- நகரங்களையும் இழந்து, தனியாக நின்று போர் புரியும்போது, எதிரில் நிற்பது சிவசக்தியின் அம்சம் என்று உணர்ந்தான்.

சிவனாலும் அழிவில்லை சக்தியாலும் அழிவில்லை என்று வரம் பெற்றிருந்த சூரபத்மன், அந்தக் கடைசி நேரத்தில், தான் பெற்றிருந்த வரத்தின் பலனை- தனது சக்தியை எல்லாம் சிவார்ப்பணம் செய்து, களத்திலேயே தன் உதிரத்தால் பூமிக்கு தாரை வார்த்தான். அழிவே வரக்கூடாது என்று வரம் கேட்டபோதும், அழிவு அவனைத் தேடி வந்து கொண்டிருந்தது. அதைத் தடுப்பதற்குத் தான் பெற்ற தவப்பலனையெல்லாம் தானம் செய்தபோது, அந்தப் புண்ணியம் அவனை அழிக்காமல் காக்கும் அரணாக நின்றது.

சக்திவேலில் பிரணவத்தை ஓதி, சூரனின் மார்பை நோக்கி எறிந்தான் முருகன். அந்த ஒரு கணத்தில் சூரன் ஒரு மாமரமாகி நின்றான். வேல், மரத்தை இருகூறாகப் பிளந்தது. ஒரு கூறு சேவலாகவும், மறு கூறு மயிலாகவும் மாறியது. சேவலைத் தன் கொடியில் இருக்கச் செய்து, மயிலைத் தனக்கு வாகனமாக்கிக் கொண்டான் முருகன். முருகப் பெருமான் எய்த வேல் அவனது கரத்துக்கே திரும்பி வந்தது. இந்த வரலாற்றை, தமிழில் இருபொருள்படக் கூறுவர். "கந்தன் சட்டியில் மாவறுத்தான்' என்ற வாசகத்தின் பொருள்... கந்தனாகிய முருகன், சஷ்டி திதியில் மாமரமாக நின்ற சூரனை இருகூறாக்கினான் என்பதுதான்.

முருகனை வழிபடுகையில், அவன் கரத்தில் உள்ள சேவற் கொடியையும், வாகனமான மயிலையும் சேர்த்தே வணங்குகிறோம். சூரனாகவும் பத்மனாகவும் தோன்றி, சூரபத்மனாக வாழ்ந்தவன், மீண்டும் இரு கூறாகி, சேவலாகவும் மயிலாகவும் முருகனுக்குச் சேவை செய்யும் பாக்கியம் பெற்று, அனைவராலும் வணங்கப்படும் தகுதி பெற்றான்.

"அசுரனை வணங்கலாமா?'

என்ற கேள்வி பிறக்கலாம். ஆண்டவன் வடிவில் ஒரு அம்சமான பிறகு, அசுரனும் தேவனாகிவிடுகிறான்.

சுப்ரமணியன் சூரனைச் சம்ஹாரம் செய்யவில்லை ஆணவமழித்தாட்கொண்டருளினான். அந்தத் திருநாள்தான் கந்த சஷ்டி!



# கிளிநொச்சியில் யோகசுவாமிகளின் திருவுருவச்சிலை

இ.தனஞ்சயன் (கொழும்புத்துறை)

ஈழத்துச் சிவஞானி பரம்பரையிலே சிறப்பிற்குரியவர் யோகசுவாமிகள். தவத்தின் வலிமையாலும், குரு செல்லப்பா சுவாமிகளின் அனுக்கிரகத்தாலும், யோகநாதன் எனும் இயற்பெயர் மருவி, யோகசுவாமிகளாக மாற்றம் பெற்று ஈழத்து இந்துக்கள் மனதில் நீங்காத நினைவுள்ள பெயராக நிலைபெறும் அளவிற்கு பெரும் ஞானியாக வாழ்ந்தார். இவருடைய கருத்துக்கள், போதனைகள், நற்சிந்தனைகள், பணிகள் போன்றன ஈழத்தில் மட்டுமின்றி உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் தற்பொழுது வியாபித்து இருப்பதனை நாம் காணக்கூடியதாக உள்ளது.

தனது ஆரம்பக் கல்வியை கொழும்புத்துறையில் அமைந்திருந்த பாடசாலையிலும் உயர் கல்வி மற்றும் ஆங்கிலக் கல்வியை சம்பத்தரிசியார் கல்லூரியிலும் கற்றுத்தேர்ந்து சிறிது காலத்தின் பின்பு அரச உத்தியோகத்திலும் தன்னை இணைத்துக் கொண்டார். கிளிநொச்சியில் இரணைமடுக்குளத் திட்டத்தில் களஞ்சியப் பாதுகாவலராக தன் பணியை ஆரம்பித்தார்.

கிளிநொச்சியில் வேலை செய்த காலகட்டங்களிலேயே அவர் மனம் ஆன்மீகத்தின் பக்கம் நாட்டம் கொண்டது எனலாம். வேலை தவிர்ந்த ஓய்வு நேரத்தில் மௌனமாய் அமர்ந்திருந்து இறை சிந்தனையில் தியானித்தார். அதுமட்டுமன்றி பெறும் ஊதியத்தின் பெரும் பகுதியில் நூல்களை கொள்வனவு செய்து வாசித்தறிந்தார். தேவார திருமுறைகள், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தடிகளின் திருநூல்கள், சைவத் திருமுறைகள், தமிழ் மறையாம் திருக்குறள், சித்தர் பாடல்கள் என பலவாறான தமிழ், ஆங்கிலம், வடமொழியில் அமைந்த ஞானநூல்களைக் கற்றறிந்து கொண்டார்.

இவ்வாறு வேலை நேரம் தவிர்ந்த பிற நேரங்களில் இறை தியானத்திலும், சைவத்திருப்பணிகளிலும் தனது ஆன்மீக வாழ்வினைக் கிளிநொச்சியில் ஆரம்பித்தார். தான் தங்கிய விடுதியிலும் அருகில் உள்ள சோலைகளிலும் தியானத்தில் ஈடுபட்டார். இதுவே யோகசுவாமி அவர்களின் ஆன்மீகவாழ்வின் ஆரம்பக் கட்டமாகக் கூறிக்கொள்ளமுடியும். இக்காலத்திலே தான் அவருள் ஆன்மீக ஈர்ப்பு உருவானது. சில நேரங்களில் ஆலயத் தொண்டுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அதுமட்டுமல்லாது மரங்களை நாட்டி வளர்ப்பதிலும் ஆர்வத்துடன் பணி செய்தார். சுவாமிகளால் தியானம் செய்த இடத்தில் கனிதரு மரங்களை நாட்டிப் பராமரித்தும் வந்துள்ளார். இதில் சுவாமிகளால் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்த மாமரம் ஒன்று விருட்சமாக வளர்ந்து காணப்பட்டது. இம் மாமரம் பின்நாட்களில் சுவாமியார் மரம் என்று அழைக்கப்படும் அளவிற்குச் சிறப்பு பெற்றது.

யோகசுவாமிகளின் ஆன்மீக வாழ்வின் அடுத்த கட்டங்களாக யாழ்ப்பாணத்திலே சுவாமி விவேகானந்தரின் ஆன்மீகச் சொற்பொழிவில் கலந்து கொண்டமையும், பின் நாட்களில் நல்லூரிலே செல்லப்பா சுவாமிகளின் தரிசனம் போன்ற சந்திப்புக்களையும் கூறிக்கொள்ளலாம். "யாரடாநீ யென்று அதட்டினான் அன்றேயான் பெற்றேன் அருள்" என்று யோக சுவாமிகள் நற்சிந்தனையில் கூறியுள்ளதையும் காணலாம். இதனைத் தொடர்ந்து அரச உத்தியோகம், புறவாழ்வியல் பற்றுக்களை விடுத்து தனது குருவான செல்லப்பா சுவாமிகளின் ஞான உபதேசங்களை ஏற்று ஞானநிட்டையில் நிலைத்திருந்து கொழும்புத்துறை ஓலைக்குடிசையில் முக்காலத்தையும் தனது ஞானதிருஷ்டியினால் கணித்துக் கூறும் ஆற்றல் பெற்றவராய் ஈழத்துப் பெரும் சிவஞானி ஆனார் யோக சுவாமிகள்.

இவ்வண்ணம் தன் அடியவர்களுக்கு அருளும் யோகசுவாமிகளின் அடியார்கள் சிறிய தியான மண்டபம் ஒன்றைக் கிளிநொச்சியில் சுவாமிகள் தங்கிய விடுதியில் அமைத்து வழிபட்டு வந்தனர். ஈழத்திலே நீண்டகாலமாக நடைபெற்ற ஆயுதப்போராட்டம் காரணமாக முன்பிருந்த தியான மண்டபம் முற்றிலும் அழிவடைந்தது. அதுமட்டுமல்லாது சுவாமிகளால் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த மாமரமும் அழிவடைந்தது.

யுத்தம் முடிவுறுத்தப்பட்ட பின்னர் சிவதொண்டன் சபையாரிடம் சிறிய தியான மண்டபம் அமைந்த இடம் மீண்டும் கையளிக்கப்பட்டது. அவ்விடத்தில் யோகசுவாமிகளின் திருவுருவச்சிலை சுவாமிகளின் அவதார நாளாகிய வைகாசி அவிட்ட நட்சத்திர நாளிலே அதாவது 5ம் நாள் ஆனி மாதம் 2018ம் ஆண்டு கண்டி வீதி கிளிநொச்சியில் பிரதிட்டை செய்யப்பட்டது. தியான நிலையில் அமர்ந்துள்ள யோகசுவாமிகளின் திருவுருவச் சிலை ஏழு அடி உயரமான பீடத்தின் மேல் அமைந்துள்ளது. ஏறத்தாழ ஐந்து அடி உயரத்தை கொண்ட திருவுருவச்சிலை, யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த திரு. பத்மநாதன் என்பவரால் உருவாக்கப்பட்டு சிவதொண்டன் நிலையத்தினரால் திறந்துவைக்கப்பட்டுபராமரிக்கப்படுவதும் மேலும் சிறப்புக்குரியது. முன்னமைந்த தியான மண்டபத்தைப் போன்று எதிர்காலங்களில் புதிதாகத் தியான மண்டபத்தினை அமைப்பதற்கும் யோகசுவாமிகளின் அனுக்கிரகம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.





# தமிழர் திருநாளாம் தைப்பொங்கல்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதங்களில் முக்கியமானது தை. தை மாதத்தின் பிறப்பை அறுவடைத் திருநாளாக, பொங்கல் தினமாக உலகத் தமிழினம் கொண்டாடி வருகிறது.

தமிழர் திருநாள்... தைப் பொங்கல், அறுவடைத் திருநாள் எனவும் கூறப்படும் பொங்கல் பண்டிகை, தமிழர் பண்டிகை ஆகும். பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாக கொண்டாடப்படுகிறது. தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டில் வெகு விமரிசையாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை, மலேசியா, கனடா, சிங்கப்பூர், இலங்கை, மொரீஷியஸ் உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளிலும் கூட விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். மலேசியா,இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் பொங்கல் பண்டிகையன்று அரசு விடுமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட (முதற்சங்கம் 4400 ஆண்டுகள், இடைச்சங்கம் 3700 ஆண்டுகள், கடைச்சங்கம் 1850 ஆண்டுகள் (மதுரை பல்கலைக்கழக தமிழ்த்துறை ஆய்வு)) சங்ககாலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும் பெண்கள் விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த விரதத்தை முடிப்பார்கள். உழவர்கள் மழையின் உதவியால் ஆடி மாதம் முதல் உழைத்துச் சேர்த்த நெல்லை மார்கழியில் வீட்டிற்குக் கொண்டு வந்து தமது உழைப்பின் பயனை நுகரத் தொடங்கும் நாளே தைப்பொங்கல். உழைக்கும் தமிழ் மக்கள் தாமே கண்டுணர்ந்து, தமது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும், தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், தமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்தது வழிபட்டனர்.

நீர் வளம் கொண்ட இடங்களில் மூன்று வேளாண்மை நடக்கும். நீர் வளமில்லா இடங்களில் மழை நீர்த் தேக்கத்தால் ஒரு வேளாண்மைதான் விளைக்க முடியும். ஆகவே, மார்கழி அல்லது தை மாத அறுவடையே நாடெங்கும் நிகழும். அறுவடை முடிந்து பெற்ற புத்தரிசி, கரும்பு, மஞ்சள், பனங்கிழங்கு, நம்முடைய கொடிவழிக் காய்கறிகள் (குறிப்பாக அவரை, புடலை, கத்திரி, வாழை, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு போன்றவையே படையலாக வைக்கப்படும். செந்நெற் பச்சரிசியைப் பெரும்பாலும் தவிடு போக்காமல் நீர் சேர்த்துச் சமைத்து பருப்புக் குழம்புடன் உண்பதும் மரபு. பொங்கு என்ற சொல் கொதித்தல், மிகுதல், சமைத்தல், செழித்தல் எனப் பொருள்படும். பொங்குவதால் பொங்கல். பொங்கல் விழாவை தமிழர் என்னும் இனக்குழு தொடர்பான விழா என்று தெளிவாக உணரமுடியும்.

பொங்கல் பண்டிகை மொத்தம் நான்கு நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. முதல் நாள் போகி பண்டிகை. அடுத்த நாள் பொங்கலிடும் நாள். 3வது நாள் மாட்டுப் பொங்கல் நமக்கு காலமெல்லாம் கை கொடுத்து உதவும் மழை, சூரியன் விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகள் ஆகியவற்றுக்கு நன்றி கூறும் நல் வாய்ப்பாக இந்த திருநாள் கொண்டாடப்படுகிறது.

### போ(க்)கிப் பண்டிகை

போ(க்)கிப்பண்டிகையானது தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளாகிய பொங்கல் திருநாளின் முதல்நாள் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் "பழையன கழித்து, புதியன புகவிடும்" நாளாகக் கருதப்படுகிறது. பழையவற்றையும், உபயோகமற்றவையும் விட்டெறியும் நாளாகக் கருதப்படுகிறது. போகியன்று, வீட்டின் கூரையில் "பூலாப்பூ" செருகப்படும். அன்றைய தினம், வீட்டில் தேங்கிப் போயிருக்கும் குப்பைகள் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தப்பட்டு வீடு சுத்தமாக்கப்படும். அது பொருளாகவும் இருக்கட்டும் மனிதனிடம் உள்ள தீய குணமாகவும் இருக்கட்டும். பழைய பொருட்களைத் தீயிட்டு எரிக்கும் குறியீட்டுடன் நமக்கு உணர்த்தப்படுவது, கொழுந்து விட்டெரியும் தீபோன்ற தீய குணங்களை உன் உளத்திலிருந்து வெளியே போட்டுவிடு என்பதாகும்.



இதையொட்டியே பொங்கலுக்கு முன் வீட்டிற்கு புது வர்ணம் பூசி வீட்டை அழகு படுத்துகிறார்கள். பொங்கல் சமயத்தில் வீடு புதுப் பொலிவுடன் காணப்படும். இது கிராமங்களில் பொங்கல் சமயத்தில் காணக் கிடைக்கும் இனிய காட்சியாகும். பழந்துயரங்களை அழிப்பதான இப்பண்டிகையைப் "போக்கி" என்றனர். அந்தச் சொல் நாளடைவில் மருவி "போகி" என்றாகிவிட்டது. அக்கால வழக்கப்படி வருடத்தின் கடைசிநாள் என்பதால் நடந்து முடிந்த நல் நிகழ்வுகளுக்கு நன்றி கூறும் நாள் போகி என்போரும் உண்டு. போகிப் பண்டிகையின் போது போளி, வடை, பாயசம் போன்றவை இறைவனுக்கு நிவேதனம் செய்யப்படும்.



### பொங்கல் பண்டிகை

2ஆவது நாளான பொங்கல், விசேஷமானது. தை மாதப்பிறப்பு நாள் இது. பொங்கலன்று அதிகாலை எழுந்து தலையில் நீராடுவர். வீட்டு முற்றத்தில் பசுஞ்சாணத்தினால் மெழுகி, அரிசிமாக் கோலம் இட்டு, தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி பொங்கலிடத் தொடங்குவர். கோலத்தின் நடுவில் அடுப்பு அமைத்து அதில் புதுப்பானை எடுத்து, மஞ்சள் உள்ளிட்டவற்றை பானையைச் சுற்றிக் கட்டி, புதுப் பாலில், புது அரிசியிட்டு, வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கலிடுவார்கள். புதிய மஞ்சள் கொத்தையும் புதிய கரும்பையும் புதிய காய்கறிகளையும் அன்று பயன்படுத்துவர். சாணத்தில் பிள்ளையார் பிடித்தும் வைப்பார்கள். பொங்கல் பொங்கி வரும் வேளையில் குடும்பத் தலைவன்,






மனைவி மக்களுடன் கூடி நின்று "பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!" என்று உரக்கக் கூவி அரிசியை இருகைகளாலும் அள்ளிப் பானையில் இடுவர். தனது முதற் பயனை கதிரவனுக்குப் படைத்துப் பின் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்த பின்பே தான் நுகர்வான். இது தமிழரின் பண்பாடாக தொன்று தொட்டு உள்ளது என்பர். வீட்டுக்கு வெளியே சூரியன் இருக்கும் திசையை நோக்கி இந்த பொங்கலிடும் நிகழ்ச்சி நடைபெறும். அரிசி நன்கு சமைந்து, பொங்கி வரும்போது குலவையிட்டும், "பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக" என்ற குரலோடு பொங்கல் பானையை இறக்க வேண்டும். நன்கு பொங்கி வந்தால் அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும், நலமும் நிலவும் என்பது ஐதீகம்.

**மாட்டுப் பொங்கல் / பட்டிப் பொங்கல்**

3வது நாள் விழா மாட்டுப் பொங்கல். மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும். மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டாடுகின்றனர்.

அன்று மாடுகள் கட்டும் தொழுவத்தினை புதுப்பொலிவுபெறச் செய்து, கால்நடைகளை குளிப்பாட்டி சுத்தம் செய்வார்கள். மாடுகளின் கொம்புகள் சீவப்பட்டு பளபளக்கும் வகையில் வண்ணம் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டிவிடுவார்கள். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் 'ஜல், ஜல்' சலங்கை கட்டி அழகு படுத்துவார்கள். திருநீறு பூசி குங்குமப் பொட்டிட்டும் புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும் தயார் செய்வார்கள்.

விவசாயத்தில் பயன் படுத்தப்படும் அனைத்து கருவிகளையும் சுத்தம் செய்து சந்தனம், குங்குமம் வைப்பார்கள். தாம்பாளத் தட்டுகளில் தோட்டம் காடுகளில் விளைந்த பயிர், பச்சைகளை வைத்தும் தேங்காய், பூ, பழம், நாட்டுச் சர்க்கரை என எல்லாம் பூசைக்காக எடுத்து வைப்பார்கள். தொழுவத்திலேயே பொங்கல் பொங்கி கற்பூர தீபாராதனை காட்டப்படும். இதன் பின் பசு, காளை, எருமை என அனைத்து கால்நடைகளுக்கும் பொங்கல், பழம் கொடுப்பார்கள்.



பண்டையகாலம் தொட்டு ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டும் நடைபெற்று வந்தமையை இங்கு நாம் பெருமையுடன் நினைத்துப் பார்க்க வேண்டும். இப்போதும் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் காளை பிடிக்கும் ஜல்லிக்கட்டு விளையாட்டு இந்நாளில் நடைபெறும்.

உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நாளே இந்நாளாகும். பொங்கலிட்ட பிறகு 'எச்சில் தண்ணீர் தெளித்தல்' என்றொரு மரபும் உண்டு. "பொங்கலோ பொங்கல் மாட்டு பொங்கல் பட்டி பெருக பால் பானை பொங்க நோவும் பிணியும் தெருவோடு போக" என்று கூறி மாடு பொங்கல் உண்ட எச்சில் தண்ணீரை தொழுவத்தில் தெளிப்பர்.

**காணும் பொங்கல்**

காணும் பொங்கல் என்பது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள் இடம்பெறும் விழா ஆகும். காணும் பொங்கலை கன்னிப் பொங்கல் அல்லது கணுப் பண்டிகை என்றும் அழைப்பர். உற்றார், உறவினர், நண்பர்களை காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் என்பன அடங்கும். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டி மன்றம், உறி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல் என்று வீர சாகசப் போட்டிகளிலிருந்து சகலமும் இடம் பெறும். இது பெண்களுக்கு முக்கியமான பண்டிகை ஆகும். பொங்கல் பானை வைக்கும்போது அதில் கட்டிய புது மஞ்சள்கொத்தினை எடுத்து முதிய தீர்க்க சுமங்கலிகள் ஐவர் கையில் கொடுத்து ஆசி பெற்று அதனை கல்லில் இழைத்து பாதத்தில் முகத்தில் பூசிக்கொள்வார்கள்.

**கரும்பு-ஜல்லிக்கட்டு-பொங்கல்..**

பொங்கல் பண்டிகையின் மூன்று முக்கிய அம்சங்கள், கரும்பு, ஜல்லிக்கட்டு, இனிப்புப் பொங்கல்தான். இவை இல்லாமல் பொங்கல் நிறைவடையாது. அன்று முழுவதும் கரும்பு சாப்பிடுவர்களும் இருக்கிறார்கள். அதேபோல பொங்கல் பண்டிகையின்போது கிராமங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளும் விசேடமானவை. அலங்காநல்லூர், பாலமேடு, காஞ்சரம்பேட்டை ஆகியவை ஜல்லிக்கட்டுக்கு பெயர் போனவை. இதில் அலங்காநல்லூர் உலகப் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு களமாகும். தமிழர்களின் திருநாளாக, உழவர் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை, உலகின் பல்வேறு நாடுகளிலும் பரவி வாழும் தமிழர்கள் கொண்டாடிவருவதும் நன்றியுடன் நோக்கப்படவேண்டியதே. அதேசமயம், பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் பட்டு வரும் பல்வேறு அவதிகள் ஒழிந்து, வரும் ஆண்டில் எல்லா வளமும், நலமும் பெற்று அமைதியுடன் வாழவும் சூரிய தேவனைப் பிரார்த்திப்போம்.

# தைப்பூசம்



தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் தைப்பூசத் திருவிழா மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. கடல் கடந்து சென்ற தமிழர்கள் தங்களுடன் எடுத்துச் சென்றது இரண்டே விஷயம்தான். ஒன்று எதிர்பார்ப்பு மற்றொன்று நம்பிக்கை. தங்களுடைய வாழ்வு செழிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இருந்தவர்கள், பல விஷயங்களில் தம்முள் வேரூன்றியிருந்த நம்பிக்கையை வாழ்வின் பிடிமானமாகக் கொண்டிருந்தனர்.

அவற்றில் இறைநம்பிக்கை முக்கியபங்கு வகிக்க, இந்த நம்பிக்கையைத் தம்முடைய அடுத்த சந்ததியினரின் மனதிலும் விதைத்தனர். பல தலைமுறையினரைக் கடந்து வந்துள்ள இந்த நம்பிக்கையின் அடிப்படையில் நாம் பல விழாக்களை விமரிசையாகக் கொண்டாடினாலும் தைப்பூசம் என்றுமே தனித்திருக்கும் ஒரு முக்கியத் திருவிழா.

ஆண்டாண்டு காலமாய் தை மாதத்தில் வரும் பௌர்ணமியும் பூச நட்சத்திரமும் கூடிய நாளை தைப்பூசத் திருநாளாகக் கொண்டாடி வருகிறோம். மற்ற மாதங்களில் வரும் பூச நட்சத்திரங்களைவிட தை மாதத்தில் வரும் பூச நட்சத்திற்கு சிறப்பான "நட்சத்திர அந்தஸ்து" உண்டு. காரணம் பல ஆன்மிக அற்புதங்கள் இந்த நன்னாளில் நிகழ்ந்திருக்கின்றன.

நவக்கிரகங்களில், சூரியன் சிவாம்சம் கொண்டவர். இவர் தை மாதத்தில் தன் வடதிசைப் பயணத்தை தொடங்குகிறார். இதனை உத்தராயண புண்ணிய காலம் என்பர். இவர் இந்த மாதத்தில் மகரராசியில் இருக்கிறார். சக்தியின் அம்சமாக திகழ்பவர் சந்திரன். தைப்பூச நாளில் சந்திரன் ஆட்சி பலத்தோடு கடகராசியில் சஞ்சரிக்கிறார். அன்று, மகரத்தில் இருக்கும் சூரியனும், கடகத்தில் இருக்கும் சந்திரனும் ஒருவருக்கொருவர் பலத்தோடு பார்த்துக்கொள்வர். இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? அம்பிகை சிவகாமி கண்டு களிக்க, பரம்பொருளான சிவன், நடராஜராக ஆனந்த தாண்டவம் ஆடுகிறார். மார்கழி திருவாதிரையில் இறைவன் தனித்து ஆடுகிறார். தைப்பூசநாளில் சிவபார்வதி இணைந்து ஆடுவதாகவும் சொல்வர். நடனமாடினால் மகிழ்ச்சி பிறக்கும். அந்த மகிழ்ச்சியில் திளைக்கும் இறைவனிடம் நாம் வேண்டியதைப் பெறலாம் என்பதால் இந்நாளை வழிபாட்டுக்குரிய நாளாக நிர்ணயித்தனர். இல்லற வாழ்வில் பெறும் இன்பத்தின் அடையாளம் குழந்தை. அம்மையப்பரான சிவ பார்வதி, மகிழ்ந்திருந்து நமக்களித்த ஞானக் குழந்தை முருகன். அவ்வகையில், பெற்றோருக்குரிய தைப்பூசம் - சிவசக்தி சொரூபமான பிள்ளைக்கும் சிறப்பான நாளாக அமைந்தது. தைப்பூசநாளில் சிவபார்வதி, முருகப் பெருமானை தரிசித்து வேண்டிய வரம் பெறுவோம்.



**தைப்பூச திருநாளில் சிறப்பு!**

தைப்பூசம், பல ஆன்மிக அற்புதங்கள் நிறைந்த புண்ணிய தினம் இது. முதன்முதலாக நீரும், அதிலிருந்து உலகமும் தோன்றியது தைப்பூசத்தன்றுதான் என்கின்றன புராண நூல்கள்.



சூரபதுமனை அழிக்க முருகப் பெருமானுக்கு ஞானவித்தையின் சொரூபமான வேலாயுதத்தை சக்திதேவி தந்ததும் இந்த நாளில்தான்.

பழநி முதலாக முருகன் திருத்தலங்கள் தைப்பூசம் வெகுவிசேஷம். தாமிரபரணியின் கரையில் தவமிருந்த ஸ்ரீ காந்திமதிக்கு நெல்லையப்பர் அருள்பாலித்த திருநாளும் இதுவே. தைப்பூசத்தன்று நெல்லைப்பர் கோயில் விழாக்கோலம் காணும்.

தைப்பூச திருநாளில்தான் திருஞானசம்பந்தர் பதிகம் பாடி பூம்பாவையை உயிர்பித்ததாக விவரிக்கிறது மயிலாப்பூர் தலபுராணம்.

பண்டைக்கால தமிழகத்தில் தைப்பூசத்தன்று புனித நீராடுதல் மிகுந்த பக்தி உணர்வோடு கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது

**"பூசம் நாம் புகுதும் புனல் ஆடவே"**

என்று தைப்பூசத் திருநாளன்று நீராடுவது பற்றி அப்பர் பெருமான் பாடுகிறார்.

மயிலையில் தைப்பூச விழா கொண்டாடியது பற்றியும் அப்போது அன்னதானம் செய்தது பற்றியும் ஞானசம்பந்தர் தேவாரத்தில், (சம்பந்தர் தேவாரம், திருமயிலைப் பதிகம், பா.எண். 5)

**மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்**
**கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம மர்ந்தான்**
**நெய்ப்பூசு மொன்புழுக்க னேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்"**



என்று குறிப்பிடுகின்றார். தைப்பூசத் திருவிழாவைக் கண்ணாரக் கண்டுகளித்தல் முக்கியமானது என்று உணர்த்துகிறது இந்தப் பாடல். தைநீராடுதல் பூச நட்சத்திரம் கூடிய நன்னாளில் நடைபெறும்.

நட்சத்திரங்களின் தலைவனாக புராணங்களில் சொல்லப்படும் வியாழபகவான் என்னும் தேவ குருவை பூசிப்பதாகக் கொள்வர். பிரகஸ்பதி அறிவின் தெய்வமாகக் கருதப்படுபவர். எனவே தைப்பூசத்தன்று புனித நீர் நிலைகளில் நீராடி குருவை வழிபட கல்வி - கேள்வி - ஞானம் ஆகியவற்றில் சிறந்து விளங்கலாம் என்பது நம்பிக்கை. குரு பகவானுக்கே குருவாக, கல்லால மரத்தின் கீழ் உபதேசித்த சிவபெருமானுக்கும், சிவனார் மனங்குளிர, குரவாக இருந்து பிரணவ மந்திரம் உபதேசித்த முருகப் பெருமானுக்கும் இப் பூசநாள் உகந்தது.

இம்மாதிரியான ஒரு தைப்பூச நாளில்தான் நடராஜப் பெருமான் பதஞ்சலி, வியாக்கிரபாதருக்குத் தமது திருதாண்டவத்தைக் காட்சியருளினார்.

சிவ அம்சமாக அவதரித்த முருகப் பெருமான் சக்தி அம்சத்தையும் ஒன்றுசேர்க்க அன்னையை வழிபட்டு சூரசங்காரத்திற்காக வேல் வாங்கிய திருநாளும் இதுவாக அமைகிறது.

தைப்பூசத் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது என்பது பல கல்வெட்டுகளால் நமக்குப் புலனாகிறது. திருவிடைமருதூர் ஜோதி மகாலிங்கசுவாமி கோயிலில் தைப்பூசம் சிறப்பாக நடந்ததை கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

தஞ்சை மாவட்டம், திருவேடிக்குடியிலுள்ள வேதபுரீசுவரர் கோயில், திருவடி பஞ்சநதிசுவரன் கோயில் ஆகியவற்றிலும் தைப்பூசம் சிறப்பாக நடைபெற்றதையும், அதற்கு நிலங்கள் தானமாக அளிக்கப்பட்ட செய்தியையும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

பழனியில் தைப்பூசத் திருவிழா பத்து நாள்கள் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் பழனி முருகன் கோயிலுக்கு பாத யாத்திரையாக வருகிறார்கள். இவ்வாறு பாத யாத்திரை செல்வதால் பக்தர்களுக்கு ஆன்ம பலமும், உடல் நலமும் ஒருங்கே பெருகுகிறது. மன உளைச்சல் அகன்று உள்ளத்தில் உற்சாகம் பிறக்கிறது.

தொழில் காரணமாகவும், வணிகத்தின் பொருட்டும் வெளி நாடுகளுக்கு குடி பெயர்ந்து சென்ற தமிழர்கள் முருக வழிபாட்டு நெறியையும் உடன்கொண்டு சென்றார்கள் என்றே சொல்லலாம். மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பினாங்கு, செய்கோன், மொரீஷியஸ் முதலிய வெளிநாடுகளிலும் தைப்பூசத் திருவிழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

### தைப்பூச மஞ்சம்

இலங்கையில் குறிப்பாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலும், இணுவில் கந்தசுவாமி கோயிலிலும் மிக விமரிசையாக தைப்பூச வழிபாடுகளும் தேரோட்டமும் இடம்பெறும்.

### இணுவில் கந்தசுவாமி கோயில் உலகப்பெருமஞ்சம்

யாழ்ப்பாண இராச்சியத்தின் தொடக்க காலத்தில் இணுவில் பகுதியின் ஆட்சியாளனாகப் பேராயிரவன் என்பவன் நியமிக்கப்பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவனது வழி வந்த கனகராச முதலி என்பவன் பிற்காலத்தில் இப்பகுதியில் ஆட்சித் தலைவனாக விளங்கினான். இவன் காலத்திலேயே இணுவில் கந்தசாமி கோயில் தோற்றம் பெற்றதாகச் செவிவழிக் கதைகள் தெரிவிக்கின்றன.

யாழ். இணுவில் கிராமத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிக்க கந்தசுவாமி கோவிலில் தைப்பூச திருநாளில் உலகத்தின் அதிஉயரமான மஞ்சம் என வர்ணிக்கப்படும் உலகப்பெரு மஞ்சம் .

வள்ளி-தெய்வானை சமேதரராய் ஆறுமுகப்பெருமான் தைப்பூச திருநாளில் மஞ்சத்தில் எழுந்தருள யாழ். குடாநாட்டில் இருந்தும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு வழிபடுவர்.

1891 ஆம் ஆண்டளவில் பெரிய சந்நியாசியார் என அழைக்கப்பட்ட ஆறுமுகம் சந்நியாசியார் இக் கோயில் திருப்பணிகளில் ஈடுபடலானார். இவரது முயற்சியினால், இக்கோயிலுக்காக மஞ்ச வாகனம் ஒன்றைச் செய்யும் பணிகள் 1910 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட சிற்ப வல்லுனர்கள் இப் பணியில் ஈடுபட்டனர். உலகப் பெருமஞ்சம் என ஊரவர்களால் குறிப்பிடப்படும் இப் புகழ் பெற்ற மஞ்சம் 1912 ஆம் ஆண்டில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

முப்பத்தைந்து அடி உயரமான இந்த திருமஞ்சத்திற்கு நான்கு சில்லும், மேலே ஐந்து கலசங்களும் பொருத்தப் பெற்றுள்ளன. இந்த அருமையான மஞ்சத்தில் வள்ளி, தெய்வயானை சமேதரமாக ஆறுமுக சுவாமி கொலுவிருந்து மகோற்சவத்தில் பன்னிரண்டாம் திருவிழாவன்றும், தைப்பூசத் திருநாளன்றும் திருவீதியில் ஊர்ந்து வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.



ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலத்தை எட்டிப்பிடித்துள்ள இந்த மஞ்சத்தைப் போன்று ஒரு மஞ்சம் இலங்கையிலோ, இந்தியாவிலோ, வேறு எங்குமோ காணமுடியாது என தொல்பொருள் ஆராச்சியாளர் பலர் கூறியுள்ளார்கள்.

உலக பெருமஞ்சம் இது தான் என வரலாற்று அறிஞர்கள் பாராட்டியுள்ளார்கள். இந்த மஞ்சம் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் புதுப்பிக்கப்பட்டு, நன்கு பேணுவதற்காக நாற்பதடி உயரமான மஞ்சக் கொட்டகையும் நிரந்தரமாக கட்டப்பட்டுள்ளது



# "நாவலர்"

## ஈழுத்தமிழர்களின் அடையாளம்

இந்தியாவைப் போலவே, ஈழமும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமய-பண்பாட்டு நெருக்கடிகளை எதிர்கொண்டது. போர்த்துகீசிய, பிரெஞ்சு, டச்சு, ஆங்கில காலணி ஆதிக்கங்களும், கிறித்துவ மிஷனரிகளின் இந்து சமய எதிர்ப்புப் பிரசாரங்களும் இந்தியாவில் புதிய சமய-பண்பாட்டு இயக்கங்களைத் தோற்றுவித்தன. இவற்றுள் பிரம்ம சமாஜம் (1828) பிரார்த்தனை சமாஜம் (1857), ஆர்ய சமாஜம் (1875), இராமகிருஷ்ண மிஷன் (1886), பிரம்ம ஞானசபை எனப்படும் "தியோகெமிகல் சொசைடி" (1875), சமரச சுத்த சன்மார்க்க சங்கம் (1865) ஆகியன குறிப்பிடத்தக்கன.

இதே காலகட்டத்தில் ஈழத்தில் போர்த்துகீசிய, டச்சு, ஆங்கிலேய காலனியாதிக்கங்களாலும், அவற்றின் ஆதரவில் முடுக்கி விடப்பட்ட சில கிறிஸ்துவ மிஷனரிகளின் இந்து, சைவ சமய எதிர்ப்பு பிரசாரங்களும் யாழ்ப்பாணம் நல்லூ ர் ஆறுமுக நாவலரை சைவசமய எழு ஞாயிறாகத் தோன்றச் செய்தன. ஈழத்தில் சைவ சமயமே மிகப் பழமையானது, பெரும்பான்மையானது. ஆங்கிலக் கல்வியும், அதன் வழி அரசு ஊழியம் பெறும் வாய்ப்பும், சைவ சமய உண்மை நெறி அறியா அறியாமையும் மேலோங்கி இருந்த சூழலில் சைவ சமயம், "பிழைக்குமோ" என்ற பேரச்சம் பரவிய காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூரில் ஆறுமுக நாவலர் 18-12-1822 இல், கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்குக் கடைசி மகவாகப் பிறந்தார்.

பதின்மூன்றாம் வயதிலேயே சைவ சமயத்தின் வீழ்ச்சியைத் தடுத்து அருள்புரியச் சிவபெருமானிடம் பிரார்த்தனை செய்து ஒரு வெண்பாவை இயற்றியதாக அவருடைய வரலாற்றை 1916-இல் எழுதிய யாழ்ப்பாணம் நல்லூர் த. கைலாசபிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமையனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். அவரது 19வது வயதில்(1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவனராயும், அதிபராயுமிருந்த பேர்சிவல் பாதிரியிடம் கிறித்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதிரியுடன் சென்னைப்பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இளமைக்காலத்துச் சிந்தனைகளை, 1868இல் வெளியிட்ட "சைவ சமயங்களுக்கு விக்கியாபனம்" எனும் கட்டுரையில் கூறியதாவது:

"நான் ஜய வருஷம் (1834) முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஷ் கற்றேன். பிலவ வருஷம் (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனானேன். பார்சிவல் துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன் தாங்கள் என்னை விடலாகாது" என்று பல தரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ்விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இல்வாழ்க்கையில், புகவில்லை. இவையெல்லாவற்றிற்குங் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும்வளர்த்தல்வேண்டும்என்னும்பேராசையாம். நான் என் சிறுவயது முதலாகச் சிந்தித்துச் சிந்தித்து, சைவ சமயத்தை வளர்ப்பதற்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வாரில்லையே! இதற்கு யாது செய்யலாம்? சைவ சமய விருத்தியின் கண்ணாகிய பேராசையை அதனை முடித்தற்குச் சிறிதும் சக்தியில்லாத எனக்குத் தந்தருளிய சிவபெருமான் சக்தியுடைய மற்றையோர்களுக்குக் கொடுத்தருளினாரில்லையே!" என்று இரவும் பகலும் பெருங் கவலை கொண்டு பெருமூச்செறிதலிலும் பலருக்கும் பிதற்றலிலுமே பெரும்பான்மையும் என் காலத்தைப் போக்குவேனாயினேன்."

இங்கு பண்டைய ஈழத்தின் அரசியல் பின்னணியையும் சுருக்கமாக அறிதல் வேண்டும். கி.மு. இரண்டாம் நூ ற்றாண்டிலேயே இலங்கையில் தமிழ் மன்னர் ஆட்சி நிலவியதை சிங்கள இதிகாசமான மகாவம்சம் ஒப்புக் கொண்டுள்ளது. இலங்கை அரசுகளும் தமிழ்நாட்டின் சோழ, பாண்டிய விஜயநகர அரசுகளும் தம்முள் கொண்டிருந்த அரசியல் கலாசார உறவுகள் வரலாற்றில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் தமிழர் ஆட்சி பதினேழாம் நூற்றாண்டில் மறைவதற்கு முன்பாக ஆட்சி செலுத்திய தமிழ் மன்னர்கள் ஆரிய சக்ரவர்த்திகள் என்றழைக்கப்பட்டனர். இவர்கள், "தமிழையும் சைவத்தையும் பேணி வளர்த்த புரவலராகவும், புலவராகவும்" பாராட்டப்பட்டுள்ளனர்.

கி.பி. 1620இல் போர்த்துகீசியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். இவர்கள் காலத்தில் சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டன. மக்களைக் கிறித்துவ சமயத்திற்கு மாற்றுவதற்கெனப் பெருங் கொடுமைகள் நிகழ்த்தப்பட்டன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு இந்துவும் போர்த்துகீசிய தலைவனுக்கு நாள்தோறும் உணவிற்காக ஒரு பசுவை அனுப்பி வைக்க வேண்டும் என விதிக்கப்பட்டது.

போர்த்துகீசிய ஆதிக்கத்துக்குப் பிறகு டச்சு, காலனியாதிக்கம் கி.பி. 1658 முதல் கி.பி. 1790 வரையில் நீடித்தது. புரட்டஸ்தாந்து

சமயத்தைச் சார்ந்த டச்சு ஆதிக்கத்தில் சுதேசிய சமயங்கள் இழித்துரைக்கப்பட்டன. மதமாற்றமும் தீவிரமுற்றது. 1796-ல் ஆங்கிலேயர் கொழும்பு நகரைக் கைப்பற்றினர். கி.பி. 1815-ல் கண்டி அரசனை வீழ்த்தி ஈழம் முழுவதையும் ஆங்கிலேயர் தமது காலனியாதிக்கத்தின் கீழ் அடிமைப்படுத்தினர். இவர்கள் காலத்தில் ஆங்கிலக் கல்வி முறையை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளாமல் கிறிஸ்துவ மிஷனரிகளிடம் விட்டு விட்டதாலும், ஆங்கிலக் கல்வி முறையைத் தங்களது மதமாற்ற முயற்சிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டதாலும், கிறிஸ்துவ மிஷனரிகள், வெஸ்லியன் (1814), அமெரிக்கர் (1816), சேர்ச் மிஷன் (1819) முதலான கிறிஸ்துவ மிஷனரிகள் முன்னிருந்தவர்களைக் காட்டிலும் பன்மடங்கு உத்வேகத்துடன் கல்வி பரப்புதலுடன், கிறிஸ்துவ சமயப் பரப்புதலையும் மக்களை அச்சுறுத்தியும் பலரை ஆசைகாட்டியும் மதமாற்றும் செயலை மேற்கொண்டனர்.

சைவ சமய ஆர்வலர்கள், சைவ சமய குருமார்கள், கிறிஸ்துவ மிஷனரிகளைப் போலக் கல்வி பரப்புதலை ஆள்வதில் சற்றுப் பின் தங்கியிருந்தனர். பொதுக் கல்வியில் மட்டுமன்று, சைவ சமயக் கல்வியும் போதிய தேர்ச்சியில்லாமல் புறச் சமயத்தவரின் எதிர்ப்புப் பிரசாரத்திற்குப் பயனளிக்க இயலாமல் திணறினர். இந்தச் சூழலில் ஆறுமுக நாவலர் கிளர்ந்தெழுந்தார்.

சமயப் பிரசார நூல்களை போர்க்கலன்களாகப் படைப்பதில் நாவலர் தனி முத்திரை பதித்தார். மெதடிஸ்த பாடசாலையில் மாணவராகவும், ஆசிரியராகவும் அவர் பெற்ற அறிவும், அனுபவமும் பைபிளை தமிழாக்கம் செய்ததில் பேர்சிவல் பாதிரியுடன் கொண்டிருந்த தொடர்பும், சமய பிரசாரத்தில் கிறிஸ்தவர்கள் கையாண்ட வழி முறைகள் நாவலரிடம் பெரும் தாக்கத்தையும், ஊக்கத்தையும், இயக்க ஆற்றலையும் ஏற்படுத்தின.

**கிறிஸ்தவ கண்டன நூல்கள்:**

சைவ தூஷண பரிகாரம் (1854), சுப்பிரபோதம் (1853), வச்சிர தண்டம் ஆகியன கிறிஸ்தவ சமய கண்டன நூல்களாகும். இவருடைய கிறிஸ்தவ மத கண்டனங்களை கிறிஸ்தவப் பாதிரிகள் தங்கள் "Hindu Pastor" எனும் புத்தகத்தில் மிக வியந்து எழுதியிருக்கிறார்கள். 1855இல் "சைவ தூஷண பரிகாரம்" எனும் வெளியீட்டைப் பற்றி வெஸ்லியன் மெதடிஸ்த அறிக்கையில் பின்வரும் வியப்புரைகள் கூறப்பட்டுள்ளன.

"இந்த ஆண்டின் மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வு சைவ தூஷண பரிகாரம் எனும் நூல் வெளியீடாகும். இந் நூல் அசாதாரணமான இலக்கியமாகவும் தொன்மமாகவும் விளங்குகிறது. சைவருடைய ஒவ்வொரு நம்பிக்கையும் நடைமுறையும் கிறிஸ்தவ புனித நூல்களில் கூறப்பட்டுள்ள நம்பிக்கை சடங்குகளோடு இசைந்தும் இணைந்தும் இருப்பதாக நிரூபணம் செய்கிறது. இத்தகைய கருத்துகளுக்கு ஆதரவாகத் திரட்டித் தரம் பெற்றுள்ள சாத்தியக் குவியலைப் பார்க்கும்பொழுது மிக்க வியப்பாக உள்ளது. எதிர்த்தரப்பின் மறுப்பை முன்கூட்டியே எதிர்பார்த்து, அதை புறந்தள்ளும் மதி நுட்பம் முதல் தரமான தேர்ந்த உள்ளத்திற்கே உரியதாகும் என்பதையும் இந்நூலில் காண்கின்றோம். இந்நூல் நமக்கு மிகுந்த இடர்களை விளைவிப்பதாகும்".

**சைவ சமய விளக்க நூல்கள்:**

சைவ சமய வழிபடுகளை விளக்கப் பின்வரும் சிறுசிறு நூல்களை வெளியிட்டார் நாவலர்:

அனுட்டான விதி முதற்புத்தகம் (நித்ய கன்ம விதி),
அனுட்டான விதி இரண்டாம் புத்தகம்,
குரு வாக்கியம்,
சிவாலய தரிசன விதி,
சைவ சமய சாரம்,
சைவ வினாவிடை முதற்புத்தகம்,
சைவ வினாவிடை இரண்டாம் புத்தகம் (1875),
திருக்கோயிற் குற்றங்கள் (1878).

தாக்குதலுக்காக மட்டுமல்லாமல் தற்காப்பிற்காகவும், சுயசமயத் தெளிவிற்காகவும் நாவலர் தன்னந்தனியாக அரும்பாடுபட்டார். தமிழகத்தில் உள்ள சைவ ஆதீனங்கள் போன்ற அமைப்புகள் ஈழத்தில் இல்லாத காலத்தில் அவரே ஓர் அமைப்பாக, இயக்கமாக புயலாகவும் தென்றலாகவும் இயங்கினார்.

**கந்த புராண கலாசாரம்**

யாழ்ப்பாண சைவ சமயம் கந்தபுராணக் கலாசாரத்தை அடித்தளமாகக் கொண்டது. யாழ்ப்பாணம் நல்லூர், இந்து சமய மன்னர்களின் தலைநகராக விளங்கியது. நல்லூர் கந்தசாமி கோயில் சைவ சமயத்தின் உயிர் நாடியாகும். கிறிஸ்தவ சமயம் பாதிரிமார் இத்திருக்கோயிலைக் குறிவைத்துத் தாக்கிப் பிரசாரம் செய்தனர். 1852ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ சமயப் பாதிரிமார் நடத்தி வந்த "நன்கொடை" எனும் இதழில் "கந்தசாமி கோயிற் திருவிழா" எனும் தலைப்பில் சுப்பிரமணிய சுவாமி வழிபாட்டை இகழ்ந்து கட்டுரை வெளிவந்தது. எழுத்தில் மட்டுமன்று பேச்சிலும் இகழ்ந்து வந்தனர். இந்தச் சைவ சமய வெறுப்புப் பிரசாரத்தை முறியடிக்க 1853-ல் நாவலர், "சுப்பிரமணிய போதம்" எனும் நூலை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார்.

கந்தபுராணத்தில் ஆன்மீக மேன்மையைப் பலவாறாக சைவ சித்தாந்த நோக்கில் தமது நாவன்மையால் விளக்கி வந்தார்.

1861-ல் நாவலருடைய கந்தபுராண வசனம் மதிப்புக்கு வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் கந்தபுராணச் சொற்பொழிவுகள் பெரும் செல்வாக்கு பெற்றன.

"கந்தபுராண கலாசாரம்" என்றால் என்ன? என்பதை விளக்கி கலாநிதி பேராசிரியர் க.கைலாசபதி எழுதியதாவது:

"தத்துவத்தையும், பண்பாட்டையும் இலக்கியத்துடன் இணைத்துக் காணும் நிலைக்கும் பொருத்தமான குறியீடாக "கந்தபுராண கலாசாரம்" என்னும் தொடர் கச்சிதமாக அமைந்துள்ளது எனலாம்". நாவலருக்கு பெரிய புராணத்தில் மிக்க ஈடுபாடு உண்டு. 1851-இலேயே பெரியபுராண வசனத்தைப் பதிப்பித்து விட்டார்.

**சைவ ஆகம நெறி காவலர்:**

இந்தியாவில் ஆர்ய சமாஜ நிறுவனர் சுவாமி தயானந்தர். "வேதகாலத்திற்கு திரும்புங்கள்" என்று முழங்கியதுபோல, நாவலர் "சிவாகமங்கள் காலத்திற்கு திரும்புங்கள்" முழங்கினார். வேதத்தைக் காட்டிலும் ஆகமம் சிறந்தது என்று சாற்றினார். சிவாகமங்களையும், சிவ தீட்சைகளையும் வலியுறுத்தினார். சைவ ஆகமங்கள் அங்கீகரிக்காத வழிபாட்டு முறைகளைக் கண்டித்தார். தமிழக சிதம்பர நடராஜர் திருக்கோயிலில் சிவாகமம் புறக்கணிக்கப்பட்டு, வேதாகமம் பின்பற்றப்பட்டு வந்ததை நாவலர் கடுமையாகச் சாடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண சைவ சமயத்தில் அத்வைத வேதாந்த எதிர்ப்பு வீறு பெற்றது.

1897-ல் வேதாந்தச் சிங்கமாக சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வெற்றியுலா நிகழ்த்திய போது ஏற்பட்ட ஒரு சிறு மாற்றத்தை பேராசிரியர் க. கைலாசபதி பின்வருமாறு குறிப்பிட்டார்.

"சுவாமி விவேகாநந்தரின் போதனைகளும் இராமகிருஷ்ண இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்ததை ஒப்புக் கொள்ளச் செய்யாவிட்டாலும் பெரும்பாலோரின் நோக்கையும், கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது."

**சைவ சமய சீர்திருத்தவாதி:**

உயிர்ப் பலியுடன் கூடிய சிறுதெய்வ வழிபாடுகளைக் கைவிட வேண்டும் என்று பிரசாரம் செய்தார், நாவலர். திருக்கோயில் விழாக்களில் தேவதாரிகள் நடனம், வாணவேடிக்கைகள், ஆபாசமான சித்திரங்கள் முதலானவை விலக்கப்பட்வேண்டும் என்றும் வாதிட்டார். சைவ சமயப் பிரசாரங்கள் போலன்று பொது அறிவும், சமய அறிவும் பெறவேண்டும் என்றும் வலியுறுத்தினார். கோயில்களில் நிர்வாகத்தினரின் ஊழல்களையும் அம்பலப்படுத்தினார். இவ்வழியில் தமது கருத்துகளை அவருடைய "யாழ்ப்பாணச் சமயநிலை" (1872), நல்லூர் கந்தசாமி கோயில் (1875), மித்தியாவாத் தரிசனம் (1876) முதலான கட்டுரைகளில் விளக்கியுள்ளார்.

**தேசிய உணர்ச்ச்சிக்கு வித்திட்டவர்:**

சைவர்களிடையே தேசிய உணர்ச்சிக்கு வித்திட்டவர் நாவலர் என்பதும் அவரைப் பற்றிய பிற்கால மதிப்பீடுகளில் ஒன்றாகும். சைவ சமயத்தை தேசிய சமயமாக முதன்மைப்படுத்தியதால் இந்த மதிப்பீடு தோன்றுயது. தமிழ் மக்களின் தனித்துவத்தையும் பாரம்பரியத்தையும் நிலைநாட்ட நாவலர் பணி பயன்படுகின்றது.

சைவ சமயத்தையும், தமிழையும் வேறுபடுத்திக் காணவேண்டும் எனும் கருத்தை நாவலர் தமது "யாழ்ப்பாண சமயநிலை" எனும் கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"சைவ சமயத்தைத் தமிழ்ச் சமயம் என்றும், சைவ சமயக் கோயிலைத் தமிழ்க் கோயில் என்றும் அறிவில்லாத சனங்கள் வழங்குகின்றார்கள். தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று, ஒரு பாஷையின் பெயர்."

பௌத்த சமயத்தையும், சிங்களத்தையும் இணைத்து "இலங்கை தேசிய"த்தை உருவாக்கியவர், அநகாரிக தர்மபால எனும் பௌத்த சமயத் தலைவர். ஆனால் நாவலர் தொடக்கி வைத்த சைவத் தேசிய உணர்வு "தற்காப்பிற்கானது. அது பிறருடன் அரசியல் போராட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடியதல்ல. தமிழர் தேசியம் இதுவரை சமயச் சார்பற்றதாக இருந்து வருவதற்கு நாவலரது செல்வாக்கும் ஒரு காரணமாகலாம் என்று யாழ்ப்பாணத் தமிழ் ஆய்வாளர் க. அருமைநாயகம் விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. தற்கால மீளாய்வில் "தேசியத்தின் தந்தை நாவலர்" எனும் மதிப்பீடு மறுக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**கல்வித் தொண்டு:**

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 1845-ல் அவர் தோற்றுவித்த சைவப் பிரகாச வித்யாசாலை, சைவ சமய கல்வி இயக்கத்தின் தலையுற்றாகும். கத்தோலிக்க, புரட்டஸ்தந்த் பாடசாலைகளுக்கு அளிக்கப்படும் அரசு நிதியுதவி சைவ சமயத்தினால் நடத்தும் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று நாவலர் வாதாடினார். கிறிஸ்துவரின் எதிர்ப்பால் சைவப் பிரகாச வித்யாசாலை இருபத்தி இரண்டு ஆண்டுகள் அரசு நிதியுதவி பெறாமல் அல்லலப்ட்டது. கிறிஸ்துவ வேதாகமத்தை ஆங்கிலப் பாடநூலாக ஆக்கிய பின்பே 1870-ல் சைவப் பிரகாச வித்யாசாலைக்கு நிதியுதவி கிடைத்தது. அக்காலத் தேவையாக விளங்கிய ஆங்கிலக் கல்விக்காக நாவலர் தமது கல்வி இயக்கத்தில் இடமளித்தார். 1872-ல் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தார். சைவ சமயத்தினர் இந்த ஆங்கிலப் பாடசாலையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதனால் நான்காண்டுகளில் இந்தப் பாடசாலை மூடப்பட வேண்டியதாயிற்று.

**உரையாசிரியர் - பதிப்பாசிரியர்:**

1849-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள வண்ணார் பண்ணையில் வித்தியாநு பாலன யந்திரசாலை" என்னும் பெயரால் ஓர் அச்சகத்தில் நிறுவினார். இதன் வழியே பல நூல்களை வெளியிட்டார்.

கோயிற் புராணம், சைவ சமய நெறி, நன்னூற் காண்டிகை, சிவ தருமோத்தரம், மருதூரந்தாதி, திருமுருகாற்றுப் படை முதலிய இலக்கண, இலக்கிய, சமய நூல்களுக்கு உரை எழுதி அச்சிட்டு வெளியிட்டார். கொன்றை வேந்தன், வாக்குண்டாம் (மூதுரை), நல்வழி, நன்னெறி எனும் நீதிநூல்களுக்கும் நாவலர் உரையெழுதியுள்ளார்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, திருச்சிற்றம்பலம் கோவையுரை, சுருக்க சங்கரக உரை, சேதுபுராணம் முதலிய சுவடிகளை ஆய்ந்து மதிப்பித்துள்ளார், நாவலர். இவருடைய பரிமேலழகர் உரைப்பதிப்பை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாராட்டியுள்ளார். யாழ்ப்பாணம் பேரறிஞர்களுள் ஒருவரான சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குரிய சேனாவரையர் உரையைப் பதிப்பித்தார்.

இவ்வாறு அவருடைய உரை நூல்கள், பதிப்பு நூல்கள் பற்றிய ஆய்வு, தனி ஆய்விற்கு உரியது. அக்காலத் தமிழ்ப் பதிப்புலகில் "பதிப்பு" என்றால் நாவலர் பதிப்புத்தான் நிகரற்று விளங்கியது. தமிழ் உரைநடையின் ஆதிகர்த்தாக்களுள் ஒருவராகவும் புகழ் பெற்றவர் நாவலர்.

**சமூக நோக்கு:**

சைவ சமயப் பிரசாரத்தில் தீவிரவாதியாக இருந்த நாவலர் சமூக சீர்திருத்தத்தில் பிற்போக்குவாதியாக இருந்தார். உயர் சாதியினர் ஏகப் பிரதிநிதியாக இருந்தார். சாதிப்பிரசாரங்களை, வர்ணாச்சிரமத்தை வலியுறுத்தினார். "முதலாம் சைவ வினாவிடை" எனும் நூலில் தீண்டாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிடிவாதமாக எழுதியுள்ளார். திருக்கோயிலுள்ளே போவதற்கு "யோக்கியர்களல்லாத சாதியர்கள்" என்று தாழ்த்தப்பட்ட சாதியரை இழிவு செய்துள்ளார். அவர்களுடன் சேர்ந்து உணவு கொள்ளக்கூடாது என்றும், அவர்களைத் தீண்டினால் "உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானஞ் செய்தல் வேண்டும்" என்றும் "நான்காம் பால பாடம்" எனும் நூலில் எழுதியுள்ளார் நாவலர்.

**தமிழக உறவில் நாவலர்:**

சென்னையில் சுமார் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்து சைவ சமய எழுச்சிக்குப் பாடுபட்டார், நாவலர். சிதம்பரத்தில் 1864-ல் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தொடங்கினார். இந்த வித்தியாசாலையும், சென்னை தங்கசாலையில் இவர் நிறுவிய வித்யாநுபாலன யந்திரசாலையும் சைவ சமயப் பணியுடன் தமிழ்ப் பணியும் செய்து வந்தன.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தரால் "நாவலர்" எனும் சிறப்புப் பட்டமும் அளிக்கப்பட்டது.

1860-ல் நாவலர் தமது தமையனாருக்கு எழுதிய கடிதத்தில் "இச்சென்னைப் பட்டணம் என் சென்ம பூமியிற் சிறந்ததென்று" குறிப்பிட்டுள்ளார். தமிழக அறிஞர்கள் பலர் பாராட்டியுள்ளனர்.

தமிழக வாழ்க்கையில் நாவலர், இராமலிங்க சுவாமிகளுடன் கடுமையாக மோதி வள்ளலார் பாடல்களை அருட்பாவாக ஏற்க மறுத்து, மருட்பாவாகப் பழித்துரைத்தது, சற்றுக் கசப்பான வரலாற்றுச் செய்தியாகும்.

1868 முதல் சென்னையிலும், சிதம்பரத்திலும் மாதந்தோறும் வியாழக் கிழமைகளில் திவருட்பா, போலியருட்பா ஆகிய விஷயங்கள் பற்றி, உரையாற்றி வந்தார். அவ்வுரைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட "போலியருட்பா மருட்பா மறுப்பு" (1869) எனும் கண்டன நூலாகும்.

கடலூர் மஞ்சகுப்ப நீதிமன்றத்தில் இராமலிங்க சுவாமிகள் மீது "மானபங்க படுத்தியமை" எனும் குற்றச்சாட்டு நாவலரால் சுமத்தப்பட்டது. இவ்வழக்கில் சிதம்பரம் சபாநடேச தீட்சிதர் ஒருவரும் எதிரியாகக் குறிப்பிடப்பட்டார். இவ்வழக்கின் முடிவில் சபா நடேச தீட்சிதருக்கு 50 ரூபாய் அபராதமும், செலுத்தத் தவறினால் ஒரு மாத கால சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இராமலிங்க சுவாமிகள், நீதிமன்றத்தில் தாம் நாவலரை அவதூறாகப் பேசவில்லை என்று கூறியதால் விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கின் மூலச் சான்றுகள், நீதிமன்ற நடவடிக்கைகள் முழுமையும் கிடைக்கவில்லை. பத்திரிகைச் செய்திகளே கிடைத்துள்ளன.

**நாவலர் மரபு:**

ஓரிரு குறைகள் மேகமூட்டமாக மறைத்தாலும் நாவலர் பெயரால் ஒரு மரபு, பரம்பரை தோன்றி சைவத்தையும், தமிழையும் பெரும் முனைப்புடன் வளர்த்தது. 29.4.1888-ல் யாழ்ப்பாணத்தில் நிறுவப் பெற்ற "சைவ பரிபாலன சபை"யும் அதன் பிரசார முடிவாக 11.09.1889-ல் வெளிவந்த "இந்து சாதனம் - Hindu Organ" எனும் இதழும் நாவலர் மரபின் வரலாற்றை விளக்கவல்லன.

தமிழ் மரபில், நாவலர் மரபிற்கு சிறந்த இடம் உள்ளது. அதேபோல் அந்த மரபின் நிமித்தமாக ஈழத்தமிழரின் அடையாளமாக என்றென்றும் நாவலர் நிலைத்திருப்பார்.

## சைவதூஷண பரிகாரம்

அநாதி பகவானாகிய பரமசிவன் அருளிச்செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயமாம். இச்சற்சமயம் வழங்கும் நம் ஆரியக்கண்டத்திலே மிலேச்சர்களாகிய பாதிரிகள் புகுந்து, இச்சைவத்தை விளக்கும் சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாமையினாலும், தாங்கள் முன்னே தழுவிக்கொண்ட துர்ச்சமயமாகிய கிறீஸ்து மதத்தின் மேல் வைத்த துரபிமானத்தினாலும், அப்புன்மதத்தைப் பிரசாரித்தலே தங்களுக்கு எளிதிற் பொருள் வரும்வழியாய் இருத்தலாலும், இச்சைவத்தை வாய்மொழியாலும் குருட்டுவழிமுதலிய புத்தகங்களாலும் அநியாயமாகவே தூஷிக்கின்றார்கள்.

நமது சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும், அப்பாதிரிகளது பொய்நூலாகிய விவிலிய நூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்க நூலிலே அற்பமேனும் பயிலாதவர்களுமாகிய சில சனங்கள் அத்தூஷணங்கள் ஒக்குமென்று மதிமயங்கி, கிறீஸ்துசமயப் படுகுழியில் வீழ்ந்த கெடுகின்றார்கள்.

யாம் அதனைக் கண்டிரங்கி, சைவத்தின்மேல் அப்பாதகர்களால் ஏற்றப்படும் தூஷணங்களாலே ஒருவரும் கெடாது சைவத்தின்வழியே நின்று உய்யும்பொருட்டு, அத்தூஷணங்கள் எல்லாற்றையும் நியயமாகவே களைந்து மெய்யறிவுச்சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவதூஷண பரிகாரம் என்னும் பிரபந்தத்தை, பரமகாருணிகராகிய பரமசிவனது திவ்வியப்பிரசாதத்தினாலே செய்தோம்.

## அபிஷேகப் பிரகரணம்


இலிங்கங்களை அதிட்டித்து அருள் செய்யும் கடவுளுக்கு எண்ணெய், பால், தயிர், நெய், தேன், இளநீர் முதலியவைகளினால் விதிப்படி அபிஷேகம் பண்ணுதல் புண்ணியமென்று சைவாகமங்கள் சாற்றுகின்றன.

யாத் 30. 22-33. யெகோவா மோசேயை நோக்கி, அதிஉத்தம சுகந்த திரவியங்களாகிய சுத்தமான வெள்ளைப் போளத்தில் பரிசுத்த ஸ்தாத்துச் சேக்கலின்படி, 500 சேக்கலும், கருவாப்பட்டையில் அதிற்பாதியாகிய 250 சேக்கலும், சுகந்தவசம்பு 250 சேக்கலும், இலவங்கப்பட்டையில் 500 சேக்கலும், சீதவிருட்சத்தெண்ணையில் ஒரு கிண்ணமும் எடுத்து, பரிமள தைலக்காரனுடைய செய்கையாற் செய்யப்பட்ட பரிமளதைலத்தைப்போல, அவைகளினாற் சுத்த அபிஷேக தைலத்தைச் செய்வாயாக. அதுவே அபிஷேக தைலமாயிருக்க வேண்டும். ஆதினாலே சபையின் ஆவாசத்துக்கும், சாட்சிப்பெட்டிக்கும், பீடத்துக்கும், அதின்பாத்திரங்களெல்லாவற்றிற்கும், கிளை விளக்குக்கும், அதின்கருவிகளுக்கும், தூபவேதிகைக்கும், தகனபலிவேதிகைக்கும், அதின்பாத்திரங்களெல்லாவற்றிற்கும், தொட்டிக்கும், அதின்பாதத்திற்கும் அபிஷேகம் பண்ணக்கடவாய். அவைகள் பரிசுத்தமாகும்பொருட்டு, அவைகளைப் பரிசுத்தப்படுத்துவாயாக. அவைகளைப் பரிசிக்கிறயாவும் பரிசுத்தமாகும். ஆரோனும் அவன்புத்திரரும், எனக்கு ஆசாரியத்தொண்டு செய்யும்படி, நீ அவர்களுக்கு அபிஷேகம் பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயக. நீ இஸ்ரவேற்சந்ததியாரை நோக்கி, உங்கள் தலைமுறைதோறும் எனக்குரிய பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கவேண்டும். இது மனிதருடைய சரீரத்தில் வார்க்கப்படாது. இதற்கொப்பாக நீங்கள் வேறேசெய்யவும்படாது. இது பரிசுத்தமானது. இது உங்களிடத்திற் பரிசுத்தமாயிருக்கவேண்டும். இதற்கொப்பாகத் தைலமுண்டாக்கிறவனும், இதில் எடுத்து அந்நியன்மேல் வார்க்கிறவனும் தன் சனங்களினின்றும் சேதிக்கப்படுவான் என்று சொல்லென்றார்.

இப்படியே உன்சமயநூலில் அபிஷேகம் விதிக்கப்பட்டமை கண்டும், காணாதார் போல் நீ நாங்கள் அபிஷேகம் பண்ணுதலைக் கண்டு, விக்கிரகங்களுக்கு அபிஷேகம் பண்ணினதினாலே பயனில்லையென்று பிதற்றுவது நீதியா?

# திருவாளர் பொன். இராமநாதன்

## சைவ-தமிழ்-அரசியல் வித்தகர்



சேர் பொன் இராமநாதன் (1851.04.16 - 1930.11.26) யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்த வழக்கறிஞர், அரசியல் தலைவர். இவரது தந்தை பொன்னம்பலம். இவர் தனது ஆரம்பக் கல்வியைக் கொழும்பு இராணிக் கல்விக்கழகத்தில் (கொழும்பு வேத்தியர் கல்லூரி) கற்று 13 ஆவது வயதில் பிரெசிடென்சி கல்லூரியில் கல்வி கற்பதற்காகச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். சேர் றிச்சட் மோர்கனின் கீழ் சட்டக்கல்வி பயின்று 1873 இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார். பின்னர் சொலிசிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்து 1906 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக இரண்டு பாடசாலைகளை நிறுவியுள்ளார். இவற்றில் பெண்கள் பாடசாலையான இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி மருதனார்மடத்தில் அமைந்துள்ளது. இராமநாதன் பெண்களுக்கு என்று தனியான பாடசாலை கட்ட முன்வந்த போது, கிறிஸ்தவ மதத்தினர் அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அவர் அமெரிக்கா சென்றபோது பெருந்தொகையான பணத்தை நன்கொடையாக பெற்றுவந்து தான் இந்தப் பாடசாலையை கட்டுகின்றார் என விசமத்தனமாகக் குற்றம் சுமத்தினார்கள்.

இந்தக் குற்றச்சாட்டு The Jaffna Morning Star என்ற கிறிஸ்தவப்பத்திரிகையில் வெளிவந்தது. அந்தச் செய்தி வெளிவந்த சமயம் இராமநாதனை அமெரிக்காவிற்கு அழைத்தவர்களுள் ஒருவரான மைரொன். எச்.பெல்ப்ஸ் மலேசியாவில் பிரசங்கம் ஒன்றில் பேசும்போது 'அண்மையில் வெளிவந்த பத்திரிகைச் செய்தி ஒன்று பற்றி இங்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அந்தப் பத்திரிகை,"பொன்னம்பலம் ராமநாதன், தான் திட்டமிட்ட இந்துமகளிருக்கான பாடசாலையை நிர்மாணிக்க, அவர் அமெரிக்க விஜயத்தின்போது சேர்த்த பணத்தால்தான் கட்ட முன் வந்துள்ளார், எனக் குறிப்பிட்டுள்ளது. அது சுத்தப்பொய். இராமநாதன் அவர்கள் அமெரிக்காவில் எனக்குத் தெரியாமல் பணத்தை நன்கொடையாக வாங்கியிருக்க முடியாது. மேலும் பொன்னம்பலம் இராமநாதன் அமெரிக்காவில் இருந்தபோது பணம் கேட்கவுமில்லை. பணம் பெறவுமில்லை. இதுதான் உண்மை" என்று குறிப்பிட்டார். இராமநாதன் பெண்கள் கல்லூரி இன்றும் யாழ்ப்பாணத்தின் முதன்மைக் கல்லூரிகளிலொன்றாக விளங்கிவருகிறது. ஆண்கள் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி, பின்னர் 1970 களின் தொடக்கத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றம்பெற்றது.

இவரது தந்தை கொழும்பு கொச்சிக்கடையில், 1857 நவம்பரில் செங்கற்களால் நிர்மானித்துக் குடமுழுக்குச் செய்வித்த ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயில் எழுந்தருளிய இடத்திலே புதியதொரு கோயிலை 1907 ஆம் ஆண்டு கருங்கற்களால் கட்டுவித்து 1912 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் திகதி குடமுழுக்குச் செய்வித்தார்.

1879 ஆம் ஆண்டு இலங்கையின் சட்டசபை உறுப்பினராக நியமிக்கப்பட்ட இவர், 1911 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கையின் சட்டசபைக்கான முதலாவது தேர்தலில் முழு இலங்கையரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1897 ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியாரின் 50 ஆவது ஆண்டு விழாவிற்கான இலங்கையின் பிரதிநிதியாக இராமநாதன் அவர்களே தெரிவு செய்யப்பட்டார். அந்த விழாவின் போது அவருக்குப் பிரித்தானிய அரசினால் இலங்கையின் முழுமையான தேசியவாதி என்னும் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசினால் பிரபுப் பட்டம் (Sir) வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மிகுந்த சொல் வன்மையும், வாதத்திறமையும் வாய்க்கப்பெற்ற இவர், இலங்கையில் பிரித்தானியரின் பல நடவடிக்கைகளுக்கு எதிராக வாதாடி இலங்கையரின் நலன்களைப் பாதுகாத்தார்.

1915ம் ஆண்டு இலங்கையில் சிங்கள-முஸ்லிம் இனக்கலவரம் ஒன்று ஏற்பட்டது. இது சிங்கள அரசியல் தலைவர்களால் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டதாகப் பிரித்தானிய ஆளுநர்கள் அறிந்துகொண்டனர். உடனடியாகப் பிரித்தானியா ஆளுநரால் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அத்துடன் அந்த இனக்கலவரத்திற்குக் காரணமானவர்களைக் கைது செய்யவும் கட்டளையிடப்பட்டது. அந்த இனக்கலவரத்திற்கான பிரதான காரணிகளாக டீ. எஸ் சேனாநாயக்கா, டீ. எஸ் விஜேவர்தனா, டொக்டர் நெயிசர் பெரேரா, ஈ. டீ. த சில்வா, ஆர் டயஸ் பண்டாரநாயக்கா, எச் அமரசூரிய, ஏ. எச். மொலமூறே போன்ற இலங்கையின் முன்னணி சிங்கள அரசியல் தலைவர்களே இருந்தனர். இவர்களைக் கைது செய்த பிரித்தானிய அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. அவர்களைப் பிரித்தானியாவில் சிறையில் அடைத்தது. அத்துடன் இனக்கலவரத்திற்கு முக்கியக் காரணமான அனைவருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது.

இனக்கலவரத்தை ஏற்படுத்திய குற்றம் பாரிய குற்றம் என்றபோதும், அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதை விரும்பாத சேர் பொன்னம்பலம் இராமநாதன், பிரித்தானிய அரசை எதிர்த்து, சிங்கள அரச தலைவர்களின் உயிரைக் காப்பாற்றும் முகமாக மீட்புப் போராட்டம் செய்து, அவர்களை மீட்டவர் என்பதும் இலங்கை அரசியல் வரலாற்று நிகழ்வாகும்.

பொன்னம்பலம் இராமநாதனின் போராட்டத்தினால், உயிர் மீண்டு வந்த சிங்கள அரசியலாளர்கள், அவரைத் தங்கள் தோள்களில் சுமந்து, காலிமுகத்திடலில் ஊர்வலம் சென்றமையும் வரலாற்று நிகழ்வாகும். இவ்வாறு பொன்னம்பலம் இராமாநாதன் சிங்கள அரசியல் தலைவர்களை மீட்டிருக்காவிட்டால் டீ. எஸ் சேனாநாயக்கா, ஆர் டயஸ் பண்டாரநாயக்கா போன்ற சிங்கள அரசியல் தலைவர்கள் இலங்கை வரலாற்றில் இடம்பிடித்திருக்கவும் முடியாது என, நன்றி கூறும் தற்கால சிங்கள அரசியலாளர்களும் உளர்.

எழுத்துத்துறையில் An Eastern Exposition of the Gospel of Jesus According to St. Matthew (1898), An Eastern Exposition of the Gospel of Jesus According to St. John (1902), The Culture of the Soul Among Western Nationals (1907)), The Spirit of the East Contrasted with the Spirit of the West (1905), On Faith or Love of God (1897), Tamil translation of Bhagavat Gheetha (1914),Tirukkural (1919), Shri Ramanatha Dharmasastra (lesson) போன்ற நூல்கள் உட்பட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.



சிறுவர் ஒளி

# கழுதை வாங்கித் துணிதோய்த்த பரமார்த்தகுருவும் சீடர்களும்

அந்த ஊர்ப் பண்ணையார் வீட்டில் துணி துவைப்பதற்கு ஆள் தேவையாக இருந்தது. பரமார்த்த குருவின் சீடர்கள் "அந்த வேலையைச் செய்தால் என்ன?" என்று அவரிடம் கேட்டனர்."துணி துவைக்கிற தொழிலுக்குப் பொதி சுமக்கும் கழுதை வைத்திருக்க வேண்டும். நம்மிடம் அது இல்லையே, என்ன செய்வது?" என்றார் பரமார்த்தர். "கழுதை இல்லாவிட்டால் என்ன? அதற்குப் பதில் தான் நாங்கள் இருக்கிறோமே!" என்றனர் சீடர்கள். இருந்தாலும், நிஜமான கழுதை இருந்தால் நல்லது! நல்ல கழுதையாக ஒன்று வாங்கி வாருங்கள், என்று உத்தரவிட்டார், பரமார்த்த குரு. அன்று மாலையே அவர் மடத்துக்குக் கழுதை ஒன்று வந்து சேர்ந்தது.

கழுதையைப் பார்வையிட்ட பரமார்த்தர், அதன் வாலைப் பிடித்து முறுக்கிப் பார்த்தார். கோபம் கொண்ட கழுதை, அவரை ஒரு உதை உதைத்தது. ஐயோ! என்று அலறியபடி தொலைவில் போய் விழுந்த பரமார்த்த குரு, "முட்டாள்களே! என் பெருமைகளைப் பற்றிக் கழுதையிடம் ஒன்றுமே சொல்ல வில்லையா? என்று கோபமாகக் கேட்டார். "குருவே! உங்களைப் பற்றி எல்லா விஷயங்களையும் தெளிவாக எடுத்துச் சொன்னோம்! அதனால்தான் உதைத்ததோ என்னவோ?" என்றான் மடையன். "ஆமாம் குருவே! அப்படியும் இருக்கலாம்" என்று ஆமோதித்தான் மட்டி.

"பரவாயில்லை, அடிக்கிற கைதான் அணைக்கும். அதுபோல் உதைக்கிற கழுதைதான் உண்மையாய் உழைக்கும். ஆகையால் இந்தக் கழுதையே இருக்கட்டும்!" என்றார் பரமார்த்தர். குருவும் சீடர்களும் கழுதை வைத்திருப்பதை அறிந்த உள்ளூர் திருடன், அதை எப்படியாவது திருடிச் செல்ல வேண்டுமென்று திட்டமிட்டான். ஒருநாள், கழுதையின் கழுத்தில் கட்டப்பட்டு இருந்த கயிற்றை அவிழ்த்துக் கொண்டு இருந்தான், திருடன். ஆனால் அதற்குள் சீடர்கள் வரும் சப்தம் கேட்கவே அவசரம் அவசரமாகக் கழுதையை மட்டும் ஓட்டிவிட்டு, அந்த இடத்தில் தான் நின்று கொண்டான். அங்கு வந்து பார்த்த சீடர்களுக்கு வியப்பும் அதிர்ச்சியுமாக இருந்தது.

"இதென்ன? கழுதை இருந்த இடத்தில், மனிதன் இருக்கிறானே?" என்றான் மூடன். "ஒருவேளை இது மாயமந்திரம் தெரிந்த கழுதையாக இருக்குமோ?" எனச் சந்தேகப்பட்டான் மண்டு. அதற்குள் பரமார்த்த குருவும் வந்து சேர்ந்தார். "உன்னைக் கழுதையாகத்தானே வாங்கி வந்தோம். நீ எப்படி மனிதனாக மாறினாய்?" என்று கேட்டான் முட்டாள்."நான் முதலில் மனிதனாகத்தான் இருந்தேன். ஒரு முனிவரின் கோபத்துக்கு ஆளாகி விட்டேன். அவர்தான் என்னைக் கழுதையாகப் போகும்படி சாபம் இட்டார்.. இப்போது சாபம் நீங்கி விட்டதால் மறுபடி மனிதனாக மாறி விட்டேன்!" என்று பொய் சொன்னான் அந்தத் திருடன். திருடனின் பொய்யைப் புரிந்து கொள்ளாத பரமார்த்தர், "மனிதனைக் கழுதையாக மாற்றியதால் தப்பித்தோம். அதே முனிவர் சிங்கத்தையோ, புலியையோ கழுதையாக மாற்றியிருந்தால் இந்நேரம் நம்மையெல்லாம் சாப்பிட்டிருக்கும். நல்ல வேளை, தப்பித்தோம்!" என்று மகிழ்ந்தார்.

"சீடர்களும், விட்டது தொல்லை." என்று மகிழ்ந்தனர். கழுதை இல்லாமலேயே பண்ணையார் வீட்டில் வேலைக்குச் சேர்ந்த சீடர்கள், துணிகளை மூட்டை கட்டி, பாசி பிடித்த ஒரு குளத்துக்கு எடுத்துச் சென்றார்கள். பளீரென்று வெள்ளையாக இருக்க வேண்டும் என்பது பண்ணையார் கட்டளை என்று சொல்லியபடி, வெவ்வேறு நிறங்களில் இருந்த துணிகளைக் கல்லில் தேய்த்துக் கிழித்தான், மட்டி. வெள்ளையாக இருந்த வேட்டியில் பாசியை தோய்த்துப் பச்சை நிறமாக மாற்றினான் மடையன். ஒரே துணியாக இருந்ததைக் கசக்கிப் பிழிந்து முறுக்கி, பல துண்டுகளாக ஆக்கினார்கள், முட்டாளும் மூடனும். அப்பாடா! ஒரு வழியாக நன்றாக வெளுத்துக் கட்டி விட்டோம்! என்று மகிழ்ந்தபடி பண்ணையார் வீட்டுக்குப் புறப்பட்டனர். "நீங்கள் ஒரு துணி போட்டீர்கள். நான் அதையே பத்தாக்கிக் கொண்டு வந்திருக்கிறேன்!" என்று பெருமை பேசினான் முட்டாள்.

"வெள்ளையைப் பச்சையாக்கி விட்டேன்." என்று குதித்தான் மடையன். பரமார்த்த குருவின் சீடர்கள் கொண்டு வந்த துணிகளைப் பிரித்துப் பார்த்த பண்ணையாருக்கு கோபம் வந்தது."அடப்பாவிகளா! முழுசாய் இருந்ததை எல்லாம் கிழித்துக் கோவணத் துணிகளாய் ஆக்கி விட்டீர்களே! புத்தி கெட்டவர்களை நம்பி இந்த வேலையைச் செய்யச் சொன்னேனே!" என்று புலம்பியபடி அவர்களை விரட்டி அடித்தார். "உம்... நம் தொழில் திறமையை யாருமே புரிந்து கொள்ள மாட்டார்கள் போலிருக்கிறதே!" என்று வருத்தப்பட்டு மடத்துக்குத் திரும்பினார்கள் அந்த சீடர்கள்.

**இக்கதையின்மூலம் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், ஒரு வேலையை ஒருவரிடம் கொடுப்பதற்கு முன்பு, அவர், அந்த வேலையை, திறம்பட செய்து முடிக்கக்கூடியவரா? அதற்குரிய அறிவும் அனுபவமும் விருப்பும் அவருக்கு உள்ளதா என்பதைத் தெரிந்துகொண்டு அந்தப் பணியை அவரிடம் கொடுக்க வேண்டும். மேற்கூறிய காரணிகளில் ஒன்று இல்லையென்றாலும் அவரது பணி முழுமையாகாது என்பதுடன் அவரது பணி நமக்கும் பெரும் நட்டத்தை ஏற்படுத்திவிடும். அவ்வாறு சரியான ஒருவரைத் தெரிவுசெய்யத் தவறியதன் பலனை நாம் அனுபவித்தே தீரவேண்டியேற்படும். (மு.பி)**

## தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி

# தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்



### அவர்களின்

# பேச்சாளுமை

தமிழில் அமைந்த பல்வகைமை நூல்களையும் ஆராய்ந்து கற்று அவற்றைத் தன் பேச்சால் கேட்பவர் விரும்ப உரைக்கும் திறன் மிக்கவர் அம்மையாராவார்.

*'சங்கத்து தமிழ் நூல்கள் தமைத்தேர்ந்தும்*
*திருக்குறட்கு விளக்கம் செய்தும்*
*எங்கெங்கும் காப்பியத்தின் பெருமையினை*
*எடுத்து ரைக்கும் சமய நூல்கள்*
*இங்கெவர்க்கும் விளக்கியுமே பணிபுரிந்தே*
*புகழ்க் குன்றின் உச்சி தன்னில்*
*தங்கியொளி செய்கின்ற தமிழ்ச் செல்வி*
*இறை யருளால் வாழி நீடே'1*

எனப் புலவர் ம. பார்வதிநாதசிவமும்

*'செந்தமிழ் நங்கையாய் செழிப்புகள் பல பெற்றே*
*பைந்தமிழில் பாடல்கள் பல பாடினீரே!*
*சுந்தரத் தமிழிலே சுகமான சொற்பொழிவுகளை*
*சுடர்விடும் மனங்களில் தூவிய செல்வியே'2*

என திருமதி. நகுலா சிவநாதன் அவர்களும் கூறுகின்றமை அதற்கு தக்க சான்று களாகின்றன. அம்மையார் சிறு வயதி லிருந்தே சபைக் கூச்சம் அற்ற நிலையும் தெளிவாகத் தான் கூற விளைந்ததைக் கூறும் திறனும் உடையவராகத் திகழ்ந்தார். இவரது பேச்சுத்திறனை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை,

**"முதலாவது இவர்கள் பேச்சின் பொருளை ஒழுங்குபடுத்திப் பேசுதல். இரண்டாவது கால நேரத்தை உணர்ந்து கட்டுப்பட்டுப் பேசுதல். மூன்றாவது யாழ்ப்பாணத்துத் தமிழில் தனிச் சிறப்பு. நான்காவது ஒரெழுத்தையும் சிதைக்காது விழுங்காது உச்சரித்தல்"3**

என மதிப்பீடு செய்கின்றார். சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவாற்றும் போது ஆடாமல் அசையாமல் கண்களை உருட்டாமல் மிரட்டாமல் உடல் செயலற நின்று உள்ளத்தால் பேசுவார். அப்போது கேட்போர், பேசுவோர் என்ற பேதம் மறைந்துவிடும். இதே போன்ற பண்பை அம்மையாரிடமும் காணலாம் என்பதை அவரின் பேச்சைக் கேட்டோர் அறிவர்.

அதே போல எடுத்த பொருளைச் சிக்கலின்றித் தெளிவாக விளக்கிப் பேசுவது இவரின் இயல்பு. அதனால் அவையும் அமைதியாக அமர்ந்து கேட்டின்புறும் தெய்வத் தமிழேயன்றி வேறு தமிழ் இவர் பேச்சில் நுழையாது. நூல் வழி நின்று புறம் பொசியது பேசும் போது அலையும் மனம் திரியாது மகிழ்ந்து கேட்கும் என த.சண்முகசுந்தரம் குறிப்பிடுகிறார்.4 இவை யாவற்றையும் அளிக்கை செய்யும் அவரது குரல் மிக லாவண்யமானது. எவ்விதப் பிசிறும் இல்லாத தூய தமிழ் உச்சரிப்பை அக்குரலில் கேட்போர் மெய்மறப்பர். அவ்வாறு மெய் மறந்த பேராசிரியர் கோ.சுப்பிரமணியபிள்ளை,

**"இங்கே பேசியவர் ஈழத்துத் தங்கம்; ஈழத்துத் தங்கமென்றால் மிகுந்த மதிப்புடையது 22 கரட் பெறுமதி உடையது: நம்பிக்கைக்குரியது. இந்தத் தங்கத்தின் விளக்கத்தை நீங்களும் கண்டீர்கள். ஈழத்துத் தங்கம்மா "சொலல் வல்லள்", சோர்விலள்; அஞ்சாள்; இகல்வெல்லல் எனக்கும் அரிது" 5**

என்று பாராட்டினார்கள் என ஈழத்துச் சிவானந்தன் குறிப்பிடுகின்றார். அம்மையார் தன் சொற்பொழிவால் தன் ஆளுமையை அறிவுத் திறத்தை மற்றவர்க்குக் காட்ட வேண்டும் என எண்ணினாரல்லர். பண்டிதை, சைவப் புலவர் ஆதலால் செந்தமிழில் பேச வேண்டும் என்றோ கடின பதங்களையும் சமஸ்கிருத சுலோகங்களையும் ஆங்கில வசனங்களையும் இட்டு நிரப்பிப் பேசுதலே தமது அந்தஸ்துக்கு உகந்தது: மற்றவர் வியப்பர்: அறிவை மதிப்பர்; தகுதிப்பாடு மேம்படும் என்றோ எந்த எண்ணமும் இல்லாதவராவார். அவருடைய தோற்றப் பொலிவைப் போலவே பேச்சும் மிக எளிமையானது. சிறிய வாக்கியங்களாலானது: தூய எளிய தமிழ்ச் சொற்களே அவரது பேச்சில் விரவிக் கிடக்கும். யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டிலுள்ள மிகச்சில சமஸ்கிருதச் சொற்கள் ஆங்காங்கே காணப்படும். ஆங்கிலத்திற்குத் துளியும் இடமில்லை. பாலகரும் பாமரரும் கற்றவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தனது பேச்சைக் கட்டமைப்பார். சிறுவர் முதல் முதியவர் வரை புரிந்து கொள்ளக்கூடிய தெளிவான உச்சரிப்பும் இடையிடையே பண்கூட்டி பக்திப் பாசுரங்களை இசைக்கும் தன்மையும் செவிநுகர்கனிகளாக அமையும்.

*"உள்ளத்தில் உண்மையொளியுண்டாயின்*
*வாக்கினிலே ஒளியுண்டாகும்" 6*

என்றார் சுப்ரமணிய பாரதியார். அகத்தூய்மையும், புறத் தூய்மையும் நிரம்பப் பெற்ற அம்மையாரின் உரையும் தூய்மையானது. கேட்போரைக் கவருவதற்காக நகைச்சுவைத் துணுக்குகளைப் பயன்படுத்தும் தன்மை அற்றவர். தான் எடுத்துக் கொண்ட பொருளை உரிய எடுகோள்களோடு எடுத்துரைப்பார்.

**"அன்னை அவர்கள் உரையாற்றத் தொடங்கினால் அந்த உரையிலே திருக்குறள் எடுத்தாளப்படும். நாயன்மார்களின் கூற்றுக்கள் தாராளமாய் உலாவரும். தமிழ் இலக்கியங்களும் புராணங்களும் பற்றிய தெளிந்த அறிவு கூர்மையாகப் புலப்படும். இவையெல்லாம் சேர்ந்த ஒன்றிலே ஒரு தனிப்பட்ட ஒழுங்கும் அழகும் காணப்படும்." 7**

எனத் திருமதி. கோகிலா மகேந்திரன் குறிப்பிடுகின்றார். நூல்களை வாசிப்பது மட்டுமே ஆயத்தம் செய்தலாகாது. வாசித்த விடயங்களை உள்வாங்கித் தன்மொழியில் வெளிப்படுத்துவதே சிறந்த பேச்சாளரின் பண்பாகும். அம்மையாரின் பேச்சில் இதனை நாம் அவதானிக்க முடிகிறது.

அம்மையாரின் பேச்சு கேட்போரைப் பிணிக்கின்றது. தன்னம்பிக்கையூட்டுகின்றது. சமயப் பேச்சாயினும், இலக்கியப் பேச்சாயினும் அவற்றுள் அறக்கருத்துக்கள் இழையோடும். மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சொல்பவையாக அவை அமையும். இதனாலே தான் ஈழத்தவர் மட்டும்மல்லாது தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பிற நாட்டுத் தமிழர்களும் அம்மையாரைத் தம் தேசத்திற்கு அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தார்கள். கனம் பண்ணினார்கள்.

*(நன்றி: இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம், 2015)*

உசாத்துணை


1. பார்வதிநாதசிவம், ம., 2005 "சிவத்மிழ்ச் செல்வி வாழிய நீடு" வாழ்க அன்னை, ப.33.
2. நகுலா சிவநாதன், "துர்க்காதுரந்தரியே வாழியவே" மு.கு.நூ., ப. 75.
3. சண்முகசுந்தரம்.த., 2009, மு.கு.நூ., ப.16.
4. மேலது, ப.16.
5. ஈழத்துச் சிவானந்தன், 1985, "இருபத்திரண்டு சரட் ஈழத்துத்தங்கம்" சிவத்தமிழ் இன்பம், ப.150.
6. பாரதியார், ப.160.
7. கோகிலா மகேந்திரன், 2000, தங்கத் தலைவி, ப.31.

# மனம் அமைதியாக இருக்க வேண்டுமா?

**1) கேட்டால் தவிர மற்றவர் வேலையில் தலையிடாதீர்கள்**

பெரும்பாலோர் மற்றவரது வேலையில் தலையிட்டு பின்பு தங்கள் நிம்மதியைத் தொலைப்பார்கள். இதற்குக் காரணம் தாங்கள் சிந்தித்தவயே சிறந்ததாக எண்ணி மற்றவரைக் குறை சொல்வதாகும். இந்த உலகில் ஒவ்வொருக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. அதனால் அவரவர் எண்ணம் வேறுப்படும். ஆகவே நாம் நமது வேலையே மட்டும் செய்வோம்.

**2) மறக்கவும்... மன்னிக்கவும்...**

இது காயம் பட்ட மனதிற்குச் சக்தியான மருந்து. நாம் ஒருவரால் துன்புறுத்தபட்டாலோ, கேவலப்படுத்தப்பட்டாலோ அவரை பற்றிய மோசமான எண்ணாங்களை நம்மிடையே உருவாக்கினால், பின்பு அதனால் வருத்தப்பட்டு, தூக்கத்தை இழந்து, ரத்த அழுத்தம் ஏற்பட்டு, வேறு பல இன்னலுக்கு ஆளாக வேண்டி வரும். இந்தக் கெட்ட பழக்கத்தைக் கைவிட்டு கடவுள் மேல் பாரத்தை போட்டு கடவுள் பார்த்துக் கொள்வார் என்று எண்ணுங்கள். வாழ்க்கை மிகவும் சிறியது. அதை இது போன்ற எண்ணங்களால் வீணாக்காமல், மறந்து, மன்னித்து, மகிழ்ச்சியுடன் நடைபோடுங்கள்.

**5) சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுங்கள்**

தன்னந்தனியாக நின்று சூழ்நிலையை மாற்ற நினைபீர்களிலானால் நீங்கள் தோற்பதற்கான வாய்ப்புகளே அதிகம். அதற்குப் பதிலாக நீங்கள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறவேண்டும். அவ்வாறு மாறுவீர்களானால் சுற்று வட்டாரம் உங்களை ஏற்று, உங்களுடன் ஒன்றி, உங்களுக்கு ஏற்றவாறு மாறத் தொடங்கும்.

**6) தவிர்க்க முடியாத காயங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்**

இது துரதிஷ்ட்டகரமான நிலைகளைச் சாதகமாக்கிக் கொள்ள உதவும் வழியாகும். நமது வாழ்நாளில் நாம் பல்வேறு வகையான சங்கடங்களை, வலிகளை, எரிச்சல்களை, விபத்துக்களை எதிர்க்கொள்ள நேரிடலாம். இவ்வாறான, நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைகளில், அவற்றுடன் வாழக் கற்று கொள்ள வேண்டும். விதியின் திட்டங்களைச் சில நேரங்களில் நம்மால் புரிந்து கொள்ள முடியாது. அதன் மேல் நம்பிக்கை வைத்து வாழ்ந்தால், நம்மால் எந்தச் சூழலையும் எதிர் கொள்ளக்கூடிய பொறுமையையும், மனவலிமையையும், மன ஊறுதியையும் பெறலாம்.

**3) பாராட்டுக்காக ஏங்காதீர்கள்**

உலகம் தன்னலம்பார்ப்பவர்களால் நிரம்பப்பட்டது. அவர்கள் எந்தக் காரியமும் அன்றி மற்றவர்களைப் புகழ மாட்டார்கள். இன்று உங்களால் ஏதேனும் ஆக வேண்டுமென்றால் உங்களை போற்றுபவர்கள், நாளை உங்களைக் கண்டுக்கொள்ள மாட்டார்கள். நீங்கள் அதிகாரத்தில் இல்லையென்றல் உங்கள் முந்தைய சாதனைகளை மறந்து உங்களிடம் குறை கூறுவார்கள். இதற்காக நீங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்?. நீங்கள் வருத்தப்பட வேண்டிய அளவுக்கு அவர்கள் பாராட்டு ஈடானதல்ல. உங்கள் வேலையை நீங்கள் சிறப்பாகவும் நேர்மையாகவும் செய்யுங்கள். அதற்கான பலன் உங்களைத் தேடி வரும்.

**4) பொறாமைப் படாதீர்கள்**

நாம் எல்லோருக்குமே பொறாமை எந்தளவுக்கு மனநிம்மதியைச் சீரழிக்கும் என்று தெரியும். நீங்கள் உங்கள் அலுவலகத்தில் கடுமையாக உழைத்தும் பதவி உயர்வு உங்களுக்கு வராமல் உங்கள் நண்பர்களுக்குச் செல்லலாம். பல வருடங்களாக போராடியும் தொழிலில் நீங்கள் அடையாத வெற்றி புதியதாக தொழில் தொடங்கியோருக்குக் கிடைக்கலாம். அதற்காக அவர்கள் மேல் பொறாமைப் படலாமா? கூடாது. ஒவ்வொருவருமே வாழ்க்கையில் அவர்க்களுக்கான நிலையை அடைவார்கள். மற்றவரைப் பொறாமைப் பட்டு வாழ்வில் எதுவும் ஆகப் போவதில்லை, உங்கள் மன நிம்மதியை இழப்பதைத் தவிர.

**7) செய்ய முடிவதையே செய்யுங்கள்**

இது எப்பொழுதும் நினைவில் வைத்து கொள்ள வேண்டியது. பெரும்பாலான சமயங்களில் நாம் நம்மால் செய்ய முடிவதற்கு அதிகமான பொறுப்புகளை கௌரவத்துக்காக ஏற்றுக் கொள்ள முயலுவோம். முதலில் நம்மை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எது நம்மால் முடியும், எது நம்மால் முடியாது என்று அறிந்து கொள்ள வேண்டும். அதிகப்படியான சுமையை ஏற்றுக்கொண்டு பின்பு ஏன் வருத்தப்பட வேண்டும்?. நம்முடைய வெளியுலக நடவடிக்கைக்களை அதிகரித்துக் கொண்டு நம்மால் உள்ளுக்குள் மன அமைதியைப் பெற முடியாது. நாம் நமது இயந்திரமயமான வேலைப் பளுவைக் குறைத்துக் கொண்டு, தினமும் சில நேரங்களை பிரார்த்தனை, தியானம் ஆகியவற்றில் செலவிட வேண்டும். இது நம்முடைய ஓய்வற்ற எண்ணவோட்டத்தைக் குறைக்கும்.

**8) தினமும் தியானியுங்கள்**

தியானம் மனதைச் சாந்தப்படுத்தி உங்களைத் தொந்தரவு செய்யும் எண்ணங்களிலிருந்து விடுதலை செய்யும். இதுவே மன அமைதியின் உட்சநிலையை அடைய உதவும். முயற்சி செய்து இதன் பலனை அடையுங்கள். தினமும் அரை மணி நேரம் முழுமையாகத் தியானம் செய்தால், மீதி இருப்பத்தி மூன்றரை மணி நேரமும் அமைதியை உணரலாம். தியானத்தை நேரத்தை வீணாக்கும் ஒன்றாக நினைக்காமல் அதை தினந்தோறும் செய்து வந்தால், அது அன்றாட வேலைகளில் நமது செயல் திறனை அதிகரித்து வேலைகளைச் சிறப்பாகவும் விரைவாகவும் செய்ய உதவும்.

### 9) மனதை இருட்டறையாக்காதீர்கள்

நமது மனம் எதிலும் ஈடுபாடு இல்லாமல் இருந்தால் அதில் கெட்ட எண்ணங்கள் புகும். அதற்கு வாய்ப்பு இல்லாமல் நல்ல விஷயங்களில் நமது மனதை ஈடுப்படுத்த வேண்டும். நமக்கேற்ற நமது விருப்பத்திற்கேற்ற பொழுதுபோக்கும் காரியங்களில் நேரத்தைச் செலவிடலாம். நமக்குப் பணம் முக்கியமா அல்லது மன அமைதி முக்கியமா என்று முடிவு எடுக்க வேண்டும். சமுக சேவை, இறை சேவை போன்றவை நமக்குச் செல்வத்தைக் கொடுக்காது. ஆனால் மன நிறைவையும் திருப்தியையும் கொடுக்கும். உடல்ரீதியாக ஓய்வெடுக்கும் போதும் ஆரோக்கியமான விஷயங்களைப் படித்தல், கடவுள் நாமத்தை உச்சரித்தல் போன்றவற்றைச் செய்யலாம்.

### 10) காரியத்தை தள்ளிப்போட்டு பின்பு வருந்தாதீர்கள்

இதைச் செய்யலாமா செய்யக்கூடாதா என்று தேவை இல்லாமல் வீண் விவாதம் செய்து நேரத்தை வீணாக்குவதைத் தவிர்க்கவேண்டும். வாழ்க்கையில் யாராலும் எதிர்காலத்தை சரியாகக் கணித்து முழுமையான திட்டத்துடன் வாழ முடியாது. நம்மிடம் உள்ள நேரத்திற்கு ஏற்றாற்போல் திட்டமிட வேண்டும். நாம் நமது தப்புகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளலாம். அடுத்தமுறை அது போன்ற காரியங்களில் வெற்றி கொள்ளலாம். இந்த வேலையை நாம் செய்யவில்லை என்றோ இந்த வேலையை நாம் சரியாகச் செய்யவில்லை என்றோ வருத்தப்பட்டு ஒன்றும் ஆகப் போவதில்லை. கடந்த காலத் தவறுகளில் இருந்து பாடம் கற்க வேண்டுமே ஒழிய வருத்தப்படக் கூடாது.

## யார் நல்ல மனிதன்...?

இன்று பலரது வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் துன்பத்திற்குக் காரணம் எதிர்பார்ப்பு. பெற்றோர் பிள்ளைகளிடமும், முதலாளி தொழிலாளியிடமும், தொழிலாளி முதலளியிடமும், பக்தன் கடவுளிடமும் ஏதோ ஒன்றை எதிர் பார்த்தே (கடவுள் தவிர) ஒருவருக்கொருவர் நட்பு அல்லது உறவு கொள்கின்றனர். ஆனால் அது நிறைவேறாத நிலையில், அவர்களின் எதிர்பார்ப்பு நிகழாத நிலையில் மனது மற்றவர்களிடம் வெறுப்புக் கொள்கிறது.

நாம் ஒன்றின் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தால், அதைச் சுதந்திரமாக விட்டுவிட வேண்டும். அது நம்முடையாதாக இருந்தால், நம்மைத் தேடி அது மீண்டும் வரும் - இல்லையேல் அது வராது. பெற்றோர் பிள்ளை உறவாக இருந்தாலும் சரி, கணவன் மனைவி உறவாக இருந்தாலும் சரி அல்லது மற்ற உறவுகளாக இருந்தாலும் சரி, மேலே சொன்ன உணர்வில் நாம் எல்லோருடனும் வாழக் கற்றுக் கொண்டால் நம் வாழ்க்கை என்றுமே இனிமைதான்.

### சுய அறிவைப் பயன் படுத்துங்கள்

இன்றைக்கு நமது மனம் சொல்வதையே அறிவு கேட்டுக் கொண்டிருக்கிறது .ஆனால், எப்போதுமே நம் அறிவு சொல்வதை மனம் கேட்கப் பழக்க வேண்டும். மனம் ஒரு குதிரையாக இருக்க வேண்டும், அறிவு அதில் ஏறிச் சவாரி செய்ய வேண்டும். இதுதான் அறிவுநிறைந்த அமைதியான வாழ்க்கையாக இருக்கும். ஆனால் இன்றைக்கு அறிவு குதிரையாக இருக்கிறது. மனம் அதில் ஏறி இலக்கில்லாமல் சவாரி செய்து கொண்டிருக்கிறது. மனம் சொல்வதைக் கவனியுங்கள், சுய அறிவால் அலசுங்கள், பின்பு செயலில் இறங்குங்கள். இப்படிச் செய்தால் மனதைப் போட்டுக் குழப்ப வேண்டிய அவசியமோ, அமைதியற்றுப் புலம்பவேண்டியதோ இல்லை. சரியான தீர்வு மனதில் தானாகவே உதிக்கும்.

### நான்தான் (என்னால்தான்) எல்லாம் என்கிற உணர்வை விரட்டுங்கள்

இயல்பாகவே நம்மில் பலர் வாழ்க்கை இன்பமாக இருந்தால் அதற்குக் காரணம் தான்தான் என்றும், தன்னால்தான் அது நடந்தது என்றும் நெஞ்சை நிமிர்த்திக் கூறுவர். ஆனால் அவர்கள் வாழ்வில் எதாவது துன்பம் நேர்ந்தால் அதிலிருந்து (அப்பொறுப்பிலிருந்து) தன்னை எப்படியாவது விடுவித்துக் கொண்டு பழியை மற்றவர் மீதோ அல்லது நேரம் என்று தலைவிதி மீதோ போட்டு விடுவார்கள்.

அதிமேதாவியகவோ, புத்திசாலியாகவோ ஒரு போதும் உங்களை நீங்களே நினைத்துக் கர்வம் கொள்ள வேண்டாம். ஒருவன் சாஸ்திரங்களை முழுமையாகக் கற்ற பிறகும் கூட முட்டாளாக இருக்கக் கூடும் என்கிறது பஞ்ச தந்திரம்.

அறிவாளியாக இருப்பது வேறு, புத்திசாலியாக இருப்பது வேறு - சற்று ஆழ்ந்து யோசியுங்கள், புத்திசாலிகளாக நாம் இருந்தால் இதைப் போன்ற அறிவுரைகள் பெரியோர்கள் மூலம் நாம் பண்பட கிடைத்திருக்காது.

மனதில் தோன்றும் கற்பனையான பிரச்சினையில் மூழ்கி அநாவசியமாக டென்சன் ஆகாமல் இருக்க நாம்

பழகிக் கொண்டால் அது நம் மனத்திற்கு இதம் தரும் விஷயமாக மாறும்.நாம் நம்மையே ரிலாக்ஸ் செய்து கொள்ள உதவும்.

### பரந்த மனப்பான்மை நம்மை மேம்படுத்தும்

நமக்குக் கீழ்நிலையில் உள்ளவர்களிடமிருந்து வரும் நல்ல ஆலோசனைகளை - நமக்கு அது சரி என்றே தோன்றினாலும் -ஏற்றுக் கொள்ள மறுக்கின்றோம்.

நமக்கு நல்ல தீர்வு கிடைக்கலாம். தெருவில் நம்மைக் கடந்து செல்லும் மூன்றாம் மனிதரிடம் கூட நல்ல பதில் கிடைக்கலாம்.

பரந்த மனப்பான்மையுடன் மற்றவர்களது கருத்துக்களை ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்வோம்.

இதன் மூலம் நமக்கு நம் மனதில் புதிய கருத்துச் சிந்தனைகளுக்கான களம் பிறக்கும்.

### மனதை அமைதிபடுத்தத் தியானம் பழகுவோம்

இந்த உலகம் எப்போதுமே எளிமையானதுதான் , சிக்கல் ஆரம்பிப்பது நம்மிடமிருந்துதான். நாம் எப்போதுமே நாமாகவே இருக்க இயல்பாகப் பழகிக் கொள்ள வேண்டும். அதாவது, மனிதன் மனிதனாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

**எப்படி?**

நாம் நமக்குள்ளேயே அமைதியாக இருந்து பழக வேண்டும். அப்படிப் பழகினால், நாம் நம்மையே அறிய முடியலாம், நம் மனத்தை அறியவும் அமைதிப்படுத்தவும் முடியலாம். இதற்குச் சிலவகையான தியானப் பயிற்சிகள் உதவும்.

நமது வாழ்விற்குப் பயன்படாத எந்த ஒரு ஆன்மீக உபதேசமும் நம்மைக் கண்டிப்பாக மேம்படுத்த முடியாது. தெய்வ வணக்கம் நம் மனதை மரத்து போகச் செய்யும். உடம்பு வலிக்கும், ஆனால் வலிக்காதது போல் தோன்றும். நோய் இருக்கும், ஆனால் ஆரோக்யமாக நடமாடச் சொல்லும். கஷ்டங்கள் இருக்கும், ஆனால் மனதில் கவலைகள் தோன்றாது. எது நடந்தாலும் அது நடக்கத்தான் செய்யும் என்ற அலட்சிய மனோபாவத்தை உண்டாக்கும். கவலையையோ, பயத்தையோ பொருட்படுத்தாத ஒரு நிலையைத் தெய்வபக்தி உண்டாக்குகிறது. மனப்பூர்வமாக ஈடுபாட்டோடு தெய்வத்தை வணங்க வேண்டும்.

*(தொடர்ச்சி 31ஆம் பக்கம் பார்க்க)*

# வேதத்தை மொ(மு)ழி பெயர்த்த மேல்நாட்டு அறிஞர்கள்..???

திரு சந்தானம் சுவாமிநாதன்
(தமிழ்நாடு)

அறிஞர்கள் கையில் சிக்கி வேதங்கள் படும் பாடு உலகில் எல்லாவித கஷ்டங்களையும் விடப் பெரியது. பல வெளிநாட்டு அரைவேக்காடுகளின் கைகளில் மட்டுமின்றி நம் நாட்டு இடதுசாரிகளின் கைகளிலும் சிக்கிச் சித்திரைவதைக்குள்ளாகி வருகிறது புனித வேதங்கள். ஆனால் தற்காலத்தில் சமஸ்கிருதம் மற்றும் கிரந்த மொழிகள் வரிவடிவம் பெற்றுவிட அவற்றை எழுதி உணர்ந்த ஓதி உருவேற்றும் தன்மை மறைந்து வரிக்குவரி மனனம் செய்யும் வழக்கம் பெருகிவிட்டது. அநேகமான பிராமணர்களுக்கு தேவபாஷையின் ஞானம் எல்லாம் போய்விட்டதால் அவர்களும் ஆங்கிலம் மூலமாக அதுவும் வெளிநாட்டார் மொழி பெயர்ப்புகள் மூலமாகவே சிலவற்றைப் படிக்கமுடிகிறது. இவையெல்லாம் மொழிபெயர்ப்பு அல்ல, "முழி பெயர்ப்பு". வேதங்களின் பொருளையே மாற்றி நம்மை எல்லாம் யானை பார்த்த குருடன் போல ஆக்கிவிட்டார்கள்.

**…"அயஸ்" என்பதை செம்பு, இரும்பு இன்னும் பொதுவில் உலோகம் என்றெல்லாம் மொழிபெயர்க்கலாம். ஆனால் நாமாக வேதத்தின் காலம் பெ.ஆ.மு 1000…**

இந்திமொழிதெரிந்தவர்கள்நிலைகொஞ்சம்பரவாயில்லை. சில ஒரிஜினல் மொழிபெயர்ப்புகள் கிடைக்கின்றன. தமிழர்கள் நிலை பரிதாபம். இந்தியாவுக்கே வராத மாக்ஸ்முல்லரின் மொழி பெயர்ப்புதான் நமக்கெல்லாம் வேதம். உத்தரப் பிரதேச கிராமத்தான் ஒருவன் நியூயார்க்கே போகாமல் அமெரிக்கா பற்றி 20 பாகங்கள் எழுதினால் யாராவது படிப்பார்களா? ஆனால் நாம் மாக்ஸ்முல்லரைப் படிக்கிறோம்!!


சில அமெரிக்க "பிருகஸ்பதிகள்" சமுத்திரம் என்று வேதத்தில் வந்தால் அது வெறும் நீர் நிலைதான், கடல் அல்ல என்றும் அயஸ் என்று வந்தால் அது இரும்பு என்றும் ஆகையால் பொ.ஆ.மு 1000 தான் அதன் காலம் என்றும் அஸ்வ என்றால் குதிரை என்றும் ஆகையால் கி.மு 1500க்கு முன் வேதம் உருவாகி இருக்க முடியாது என்றும் கதைக்கிறார்கள்.

க்ரிஃபித் என்பவரின் ரிக் வேத மொழிபெயர்ப்பை எடுத்தாலோ மூன்று பக்கத்துக்கு ஒருமுறை "The meaning is obscure" - "அர்த்தம் புரிபடவில்லை" என்று எழுதியுள்ளார். நான் ஷேக்ஸ்பியரின் மாக்பெத் நாடகத்தை மொழிபெயர்த்துவிட்டு 3 பக்கத்துக்கு ஒரு முறை அர்த்தம் விளங்கவில்லை என்று எழுதினால் எனக்கு முட்டாள் பட்டம் கட்டமாட்டீர்களா? இன்னொரு வெள்ளைக்காரப் பெண்மணி கையைத் தூகினால் செக்ஸ், காலைத் தூக்கினால் செக்ஸ் என்று மொழி பெயர்த்துள்ளார். மனம் போல மாங்கல்யம். அவர்கள் வாழும் நிலை, மன நிலையைப் பொறுத்து உரையும் மாறுபடுகிறது.

வேதத்தின் பல சொற்களுக்கு அர்த்தம் புரியவில்லை என்று கி.மு 800ல் வாழ்ந்த யாசஸ்கரே திணறிப் போனார். வேதங்கள் ஏராளமாகப் போனதால்தானே வியாசபகவானே கவலைப்பட்டு அதை நான்காகப் பிரித்து 4 சீடர்களிடம் கொடுத்தார். நமக்கு 800 வருடங்களுக்கு முன் வாழ்ந்த சாயனர், இவை முஸ்லீம் படையெடுப்பில் அழிந்துவிடக் கூடாதே என்ற நல்ல எண்ணத்தில் இதை எழுத்தில் வடித்தநோடு பாஷ்யமும் செய்தார். அவராலும் இதைச் 100மூ சரியாகச் செய்ய முடியவில்லை. ஏனெனில் சொற்களுக்கு அப்படியே பொருள் செய்யக் கூடாது. மேலும் வேதம் என்பது ரகசிய சங்கேத மொழிகளில் எழுதப்பட்டதால் 2000 ஆண்டுக்கு முன்னரே தமிழ் அறிஞர்கள் அவைகளை "நான் மறை" (ரகசியம்) என்று அழகாக மொழி பெயர்த்தார்கள்.

உண்மையில் பழங்காலத்தில் சொற்களுக்கு பல பொருள்கள் உண்டு. சங்க இலக்கியத்தைக் கூட பாஷ்யக்காரர்கள்- உரைகாரர்கள் இல்லாவிடில் நாம் புரிந்து கொள்ளமுடியாது. ஒரு சில எடுத்துக் காட்டுகள் கூறி விளக்க முயல்கிறேன். பொன் என்றால் தங்கம், இரும்பு, உலோகம் என்று மூன்று பொருள்கள் உண்டு. வள்ளுவர் "தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று" என்று பாடுகையில் தூண்டிலில் உள்ள இரும்பு என்றும் "சுடச் சுட ஒளிரும் பொன் போல" என்று பாடும்போது தங்கம் என்றும் கோவிலில் "ஐம்பொன் சிலைகள்" என்னும்போது பஞ்ச உலோகங்கள் என்றும் பொருள் கொள்கிறோம். சங்கப் பாடலில் யானைக்குப் பொன் சங்கிலி போட்டதாக வரும் இடத்தில் தங்கம் என்று உரைகாரர்கள் எழுதியுள்ளனர். நான் விதண்டா வாதத்துக்காக இல்லை இது இரும்பே என்றும் வாதாடலாம்.

பொன் என்பதை முன்-பின் வரும் சொற்களையும் கருத்திற்கொண்டு எப்படி மாற்றி மாற்றி மொழிபெயர்க்கிறோமோ அப்படித்தான் வேதத்தில் "அயஸ்" என்பதை செம்பு,



இரும்பு இன்னும் பொதுவில் உலோகம் என்றெல்லாம் மொழிபெயர்க்கலாம். ஆனால் நாமாக வேதத்தின் காலம் பொ.ஆ.மு 1000 என்று கொண்டுவிட்டாலோ இரும்பு என்று மட்டும்தாம் மொழி பெயர்ப்போம். இப்படித்தான் காளிதாசரையும் குப்தர் காலம் என்று வெள்ளக்காரர்கள் முடிவு செய்து எழுதிவந்தார்கள். நான் சங்கப் பாடல்களைக் கொண்டு அவரது காலம் பொ.ஆ.மு.முதல் நூற்றாண்டு என்று நிரூபித்துள்ளேன்.

"மா" என்ற சொல்லுக்கு பல பொருள் உண்டு. பெரிய, கறுப்பு, மிருகம் இது போல நிறைய அர்த்தங்கள் உண்டு. அது வரும் இடத்தைப் பொறுத்து எந்த மிருகத்தின் பெயரையும் அத்துடன் இணைக்கலாம். இது போலத்தான் அஸ்வ என்ற சொல்லும். வேகமாகச் செல்லும் எதற்கும் பொருந்தும். குதிரை என்று மட்டுமே பொருள் கொள்ள வேண்டியதில்லை.

தமிழ், வட மொழி இலக்கியங்களில் எங்குமே இல்லாத ஆரிய திராவிட வாதத்தைப் புகுத்தி அதற்கேற்றார் போல எல்லா விஷயங்களுக்கும் வியாக்கியானம் செய்து நம்மை எல்லாம் குருடர் ஆக்கிவிட்டார்கள். சிந்து சரஸ்வதி சமவெளி நாகரீகத்தை நாம் சரியாக அணுக முடியாதவாறு தடுத்துவிட்டார்கள்.

இந்திரன் என்ற சொல்லுக்கு இவர்கள் தவறாக அர்த்தம் செய்தது பெரிய தவறு. சிங்கத்தை ம்ருகேந்திரன், கருடனை ககேந்திரன், யானயில் சிறந்த யானையை கஜேந்திரன், மனிதர்களில் சிறந்தவரை நரேந்திரன், தேவர்களில் சிறந்தவரை தேவேந்திரன், அரசர்களில் சிறந்தவரை ராஜேந்திரன் என்று சொல்கிறோம். இந்த முன் ஒட்டு (**Prefix**) இல்லாவிடினுங்கூட இடத்தைப் பொறுத்து நாம் அர்த்தம் கொள்ளமுடியும். மிருகமா, பறவையா, மனிதனா என்று சொல்ல வேண்டியதில்லை. இதை எல்லாம் வெள்ளைக்காரர்கள் தாறுமாறாக மொழி பெயர்த்து விட்டார்கள்.

இந்திரனை "ஏறு" (ரிஷபம்) என்று அழைப்பதைப் போலவே சங்கத்தமிழ் நூல்களில் மள்ளர் ஏறு (மன்னர்களில் உயர்ந்தோன்), குட்டுவர் ஏறு, புலவர் ஏறு (புலவர்களில் சிறந்தோன்), பரதவர் போர் ஏறு, புயல் ஏறு (பயங்கர மழை), உறுமின் ஏறு (பயங்கர இடி) என்று பதிற்றுப்பத்தில் பயன்படுத்தியுள்ளனர். வேதத்தை மொழிபெயர்த்தது போல ஏறு என்று வரும் இடமெல்லம் காளை மாடு என்று மொழி பெயர்த்தால் அர்த்தம் அனர்த்தம் ஆகிவிடும். வேதத்தை மொழி பெயர்த்த வெளிநாட்டார் இந்தச் சிதைக்கும் வேலையைச் செய்துள்ளனர். இப்பொழுது வேதம் பட்டபாட்டை திருக்குறள் படுகிறது. பகுத்தறிவுகளின் கைகளில் அது சிக்கிவிட்டது!

இந்தியாவுக்கே வராத மாக்ஸ்முல்லரை நம்புவதைவிட உபன்யாசகர்களையும் சங்கராசார்யார்களையும் நம் ஊர் வேத பண்டிதர்களையும் நம்புவோமாக. சம்ஸ்கிருதத்தை ஒரளவாவது படித்து இந்தத் தீபத்தை வருங்காலச் சந்ததியினர்க்கு ஒளி ஊட்ட எடுத்துச் செல்வோமாக.

---

*(29ஆம் பக்கத் தொடர்ச்சி)*

## மனமும் அமைதியாக......

முட்டாள் புத்திசாலியானால் ஞானத்திற்கு வருகிறான். புத்திசாலி முட்டாளுகும் போது காமத்திற்கும், போதைக்கும் இன்னும் பல எதிர்மறையான செயல்களை செய்வதற்கும் ஆரம்பிக்கிறான்.

நாம் அடையும் மகிழ்ச்சியும் உண்மையானதல்ல, நாம் அடையும் துன்பமும் உண்மையானதல்ல. மனமே இரண்டையும் வேறு படுத்துகிறது.

**மனதிற்கு மருந்து பணமா அல்லது தூய்மையான அன்பா?**

பணம் என்பது நாம் வழங்கும் சேவை, செய்யும் வேலைக்கான வெகுமதி மட்டுமே.

நல்ல மனோபாவம் கொண்டவர்கள் மனிதர்கள் மீது அன்பு செலுத்திப் பணத்தை ஒரு கருவியாக மட்டும் செயல் படுத்துவார்கள். ஆனால் இன்று பணத்தின் மீது தான் அன்பு செலுத்தப்படுகிறது.

பணம்தான் முதன்மையானது என்ற எண்ணத்தை மனதில் ஏற்றிவிட்டால் உறவுகளும் நட்பும் இனிக்காது.

உறவுகளும் நட்பும் முதன்மை பெற்றால் பணம் நமது அடிமை. ஆனாலும் உறவுகளும் தூய மனத்தால்

நம்மை நேசிக்க வேண்டும். வேஷங்கள் என்றுமே நிலைப்பதில்லை.

தூய அன்பு என்பது நாமும் நன்றாக இருக்க வேண்டும், மற்றவர்களும் நன்றாக இருக்க வேண்டும் என்ற உணர்வுதான்.

நல்ல மனோபாவம் கொண்ட மனிதனின் வாழ்க்கை இன்பம் நிறைந்த பூஞ்சோலை. நம் வாழ்க்கையில் நம்மை நாடி வரக்கூடிய துன்பங்களை , நாம் ஒரு சிறந்த அனுபவமாக ஏற்றுக்கொண்டால் நம்மால் சிறப்பான வாழ்க்கை வாழ முடியும்.

அன்பின் வாசத்தை உணராத மனிதர்கள் இருந்தும் என்ன பயன்?...

**நிறைவாக....**

இந்த உலகில் நம்மைத் தாக்குவது இரண்டு வகையான சோகங்கள்

1 . நாம் ஆசைப்பட்டது கிடைக்காத போது .

2 . நான் ஆசைப்பட்டது கிடைத்து அதைக் காப்பாற்றிக் கொள்ளப்பாடுபடும் போது .

ஆசைப் படாமல் எதையும் பெற முடியாது. ஆனால் ஆசையே அளவிற்கு அதிகமானால் துன்பமே மிஞ்சும்.

எப்போதுமே நாம் நம் தேவையை அதிகரித்துக் கொண்டு பிச்சைக்காரனைப் போல் பணத்திற்கு அலைவதை விட, நம்முடைய தேவைகளைக் குறைத்துக் கொண்டு நம்மால் அரசனை விட சுகமாக வாழ முடியும்.

முயற்சி செய்து பார்ப்போமே ...!

வாழ்க்கையில் உணர்சிகளுக்கு இடம் கொடுக்கும் போது சற்றே நிதானித்து அறிவையும் பயன் படுத்துவோம்.

மனங்களைப் புரிந்து கொள்ளுங்கள் . புரியாமல் நாம் என்ன சொன்னாலும் சொல்வது ஒன்று செய்வது

ஒன்றாகவே இருக்கும்.

துன்பம் நமக்குச் சுமையல்ல. மனதில் இருப்பதை நல்ல உறவுகளிடமும், நல்ல நண்பர்களிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள். அடுத்தவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் போது துன்பம் தொலைந்து போகிறது இன்பம் இரட்டிப்பாகிறது.

# மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம்!

# "நெல்லி"

## (தொடர் 06)

**முருகையா பிரணவன்**

நெல்லிக்காய் பறிப்பதற்காக அடுத்தவன் வீட்டு வேலியெல்லாம் ஏறிப்பாய்ந்த நாட்கள் இனிமையாக என் நினைவுக்கு வருகின்றன. பெருநெல்லிகாயைப் பறித்துத் தின்பதம் அதன்பின் தண்ணீர் அருந்தும்போது வரும் இனிப்புச் சுவையையும் அனுபவிக்காதவர்கள் தமது பிறவிப்பனை அடையாதவர்களாகவே எடுத்துக்கொள்ளலாம். அப்படி ஒரு சுவை அது.

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான வீடுகளில் அன்று வேம்பு, மா, பலா, நெல்லி, முருங்கை, அகத்தி என மனிதனுக்கு ஆரோக்கியம் தரும் மரங்கள் ஒவ்வொரு வீட்டிலும் காணக்கூடியதாகவுள்ளது. யுத்தத்தின் கோரப்பிடியிலும் மக்கள் அதைப் பேணிப்பாதுகாத்து நலமுடன் வாழ்ந்தனர். அன்றாட உணவிற்கூட மாங்காய்ச்சம்பல் அல்லது சொதி, சிறுநெல்லிக்காயில் சொதி, அக்த்திக்கீரை, முருங்கைக் கீரையில் சொதி அல்லது வறை, வேப்பம்பூ வடகம் என்ற அமிர்தமான உணவுமுறை தவறாமல் இடம்பிடித்திருந்தது.


ஆனால் என்று யாழ்ப்பாணத்து மக்களின் ஆசை அதிகமாகி ஆடம்பரம் பெருகி வீட்டு வளவில் நின்ற மரங்களைத் தறித்து வீடுகள் விசாலமாகி, குறோட்டன் என்ற பெயரில் காட்டு நச்சுச் செடிகள் இடம்பிடித்ததுடன் அந்நியநாட்டுப் பணவரவால் சோம்பல்தனம் அதிகமாகி, வெள்ளைக்கோதுமையும் வெளிநாட்டுக் குளிர்பானவகைகளும் என உணவுமுறையில் மாற்றம் வந்ததோ, அன்று பிடித்தது நோய். இந்நிலை மாறவேண்டும். நாம் அனைவரும் வீடுகளில் இப் பயன்தரு கற்பக விருட்சங்களை மீண்டும் நட்டு ஆரோக்கியமாக வாழவேண்டும்.

**நெல்லி**

நெல்லி (Phyllanthus Emblica) யுபோர்பியேசி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தாவரம். இது இந்திய மருத்துவ முறைகளில் வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது.இது உயரமான இலையுதிர் மரம். இதன் காய்கள் சதைப் பற்றுடனும், உருண்டையாக ஆறு பிரிவாகப் பிரிந்தும், வெளிரிய பசுமை நிறத்திலோ, மஞ்சளாகவோ காணப்படும்.


நெல்லிக்கனியில் உள்ள மருத்துவக் குணம் ஏராளம். தினமும் ஒரு நெல்லிக்கனி சாப்பிட்டால் மரணத்தைத் தள்ளிப்போடலாம் என்று கூறுவதுண்டு. நெல்லிக்கனியில் சிறு நெல்லி, பெரு நெல்லி என்று இரண்டு வகை இருக்கிறது.

**நெல்லிக்காய் – மருத்துவப் பயன்கள்**



சிறுநெல்லி

- நெல்லிக்காய் புளிப்பு, இனிப்பு மற்றும் துவர்ப்புச் சுவைகளைக் கொண்டது குளிர்ச்சித் தன்மையானது கண்களுக்குக் குளிர்ச்சி தரும் செரிமானத்தைக் தூண்டும் சிறுநீர் பெருக்கும் குடல் வாயுவை அகற்றும் பேதியைத் தூண்டும் உடல்சூடு, எலும்புருக்கி நோய், பெரும்பாடு, வாந்தி, வெள்ளை, ஆண்குறிக் கொப்புளங்கள் போன்றவற்றைக் குணமாக்கும்.
- நெல்லி வேர், நரம்புகளைச் சுருக்கும் வாந்தி, அருசி, மலச்சிக்கல் ஆகியவற்றைக் குணமாக்கும். நெல்லிக்காய் வற்றல், குளிர்ச்சி தரும் இருமல், சளி போன்றவற்றைக் குறைக்கும் உடலைப் பலப்படுத்தும்.
- நெல்லிக்காய் தைலம் நாட்டு மருந்துக் கடைகளில் பரவலாக விற்பனை செய்யப்படுகின்றது. இதனைத் தலையில் தேய்த்துத் தலைமுழுகிவர கண்கள் பிரகாசமாக இருக்கும் பொடுகு கட்டுப்படுவதுடன், முடி உதிர்தலும் தடுக்கப்படும்.
- நெல்லிக்காய் மரப்பிசின் பல மருந்துகளில் கூட்டுப்பொருளாகச் சேர்கின்றது.
- நெல்லிக்காய் சிறிய அல்லது நடுத்தர உயரமான, இலையுதிர்க்கும் மர வகையைச் சார்ந்தது. நெல்லி இலைகள் புளியம் இலையை விடச் சிறியவை. இறகு வடிவமானவை. நெல்லிக் கிளைகள் இறகு போன்ற தோற்றமுள்ளவை.
- நெல்லி ஆண், பெண் பூக்கள் தனித்தனியானவை. சிறியவை, வெளிறியவை, பசுமையானவை, அடர்த்தியானவை, கொத்தானவை. நெல்லிக்காய்கள் கொத்தானவை. இளம் மஞ்சள் நிறமானவை. பழங்கள் 2.5 செ.மீ. வரை குறுக்களவு கொண்டவை. சதைப்பற்றானவை. உருண்டையானவை. ஆறு விதைகள் கொண்டவை.



பெருநெல்லி

- தமிழ்நாடு முழுவதும் காடுகளில் வளர்கின்றன. வீட்டுத் தோட்டங்களில், தோப்புகளில் விளையும் மரங்கள் பெரிய கனிகளுடன் காணப்படும். நெல்லிமுள்ளி எனப்படும் உலர்ந்த காய் எல்லாக் காலங்களிலும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். நெல்லிக்காய் இலை, காய், வற்றல் ஆகியவை மருத்துவப் பயன் கொண்டவை.

- வைட்டமின் 'சி' சத்து நிறைந்ததாக உள்ள நெல்லிக்கனிகள் பழ வகைகளுள் மிகவும் முக்கியமானவை. நெல்லிக்காய் வற்றல், நெல்லிக்காய் ஊறுகாய் போன்றவை ஆரோக்கியம் தரும் உணவுப் பொருட்களாகும்.
- நெல்லி மரங்கள், வீட்டு மராமத்து வேலைகளுக்கும் பயன்படுபவை. நெல்லிக்காய் பட்டைகள், சாயங்கள் மற்றும் தலைக்கழுவி நீர்மம் தயாரிப்பதில் பயன்படுகின்றன.
- நெல்லி கட்டைகள், நீரால் எளிதில் பாதிக்கப்படுவதில்லை. நெல்லிக்காய் இலைகள், ஏலக்காய் செடிகளுக்கு உரமாகவும் பயன்படுகின்றன. இவை மண்ணில் அமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்கின்றன.
- நெல்லிக்காய் சாறு 15 மி.லி., தேன் 15 மி.லி., எலுமிச்சம்பழச் சாறு 15 மி.லி. ஒன்றாகக் கலந்து காலையில் மட்டும் சாப்பிட்டுவர மதுமேகம் குணமாகும்.

### திரிபாலா சூரணம்

விதை நீக்கிய நிலையில் உள்ள கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் மூன்றையும் தனித்தனியாகக் காயவைத்து தூள் செய்து வைத்துக்கொண்டு, சம அளவாக ஒன்றாகக் கூட்டி நன்கு, கலந்து, காற்றுப்புகாத கண்ணாடி சீசாவில் வைத்து பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே திரிபலம் அல்லது திரிபலா சூரணம் எனப்படும் ஒரு பலநோக்கு கை மருந்து ஆகும்.

2 தேக்கரண்டி பொடியை ½ லிட்டர் தண்ணீரில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். 6 முறைகள் தினமும் கண்களை இந்த நீரால் பஞ்சு கொண்டு துடைக்க கண் எரிச்சல் மற்றும் கண்ணில் தண்ணீர் வருவது கட்டுப்படும்.

புளிச்ச ஏப்பம், செரியாமை, அஜீரணம், மலச்சிக்கல் போன்ற வயிற்று உபாதைகளுக்கு ஒரு தேக்கரண்டி பொடியை வாயிலிட்டு, வெந்நீர் அருந்த வேண்டும். இதை ஒரு மந்திர மருந்தாக உணரலாம்.

ஒரு பிடி நெல்லக்காய் இலைகளை 1 ½ லிட்டர் நீரில் இட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதைப் பொறுக்கும் சூட்டில் வாயில் ஊற்றிக் கொப்பளிக்க வேண்டும். அல்லது பட்டையை தூள் செய்து வைத்துக் கொண்டு, தேனில் குழைத்து புண்ணின் மீது தடவ வாய்ப்புண் குணமாகும்.

சாதாரணமாக நமக்கு குறைந்த செலவில் கிடைக்கும் ஒரு சத்துள்ள பழம் நெல்லிக்காய் ஆகும். நுரையீரல் சார்ந்த காசநோயை இது விரைவாகக் குணப்படுத்துவது மருத்துவ ஆய்வுகள் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நெல்லிக் கனிகளை உலர்த்தி வற்றலாக்கி, வைட்டமின் "சி" சத்து குறைவால் வரும் ஸ்கர்வி போன்ற நோய்களை நெல்லிக்காய் குணப்படுத்தும். மேலும், இது உடலில் எதிர்ப்பு சக்தியை நிலைப் படுத்தக் கூடியது. மொத்தத்தில் நெல்லிக்காய் ஒரு கற்ப மருந்தாகத் திகழ்கின்றது.

### தமிழ் இலக்கியத்தில் இடம்

கடையெழு வள்ளல்களில் ஒருவரான குறுநில மன்னரான அதியமானுக்கு, தனக்குக் கிடைத்த சாகா வரம் தரும் நெல்லிக்கனியை, ஔவையார் பரிசிலாகத் தந்து "கோன் உயர குடி உயரும்" என்ற தத்துவத்திற்கு வித்திட்டார். அதியமான், அந்நெல்லிக்கனியைத் தான் உண்பதை விட, ஔவையார் உட்கொண்டால், அதனால் ஔவையாரின் ஆயுள் ஸ்திரமடைந்து நீண்டகாலம் வாழ்வதால் தமிழுக்கு மிக்க பயன் விளையும் என்று அவருக்கு கொடுத்ததாக இலக்கியத்தில் உள்ளது. இது நாம் அனைவரும் அறிந்தது.

### நெல்லிமரத்தின் சிறப்புப் பற்றிய புராணக் குறிப்பு

குபேரன் பணக்காரன் என்பது நம் அனைவருக்கும் தெரியும். அந்தக் குபேரனுக்கே கஷ்டம் வந்தபோது நெல்லி மரங்களை வளர்த்து மீண்டார். போர் ஏற்பட்டு நாடு நகரங்களையெல்லாம் இழந்த குபேரன் வேறு வழியில்லாமல் சிவபெருமானிடம் முறையிட சிவபெருமானோ நீ நிறைய நெல்லி மரங்களை வளர்த்து விட்டு என்னை வந்து பார் என்றார்.

குபேரனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் சொன்னது சிவபெருமானாயிற்றே! அதனால் ஆயிரக்கணக்கான நெல்லி மரங்களை வளர்த்து வந்தார் குபேரன். நெல்லி மரம் பூ பூத்தது. பூவெல்லாம் காய் ஆகின, காய்களெல்லாம் முற்றின. குபேரனை எதிர்த்த அரசன் கூட ஓடி வந்து கப்பம் கட்டினான். செல்வம் பெருகியது. நாடு நகரமெல்லாம் திரும்பவும் கிடைத்தது.

சிவபெருமானிடம் சென்றான் குபேரன். "எனக்கு ஒன்றும் புரியவில்லை எம்பெருமானே!, நெல்லி மரம் வளர நானும் உயர்ந்தேன். இது என்ன விந்தை?" என்று கேட்க, சிவபெருமான் கூறினார் "நீ வைத்தது மரங்கள் அல்ல. லட்சுமி தேவிகள். நெல்லிமரத்தை வளரத்துத் தினமும் தண்ணீர் ஊற்றி லட்சுமி தேவியின் அருள் பெற்றாய். அதோடு நீ செய்த பாவங்களும் தீர்ந்தது. நெல்லி மரம் லட்சுமி தேவியின் சொரூபம் என்றார். ஆகவேதான் லட்சுமி தேவியின் அருள் பெற்றாய் நீ" என்றார்.

### ஆரோக்கியமான வாழ்விற்கு தினம் ஒரு நெல்லிக்கனி.

தினமும் ஓர் நெல்லிக்கனி எனச் சாப்பிட்டு எளிதாக சத்துகளையும், நோய் எதிர்ப்பு சக்தியையும் பெற்றுள்ளனர். நாமும் நெல்லிக்கனியை நம் அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கியமாக வாழலாம்.

## அஞ்சலி – திருமதி திலகா விஜயரட்ணம்



யாழ்ப்பாணம் நீராவியடியில் பிறந்து, யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சிறந்த ஆங்கில ஆசிரியையாகத் திகழ்ந்து, தனது எழுத்துக்களால் தமிழுக்கும் சைவத்திற்கும் பெருந்தொண்டாற்றியதுடன், கொழும்பில் வாழுங்காலத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் நலன்விரும்பியாகவும் தொண்டராகவும் இருந்து மாமன்றத்தின் பணிகளுக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு நல்கிவந்த, திருமதி திலகா விஜயரட்ணம் அவர்கள் 11-08-2018 அன்று பரம்பொருளின் திருவடிநீழலை அடைந்துவிட்ட செய்திகேட்டு மிகவும் கவலையடைகின்றோம்.

மாமன்றத்தினால் வெளியிடப்பட்ட "இந்து மக்களுக்கோர் கையேடு" என்னும் நூலைப் புலம்பெயர்ந்து வாழும் இளைய சந்ததியினருக்கும் பயனுள்ள வகையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மெருகேற்றி வெளியிடும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுச் சீர்பெறச் செய்து முடித்தவர் திருமதி திலகா விஜயரட்ணம் என்பதனையும் நாம் இங்கு நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் மாணவர்களுக்குப் பயன்தரக்கூடியவகையில் இந்து சமய கோட்பாடுகளின் தத்துவங்கள் பற்றி ஆங்கில மொழியில் விரிவாக எழுதிய "Some Aspects of Hinduism" என்னும் நூலையும் 16-09-2016ல் மாமன்றத்தினூடாக வெளியிட்டார்.

அன்னாரது எழுத்துக்கள் மாமன்றத்தின் பல்வேறு நூல்களிலும், குறிப்பாக இருதிங்கள் ஆன்மீக சஞ்சிகையான "இந்து ஒளி"யில் இடம்பெற்றதையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.

## ஒலுமடு – வெடுக்குநாறி ஆதி ஐயனார் ஆலயம் மீதான தொல்பொருட் திணைக்களத்தின் நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு மாமன்றம் கண்டனம்

ஆண்டாண்டு காலமாக இலங்கையில் வாழும் இந்துக்களை - அவர்களின் இனப்பரம்பலையும் அவர்களது தொல்லியல் வழிபாட்டு இடங்களையும் சிதைக்கும் நடவடிக்கைகள் ஏதோ ஒரு வகையில் தொடர்ந்தவண்ணமே உள்ளது.

அதன் ஒரு அங்கமாகவே பாரம்பரிய - வரலாற்றுத் தொன்மைமிக்கதொரு இடமாகிய, வவுனியா மாவட்டத்தின் ஒலுமடு பிரதேசத்திலுள்ள வெடுக்குநாறிமலை ஆதி ஐயனார் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்களும் கட்டுப்பாடுகளும் அமைந்துள்ளன.

ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி நெடுங்கேணி பொலிஸார் ஆலயத்தைச் சோர்ந்தவர்களை அழைத்து ஆலயத்திற்குச் செல்லத் தடைவிதித்திருந்தனர். எனினும் மறுநாள் ஆடிஅமாவாசை விரதம் என்பதனால் சென்று வழிபாடியற்ற ஆலயத் தரப்பினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று வழிபட மட்டும் அனுமதி வழங்கினர் பொலிசார்.

மறுபடியும் 12ந் திகதி ஆலய நிர்வாகத்தினரை அழைத்த பொலிசார், ஆலயத்தில் எவ்வித கட்டுமானங்களையும் மேற்கொள்ள வேண்டாமெனவும், ஆலயத்திற்கு அருகிலுள்ள காணி தொல்பொருட் திணைக்களத்திற்குச் சொந்தமானதெனவும் அதனுட்செல்வது தண்டனைக்குரிய குற்றம் எனவும் விதித்த கட்டுப்பாடுகள் அப்பட்டமாக அடக்குமுறையையும் மக்களின் மதவழிபாட்டு சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவுமே நோக்கவேண்டியுள்ளது.

இந்நாட்டில் தொல்பொருட் திணைக்களத்தினால் கடந்த காலங்களில் இந்துக்களின் வரலாற்றுத் தொன்மைமிக்க ஆலயங்களின்மீது விதிக்கப்பட்டுவரும் தொடர்ச்சியானதொரு நியாயமற்ற கட்டுப்பாடுக்ள் மற்றும் வரலாற்றுத் தடயங்களை அழிக்க அல்லது மாற்றியமைக்க முனைவது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதுடன் இது தொடர்பில் மாமன்றம் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க என்றும் பின்னிற்காது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

இந்தவகையான செயல்களினூடாக இந்துக்களுக்கு எதிரானதொரு மறைமுக நடவடிக்கையொன்று காலங்கலாமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையையும் நாம் தொடர்ந்து அவதானித்து வருவதுடன், அவ்வப்போது தேவையான நடவடிக்கைகளை உரிய தரப்பினருடன் தொடர்புகொண்டு முன்னெடுத்து வருகின்றோம். ஆனாலும் சில எமக்குத் தெரியாமலேயே நடந்தேறிவிடுவதும் - அவைபற்றித் தெரிந்துகொண்ட மக்களோ, அவ்வப்பிரதேச இந்து அமைப்புக்களோ, போதிய ஆதாரங்களைத் திரட்டி எமக்கு அறிவிக்கத் தவறிவிடுகின்றமையையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் மனவேதனையுடன் குறிப்பிட்டேயாகவேண்டும்.

## சிவனொளிபாதமலையின் பெயரினை புத்தரின் பாதஸ்தானமாக மாற்றியமைக்கும் செயற்பாடுகளுக்கு மாமன்றம் கடும் கண்டனம்

இலங்கைவாழ் இந்துக்களுக்கு அதிர்ச்சிதரும் செய்திதான் சிவனொளிபாத மலையின் பெயர் மாற்றம். கடந்த பல ஆண்டுகளாக இந்துக்கள் மீதும் இந்துமதத்தின் மீதும் பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது நாம் அனைவரும் அவதானித்து வருகின்ற ஓர் பாரதூரமான விடயமாகும்.

சிவனொளிபாத மலை தொடர்பில் ஒவ்வொரு மதத்தினருக்கும் ஒவ்வொரு நம்பிக்கை உள்ளது. அவை யாவற்றையும் இந்துக்கள் மதித்தே நடந்துவந்தனர். ஆனால் கடந்த 2016ல் இப் பெயர்ப்பலகையில் காணப்பட்ட அடம்ஸ்பீக் என்ற பெயர் அழிக்கப்பட்டு ஆங்கிலத்திலும் ஸ்ரீபாத என்றே

எழுதப்பட்டது. அதன் தொடர்வினையாக இவ்வருடம் சிவனொளிபாதம் எனும் பெயர் அழிக்கப்பட்டது மட்டுமின்றி ஒட்டுமொத்தமாகவே இந்துக்களின் நம்பிக்கை - மத சுதந்திரம் என்பன வெளிப்படையாக அழிக்கப்பட்டு "கௌதம புத்தரின் பாதஸ்தானம்" என்றே மூன்று மொழிகளிலும் பதிக்கப்பட்ட நிலையான பெயர்க்கல் அங்கு வைக்கப்பட்டுள்ளது. இவ் அநாகரிகமான செயலுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவுசெய்கின்றது.

இப் பெயர் மாற்றம் தொடர்பில் கடந்த அக்டோபர் 2017ல் ஹிரு செய்தி இணையத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தியில், இரத்தினபுரி பிரதேச செயலகம் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பின்படி "சிவனொளிபாத மலையின் பெயரை கௌதம புத்தரின் ஸ்ரீபாதஸ்தானம் என மாற்றுவது தொடர்பாக எமக்கு ஒரு திட்ட முன்மொழிவு கிடைக்கப்பெற்றுள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து அரச வரத்தமானியில் பிரசுரித்து அதன் பெயரை மாற்றுவது தொடர்பில் நாம் நடவடிக்கை எடுப்போம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு தேசிய இனத்தின் சுதந்திரமான மத நம்பிக்கையை அவமதித்து எதேச்சாதிகாரமாக ஒரு தேசிய பொதுச் சொத்தின் மீது இப் பிரதேச செயலகம் எடுத்த முடிவினையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆனாலும் இதுவரையில் அப் பெயர் மாற்றம் தொடர்பில் அரச வர்த்தமானி அறிவித்தல்கள் ஏதும் வெளிவந்துள்ளதாக எமது புலனுக்கு எட்டியவரையில் தெரியவில்லை. அவ்வாறானதொரு அரச அறிவித்தலின்றி ஒரு தேசிய பொது உடமையினை பெயர் மாற்றியிருந்தால் அவ்வாறான நடவடிக்கைகூட சட்டவிரோதமானதே எனவும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் இப்




பெயர்மாற்றம் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டு, பழையபடி சிவனொளிபாத மலை என்று தமிழிலும் குறிப்பிடுமாறும், இவ்வாறான இனச்சமநிலையை சீர்குலைக்கும் நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்டவர்களை அறிந்து சட்டத்தின்படி தண்டிக்குமாறும், இலங்கை வாழ் இந்துக்களின் பிரதிநிதியான மாமன்றம் வேண்டுகோள் விடுக்கின்றது.

அத்துடன் எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் மேலும் இடம்பெற்றால் அவை இந் நாட்டின் சமத்துவத்திற்கும் பன்மைத் தன்மைக்கும் விடுக்கப்படும் அச்சுறுத்தலாகும் என்பதுடன் அரசால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முயற்சிகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி அரசின் மீது தமிழ் மக்களின் நம்பிக்கையை இழக்கும் நிலை ஏற்படும் என்பதையும் அனைவரும் கவனத்திற்கொள்ள வேண்டும்

## கிழக்குப் பல்கலையில் அமரர் கந்தையா நீலகண்டன் நினைவேந்தல்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறையின் ஒழுங்கமைப்பில், மறைந்த மாமன்றத் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு 03-10-2018 கலைகலாசாரபீட கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி (திருமதி) எஸ். கேசவன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு கலைகலாசாரபீடாதிபதி திரு.மு.ரவி அவர்கள் சிறப்பு அதிதியாகவும், அமரரின் மனைவி திருமதி சசிதேவி நீலகண்டன் மற்றும் மகன் திரு. பிரணவன் நீலகண்டன் ஆகியோரும், மாமன்ற ஆலோசகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வர குருக்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.சிவஞானம், வைத்தியகலாநிதி ஆ.சிவசோதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுடரேற்றல், அஞ்சலி, தலைமையுரை, பீடாதிபதியின் உரைகளைத் தொடர்ந்து, அமரரின் நினைவின் ஊடான அனுபவப் பகிர்வு உரையினை மாமன்ற உறுப்பினரும் சைவவித்தகருமான திரு. வெ. சசிகரன் ஆற்றினார்.

அமரரின் ஞாபகார்த்த புலமைப்பரிசில் ஒன்றினை ஆண்டுதோறும் இந்து நாகரிகத்துறை மாணவர்களுக்கு வழங்கும்வண்ணம் வைப்பு நிதியாக 300,000 ரூபா. அமரரின் குடும்பத்தினரால் பீடாதிபதியிடம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடரந்து பல்கலைக்கழக வளாகத்தில் மரங்களும் அமரரின் நினைவாக நாட்டப்பட்டன.

## அஞ்சலி – ஊரெழு சண்முகநாதன்



"கட்டட வித்தகர்" என்ற பட்டத்திற்கு உரித்தான, ஊரெழு சண்முகநாதன் அவர்கள் 24-10-2018 அன்று இறையடி சேர்ந்தார்.

ஆன்மீக ரீதியில் மிகுந்த ஆர்வம் கொண்ட திரு.சண்முகநாதன், மாமன்றத்தின் முன்னைநாள் தலைவர், அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களுடன் மிகவும் அந்நியோன்யமான நட்பினைக் கொண்டிருந்ததுடன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பல்வேறு கட்டடப்பணிகளில் தனது பங்களிப்பினைத் திருப்பதிகரமாக நிறைவேற்றியவர். குறிப்பாக நல்லை ஆதீன புதிய கட்டடம் அமைத்தல், மாமன்றத்தின் யாழ். பணிமனை, கீரிமலையில் சிவபூமிமடம், மாமன்றத்தின் திருமுறிகண்டிக் காணியில் அவர் அமைத்துவந்த 'சரவணப்பொய்கை' என்பவற்றை குறிப்பிட்டுச் சொல்லமுடியும்.

மாமன்றத்தின் திருமுறிகண்டிக் காணியில் 'சரவணப்பொய்கை' வடிவமைப்பில் நீர்த்தடாகத்தின் மேல் அறுகோண மண்டபத்தினை அழகிய விமானத்துடன் அமைத்துவந்ததுடன், அருகில் தங்குமிடவசதி மற்றும் போரால் பாதிக்கப்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதார முயற்சிக்கென சிற்றுண்டிச்சாலை என்பன அடங்கிய ஒரு திட்டத்தினை மிகவும் நேர்த்தியாக அமைத்துவந்தார்.

தனது பணிகளைப் பக்சிரத்தையுடன் தவறாது ஆற்றுவது அன்னாரின் சிறப்பான பண்பாகும்.

### பொலனறுவை சிவதொண்டர்களுடன் சந்திப்பு

பொலனறுவை கறப்பளை கிராமத்திலமைந்துள்ள இந்து இளம்பிறை அறப்பணி மன்றம், காமதேனு அறப்பணிமன்றம், சமன்பிட்டி இந்து மகளிர் மன்றம் ஆகிய வற்றின் சிவதொண்டர் அணியுடன் சந்திப்பொன்று இடம்பெற்றது. இம் மன்றங்களின் அதிபர் சைவவித்தகர் திரு.பாலன் சுதாகரன் மற்றும் மாமன்ற ஆலோசகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள், திரு.எஸ். சிவஞானம், வைத்தியகலாநிதி ஆ. சிவசோதி, மாமன்ற திட்ட ஆலவலர் திரு.மு.பிரணவன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மிகவும் வறிய பிரதேசமான கறப்பளை கிராமத்தில் சிறார்கள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள் தொடர்பிலும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால விரிவாக்கல் பற்றியும் மாமன்றம் அப்பணிகளுக்கு என்ன வகையில் துணைநிற்க முடியும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.


### மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களுக்கான மாமன்ற பிரதிநிதிகளின் விஜயம் 23, 24 – 09–2018

சிவநெறி அறப்பணிமன்றம் விடுத்த வேண்டுகோளின்படி அகில இலங்கை இந்து மாமன்ற பிரதித்தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா, ஆலோசகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள், திட்ட அலுவலர் பிரணவன் ஆகியோருடன் சிவநெறி அறப்பணிமன்ற தலைவர் சைவவித்தகர் யோ. கஜேந்திரா, செயலாளர் சரவணபவன், சைவவித்தகர் சசிகரன், திரு.நிதான்சன் ஆகியோருடன் வைத்தியர் சிவசோதியும் உள்ளடங்கிய முக்கிய உறுப்பினர்கள் பங்குபற்றினர்.

## இந்தச் சுடரில்...


- பஞ்ச புராணம் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- திருவெம்பாவையும் திருப்பாவையும் 4
- திரு ஆதிரை நாயகன் 6
- திருவாசகம் கூறும் செய்தி 8
- ஆண்-பெண் சமத்துவம் உணர்த்தும் கேதாரகௌரி விரதம் 9
- விநாயகர் சஷ்டி விரதம் 11
- தமிழ் இலக்கியத்தில் கார்த்திகை தீபம்! 13
- சூரபத்மன் வதம்செய்யப்பட்டானா? ஆட்கொள்ளப்பட்டானா? 14
- கிளிநொச்சியில் யோகசுவாமிகளின் திருவுருவச்சிலை 16
- தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் 17
- தைப்பூசம் 19
- "நாவலர்" ஈழத்தமிழர்களின் அடையாளம் 21
- திருவாளர் பொன். இராமநாதன் 25
- கழுதை வாங்கித் துணிதோய்த்த பரமார்த்தகுருவும் சீடர்களும் 26
- தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களின் பேச்சாளுமை 27
- மனம் அமைதியாக இருக்க வேண்டுமா? 28
- வேதத்தை மொ(மு)ழி பெயர்த்த மேல்நாட்டு அறிஞர்கள்..??? 30
- மனிதனே அழித்துவரும் மனிதனின் கற்பகவிருட்சம்! "நெல்லி" 32
- மாமன்றச் செய்திகள் 34


சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை;
அவனொடு ஒப்பார் இங்கும் யாவரும் இல்லை;
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.



அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே

போற்றிசைத்தும் புகழ்ந்தும் புனிதன் அடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக்கே செல்வம்
ஆற்றியது என்று மயலுற்ற சிந்தையை
மாற்றி நின்றார் வழி மன்னி நின்றானே.

நாடும் நகரமும் நல்திருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.

## கலை நிகழ்வுகளை வழங்கிய நுண்கலைக்கோயில் மாணவர்கள் மற்றும் சக்தி இல்ல மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுகின்றது



## 03-10-2018ல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற, அமரர் கந்தையா நிலகண்டன் நினைவு நிகழ்வு



திருமதி சசிதேவி நீலகண்டன் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்ய, திரு. நீலகண்டன் பிரணவன், வைத்தியகலாநிதி ஏ.சிவசோதி, திரு.யோ.கஜேந்திரா ஆகியோர் அஞ்சலிச்சுடர் ஏற்றுகின்றனர்.

கலைப்பீட மாணவியரின் இறைவணக்கம்



கலை, கலாசார பீடாதிபதி திரு.ரவி அவர்கள் அமரரின படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செய்கிறார்




கலை, கலாசார பீடாதிபதி திரு.ரவி, இந்துநாகரிக துறைத் தலைவர் திருமதி சாந்தி கேசவன் மற்றும் திரு.வெ.சசிகரன் ஆகியோர் நினைவுரை ஆற்றுகின்றனர்.



அமரர் திரு. கந்தையா நீலகண்டன் நினைவு புலமைப்பரிசில் நிதியை அமரரின் குடும்பத்தினர் பீடாதிபதியிடம் கையளித்ததுடன், அமரரின் நினைவாக திருமதி சசிதேவி நீலகண்டன், திரு. நீலகண்டன் பிரணவன், சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் மற்றும் திரு.எஸ்.சிவஞானம் ஆகியோர் மரங்களையும் நாட்டினர்.

## 11-08-2018 அன்று, மாமன்றத்தினால், கீரிமலை சிவபூமி மடத்தில் நடத்தப்பட்ட நீத்தார் நினைவு நிகழ்வு






நிகழ்வின் பிரதம அருளாளர். நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கலாநிதி ஆறு.திருமுருகன், பிரதம விருந்தினர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திரு.சி.தனபாலா ஆகியோர் நினைவுச்சுடர் ஏற்றிவைத்து நினைவு உரைகளை நிகழ்த்தினர்.

**மன்னார் சித்திவிநாயகர் வித்தியாலயம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம், மத்திய கொழும்பு இந்து கல்லூரி, அவிசாவளை புவக்பிட்டிய தமிழ் மகா வித்தியாலயம், கொள்ளுப்பிட்டி மெதடிஸ்ற் அரசினர் தமிழ்ப் பாடசாலை ஆகியவற்றில் மாமன்ற கல்விக்குழுவால் ஜுலை மாதத்தில் நடத்தப்பட்ட கல்விக்கருத்தரங்குகள்**









## ஆலையடிவேம்பு இந்து மன்றத்தினால், 2018ம் ஆண்டுக்கான, கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கான அன்னதானம் வழங்கப்பட்டது.



## விக்கிரகங்கள் அன்பளிப்பு



14-09-2018 அன்று, மட்டக்களப்பு, சித்தாண்டி, இலுக்குப்பொத்தானை வேலொடு மலைமுருகன் ஆலயத்திற்கு 04 விக்கிரகங்கள் வழங்கப்பட்டன.



19-10-2018 அன்று, தெரணியகல ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலுக்கு பாலமுருகன் விக்கிரகம் வழங்கப்பட்டது.

இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் பிறைவேட் லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.